கல்கி

KALKI 8-2-1976 ▫ 75 காசு




நடத்திய பரிசோதனைகள் நிரூபிக்கின்றன...
பிஸ்கட் என்றால் இதுதான் — சுவைக்கும்
வைட்டமின்களுக்கும்
போஷாக்குக்கும் இதுதான்:
பிரிட்டானியா
க்ளுக்கோஸ்-D
BRITANNIA
Glucose
BRITANNIA
Glucose
Glucose-D
BRITANNIA
Glucose-D
பிரிட்டானியா க்ளுக்கோஸ்-Dயுடன் மற்றொரு
முன்னணி ஈக க்ளுக்கோஸ் பிஸ்கட்டை ஒப்பிட்டுப்
பார்த்த பரிசோதனைகளில் தெள்ளத் தெளிவாக
நிரூபிக்கப்பட்டுவிட்டது: வைட்டமின் சத்திலும்,
மொத்த போஷாக்குத் தன்மையிலும் உயர்ந்தது
க்ளுக்கோஸ்-D பிஸ்கட் தான். இனிமைக்கும்,
சுவைக்கும், மொறுமொறுப்புக்கும், அதிகமாக
விரும்பப்படுகிறது. சக்தி வேண்டுமா—
க்ளுக்கோஸையும் விட 20 சத விகிதம்
அதிக சக்தியைத் தருகிறது
க்ளுக்கோஸ்-D. பிரிட்டானியா
க்ளுக்கோஸ்-D பிஸ்கட்—
தித்திக்கும் சக்தி!
இப்போது
கண்கவரும்
புதிய
பேக்கிலே
எனவேதான், வேறெந்த க்ளுக்கோஸ்
பிஸ்கட்டையும் விட அதிக மக்களைக்
கவர்ந்துள்ளது பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D
பிரிட்டானியா
பிரிட்டானியா பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை
லின்டாஸ்-BBC-GL-19-140 TM


மஞ்சள் குங்குமம் துலங்க
மாவிலைத் தோரணம் ஆட
மணப்பந்தலிலே நின்று
மாயப் புன்னகை சிந்தும்
அழகே !
உனக்கு ஒரு பெயர் பெண்
மறு பெயர் சாரதா'ஸ்
திருமணப்
பட்டுப்
புடவைகளுக்கு
சிறந்த இடம்
சாரதா'ஸ்
தன் பில்டிங்ஸ்.
மவுண்ட் ரோடு.
சென்னை-600002
போன் : 87177
N. S. B. ரோடு.
திருச்சி-620002
போன் : 7077



கல்கி

ராக்ஷஸ,
தை 25
பிப்ரவரி 8,
1976

[இப் பகுதியில் பிரசுரிக்கப் புதுமையான கருத்துக் களைக் கொண்ட புதுக் கவிதைகளை வரவேற் கிறோம். — ஆசிரியர்]



தேடினேன் சொர்க்கம்



தேடிவரும் மலரிடம் பாடிவரும் பொன்வண்டு
தேனுண்ணும் வேளையிலே தேடியது சொர்க்கம்
—அம்மலரும்

தேனுண்ணும் வண்டிற்குத் தேவையினைத் தந்திட்டு
தென்றலது தாலாட்டில் தேடியது சொர்க்கம்
— அக்காற்றும்

தடம்பார்த்து தான்நடக்கும் வழியினில் கண்ட
நதியினது குளிர்ச்சியினில் தேடியது சொர்க்கம்
— அந்நதியும்

வற்றாத நதியாயினும் வளம்மிக்கக் கடலில்
வாழ்நாளில் குளிக்கையிலே தேடியது சொர்க்கம்
— அந்தக்

கடற்கரையின் ஓரத்தில் காற்றடிக்கும் நேரத்தில்
கவிஎழுதும் வேகத்தில் தேடினேன் சொர்க்கம்

— இரா. நடராசன்

உங்கள் தேவைக்கேற்ற
ஒரு முதலீடு திட்டம்!



இன்று ரூ 603.00 செலுத்தி. ரூ 1000/- பெறுங்கள் 61 மாதங்கள் கழித்து

இன்று ரூ 60.30 செலுத்தி. ரூ 100/- பெறுங்கள் 61 மாதங்கள் கழித்து

லக்ஷ்மி விலாஸ் பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்	நிர்வாக அலுவலகம்
693, ஜவஹர் கடைத் தெரு	1, பைகிராஃப்ட்ஸ் கார்டன் தெரு
கரூர்-639 001	சென்னை-600 006

D. வர்த்தமானன்
சேர்மன்

LVB...மக்களுக்கான பேங்க்

KRIPAHA-LVB-122

சஞ்சய்

இந்திய அரசியலில் திடீர் தலைவர் உதயமாகியிருக்கிறார். சஞ்சய் காந்தி.

கோமான் மட்டுமல்ல, குடிசை வாழ்வோன்கூட ஜனநாயகத்தில் மக்கள் ஆதரவு பெற்றால் பிரதமராக வரலாம் என்ற நிலையில் சஞ்சய் இந்த நாட்டின் அடுத்த பிரதமரானாலும் யாரும் ஆட்சேபிக்க முடியாது. அதிலும் தகுதியுள்ளவர் என்று நிரூபித்துக் கொண்டு அவர் பிரதமரானால், 'பிரதமர் பதவி என்ன பரம்பரைச் சொத்தா?' என்பது அசட்டுக் கேள்வியாகிவிடும். எனவேதான் இன்று சஞ்சய் பலூனில் பறந்தாலும் பாதசாரியாகச் சென்றாலும் மக்கள் உன்னிப்பாய்க் கவனிக்கிறார்கள்.

நெருக்கடி நிலைப் பிரகடனத்தை யொட்டி நன்மைகள் பல நாட்டுக்கு ஏற்பட வேண்டும் என்பதில் பிரதமர் கருத்தாக இருக்கிறார். மக்கள் ஆசைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும், வீட்டு நலனைவிட நாட்டு நலனையே முக்கியமாகக் கருதி உழைக்க வேண்டும் என்பதை வலியுறுத்த சஞ்சய் காந்தியைப் பிரதமர் இன்று பயன்படுத்தி வருகிறார் என எண்ணலாம். அதிலும் இளைஞர்களை ஆக்க ரீதியான காரியங்களில் ஈடுபடுத்த சஞ்சய்யின் பெயரும் பிராபல்யமும் பிரபையும் பாரம்பரியமும் பயன்படும் என்று கருதினால் தப்புக் கணக்காகி விடாது.

அஸ்ஸாமில் பேசிய சஞ்சய் அர்த்தமுள்ள வார்த்தைகளைக் கூறியுள்ளார். அங்குள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தேவைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டுமேயன்றி ஊதிய உயர்வைக் கோரக் கூடாது என்று சொன்னார். ஓரிடத்தில் ஒரு சாரார் அதிக ஊதியம் கோரினால் சங்கிலித் தொடராகத் தேசத்தின் வேறு பல பாகங்களிலும் பல விளைவுகள் ஏற்பட்டு மொத்தத்தில் நாட்டின் பொருளாதாரம் பாதிப்புக்கு உள்ளாகிறது என்று சுட்டிக் காட்டினார்.

ரொம்ப சரி; ஏற்கிறோம். ஆனால் தொழிலாளர்கள் மட்டும் போனஸைத் துறந்தும் ஊதிய உயர்வைப் புறக்கணித்தும் தியாகங்கள் புரிந்தால் போதாது. முதலாளிகளும் சில தியாகங்களைப் புரிய வேண்டும். அதோடு காங்கிரஸ் அரசும் கட்சியும் தியாகங்களுக்குத் தயாராக வேண்டும்.

ஜப்பானிய முதலாளிகளைப் பற்றி 'ஹிந்து' பத்திரிகையின் டோக்கியோ பிரதிநிதி எழுதியிருப்பது நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்துகிறது. மாபெரும் ஆலைகளின் முதலாளிகளும் சொந்தக் கார், பெரிய வீடு என்று ஏதும் வைத்துக் கொள்வதில்லை. சிறிய கார் இருந்தாலும் டிரைவர் கிடையாது. சாமானியர்கள் போல் ஒரு 'ஃப்ளாட்'டில் குடியிருக்கும் அவர்கள் வேலைக்காரர்களை வைத்துக் கொள்வதில்லை. காரியாலயத்துக்கு ரயிலிலேயே போய்விடுவார்கள். மதிய உணவுக்குப் பெரிய ஹோட்டல்களை நாடமாட்டார்கள். தொழிலகக் காண்டீனே போதும். சம்பளத்தைத் தங்களுக்குத் தாங்களே குறைந்த பட்சமாக நிர்ணயித்துக்கொள்கிறார்கள்.

இந்த எளிய வாழ்க்கை சங்கிலித் தொடராக நற்பயன்களை விளைவிக்கிறது. மானேஜர்கள் முதலாளிகளைப் பின்பற்றி எளிமையை ஏற்றுக் கொள்கிறார்கள். அதிகச் சம்பளம் தேவைப்படுவதில்லை; எனவே கேட்பதுமில்லை. தொழிலாளர்கள் மானேஜர்களைப் பற்றி ஆசைகளைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். நிகர விளைவு, தொழிலகத்தின் வருவாய் அனாவசிய அல்லது ஆடம்பரச் செலவினங்களில் கரையாமல் விஸ்தரிப்புத் திட்டங்களில் அல்லது புதிய முயற்சிகளில் முதலீடாகிறது.

இதிலெல்லாம் புதுமை ஒன்றுமில்லை. காந்திஜி கற்றுத் தந்தது தான். நம்மவர் இதனைப் புறக்கணித்துவிட ஜப்பானியர் பின்பற்றிப் பயனடைகிறார்கள் என்பதுதான் வியப்பு.

முதலாளிகளிடம் உருவாக வேண்டிய தியாக உணர்ச்சி போலவே காங்கிரஸ் ஆட்சியிலும் கட்சியிலும் ஏற்படவேண்

கல்கி
மலர் 35
இதழ் 28

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

டும். நாட்டு நலனையே பிரதானமாகக் கருதி சோஷலிஸக் கொள்கையைத் தியாகம் புரிந்துவிட வேண்டும்.

புதிதாகப் பட்டத்துக்கு வந்த ஓர் அரசன், ''நூறு பாலங்களைக் கட்டு'' என்று உத்தர விட்டானாம். அப்பணியை நிறைவேற்றிவிட்டு வந்த மந்திரி, ''அடுத்த உத்தரவு?'' என்று கேட்டு நின்றானாம். ''இன்னும் நூறு பாலங் களைக் கட்டு'' என்று ஆணை பிறந்தது. ''அத்தனை ஆறுகள் நம் நாட்டில் இல்லையே!'' என்று தலையைச் சொறிந்தார் மந்திரி. ''பாலங்களை முதலில் கட்டு. ஆறு களை அப்புறம் வெட்டிக் கொள்ளலாம்'' என்றான் மன்னன்!

'சித்ரா' நாராயணசாமி அவர்கள் கூறிய இந்தக் கதையைப் போலவே பல காரியங்கள் நம் நாட்டில் நடந்து விட்டன. அதனால் தான் இத்தனை பொருளாதாரக் கஷ்ட நஷ்டங்கள். இதிலிருந்து மீள வழி இல்லாமல் போகவில்லை. வழிகாட்டக் கூடிய அறிஞர் களுக்கும் குறைவில்லை. எஃப். ஐ. ஸி. ஐ. அறிக்கை ஓர் எடுத்துக்காட்டு.

ஆட்சித் தலைவர்கள் பொருளாதார நலனை மட்டும் கருத்தில் கொண்டு பொருளற்ற கொள்கைகளைத் தியாகம் புரியத் தயாரானால் தரித்திரம் ஓட்டம் பிடிக்கும்; சுபிட்சம் கை கட்டிச் சேவகம் புரியும்.

நாம் சொன்னால் போதாது; சஞ்சய் சொல்லட்டும்!

ஜோக் ஜோக்




■ எப்போதும் போனில் ஒரு மணி நேரத்துக்குக் குறையாமல் பேசும் பழக்கமுடைய தன் டீன் ஏஜ் மகள் அன்று 20 நிமிடத்தில் பேச்சை முடித்துக் கொண்டதில் மகிழ்ந்த தந்தை அவளைப் பாராட்டினார். ''தேவலையேம்மா, உன் சிநேகிதியிடம் சீக்கிரம் பேச்சை முடித்துக் கொண்டுவிட்டாயே?'' என்றார்.

''அது ஃப்ரெண்டு இல்லை அப்பா, ராங் நம்பர்'' என்றாள் மகள்.



■ தபால் ஆபீஸில், எழுதிக் கொண்டிருந்த இளைஞனை அணுகி ஒரு முதியவர், ''இந்தக் கார்டில் எனக்கு அட்ரஸ் எழுதித் தர முடியுமா?'' என்று கேட்டார். அவனும் எழுதிக் கொடுத்தான். ''கொஞ்சம் முன் பக்கம், நான் சொல்லும் விஷயத்தையும் எழுதி விடேன்'' என்று பெரியவர் கேட்க, இணங்கினான் இளைஞன். ''வேறு என்ன எழுத வேண்டும்?'' என்று கேட்டான். கிழவர் சொன்னார்: ''பின் குறிப்பில் இதை எழுது: மோசமான கையெழுத்துக்கு மன்னிக்கவும்!''



■ ''இந்த இஞ்செக்ஷன் அதிகமாக வலி ஏற்படுத்தாது'' என்றபடி சிரிஞ்சுடன் நோயாளியை நெருங்கினார் டாக்டர்.

அவர் அருகில் வந்ததுமே வீல் என்று கத்தினான் நோயாளி. ''என்ன விஷயம்? நான் இன்னும் இஞ்செக்ட் பண்ணவே இல்லையே?'' என்று ஆச்சரியத்துடன் வினவினார் டாக்டர்.

''ஆனால் டாக்டர், நீங்கள் என் காலை உங்கள் பூட்ஸ் காலால் மிதித்துக் கொண்டிருக்கிறீர்கள்!'' என்று அலறினான் அவன்.

— பம்பாய், ஹிமாலயா ட்ரக் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் வெளியிட்டுள்ள 'லாஃப்டர் த பெஸ்ட் மெடிஸின்' என்ற புத்தகத்திலிருந்து அனுப்பியவர்:

நந்தினி

உங்கள் அன்னையின் அறிவுரையை நம்புங்கள்



உங்கள் குழந்தை
அழும் போது
உங்கள் பாட்டி
சொன்னதைப் போலவே
உங்களையும்
உபயோகிக்கச் சொல்வார்
உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டரை

100 ஆண்டுகளுக்கும் மேலாக
தாய்க்குலம் நம்புவது



OPCM 1-75 TAM

வையம் பரவிய வைதிக மதம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள் (6)

வாரம் என்று ஒன்று இருக்கிறதே, இது எந்த கிரக சஞ்சாரத்தையும் குறிக்கவில்லை; மாசம், வருஷம் எதை வாரத்தால் வகுத்தாலும் கணக்காக ஈவு வராமல் துண்டு விழுகிறது. இப்படி எந்தக் கணக்கிலும் சேராமல் ஏழு நாள் கொண்ட வாரம் நமக்கும் இருக்கிறது: மேல் நாட்டிலும் இருக்கிறது. நாம் சூரியனுடைய நாள் என்கிற ஞாயிற்றுக் கிழமையை அவனும் SUN-DAY என்கிறான். நாம் சந்திரனுடையது என்கிற திங்கட்கிழமையை Mo(o)n day என்கிறான். ஆதியில் ஒரே கலாசாரம் எல்லா இடத்திலும் இருந்ததற்கு அடையாளமே இது.

இன்னொன்று. ஒரு நாழிகை என்பது 24 நிமிஷம். இரண்டரை நாழிகைக்கு, அதாவது அறுபது நிமிஷங்களுக்கு ஹோரா என்று பெயர். தமிழில்கூட சுபகாரியம் செய்வதானால் "நல்லோரையில் நடத்துவதாக"ச் சொல்கிறோமே அந்த ஓரை ஹோராதான். ஹோரா Hour என்றாகி யிருக்கிறது.

இப்படி நிறையத் திருஷ்டாந்தங்கள் சொல்லிக் கொண்டே போகலாம்.

அசோகன் காலத்திலிருந்து பௌத்தத்தைப் பிரசாரம் செய்வதற்கு நானா தேசங்களுக்கும் தூதர்களை அனுப்பிய பிற்பாடு தான் அங்கெல்லாம் பாரதப் பண்பாட்டு அம்சங்கள் புகுந்ததாகப் பலர் தப்பாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் (காலஞ்சென்ற) டாக்டர் ரகுவீரா போன்றவர்கள், சைனா, மஞ்சூரியா, மங்கோலியா முதலிய தேசங்களை நன்றாகச் சுற்றிப் பார்த்து விட்டு, நிரம்ப ஆராய்ச்சிகள் செய்து சொல்வதிலிருந்து அங்கெல்லாம் பௌத்தத்தை விட வைதிக அம்சங்களே இன்னும் பழைமையாக, ஆழமாக வேர் பிடித்திருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவிலேயே ஸம்ஸ்கிருதத்தின் ஆதிக்கம் கூடாது, பொதுஜனங்களின் பிராகிருத பாஷைகளான பாலி போன்றவற்றில்தான் சமய நூல்கள் எழுத வேண்டும் என்று ஆரம்பித்தவர்கள் பௌத்தர்கள் தான். ஆனால் மஞ்சூரியாவின் பாஷையான மஞ்சுவைப் பார்த்தால் அதில் ஏகப்பட்ட சம்ஸ்கிருத வார்த்தைகள் இருக்கின்றனவாம். இம்மாதிரி அந்த பாஷையில் தாமே மூவாயிரம் ஸம்ஸ்கிருத வார்த்தைகள் எடுத்ததாக ரகுவீரா சொன்னார். கங்கை, கங்கை என்று பரவசப்பட்டுக் கொண்டாடுவது ஹிந்து மதம் என்று சொல்லப்படும் வைதிக மதத்துக்கே உரியது. மத்திய ஆசியாவில், குறிப்பாக மங்கோலியாவில் இருக்கிற சாதாரண ஜனங்கள்கூட "கங்கை" என்று சொன்னாலே நமஸ்காரம்பண்ணுகிறார்களாம். இவர்களுடைய மூதாதைகளின் காலத்திலிருந்து வந்திருக்கிற வழக்கம் இவர்கள் வரைக்கும் இப்படி உணர்ச்சி பரவசப்படுத்துவதாக இருக்கிறது.

வெளி மங்கோலியா (Outer Mongolia) என்ற எட்டாக்கைத் தேசத்தில் ஒரு தொண்டு கிழவர், இந்தியாவிலிருந்து ஒருத்தர் வந்திருக்கிறார் என்று கேட்ட மாத்திரத்தில் ரகுவீராவிடம் ஓடி வந்து விழுந்து நமஸ்காரம் பண்ணி, "ஜம்பூத்வீபத்திலிருந்து யார் வந்தாலும் அவர்கள் என் குரு" என்றாராம்! உலகத்திலுள்ள ஏழு த்வீபங்களில் (தீவுகளில்) பாரத தேசம் "ஜம்பூத்வீபம்" என்பதில் இருப்பதாகவே நம் சாஸ்திரங்களில் பெயர் சொல்லியிருக்கிறது. சங்கல்பம் செய்துகொள்ளும்போது இந்தப் பேரைத்தான் சொல்ல வேண்டும். இப்போது நம்மிலேயே நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்குத் தெரியாத அந்தப் பெயரைச் சொல்லி ஔடர் – மங்கோலியாக் கிழவர் நமஸ்காரம் பண்ணியிருக்கிறார்.

வால்மீகி ராமாயணத்தில் "யவ" த்வீபம் என்று சொல்லியிருப்பது "ஜாவா"தான் (ய என்பது ஜ வாக மாறும் என்று முன்பே சொன்னேன் அல்லவா?) என்றும், ராமாயணத்தில் அதை "ஸப்த ராஜ்ய உபசோபிதம்" என்று சொல்லி யிருக்கிற மாதிரியே இப்போதும் அங்கே ஏழு ராஜ்யங்கள் (Provinces) இருப்பதாகவும் ஓர் ஆராய்ச்சியாளர் சொன்னார். "யோக்யகர்த்தா" என்ற பேர் திரிந்துதான் "ஜோக்ஜாகர்த்தா" என்றாகி யிருக்கிறது.

இதையெல்லாம் எதற்குச் சொல்கிறேன் என்றால் நம் மதம்தான் உசத்தி என்பதற்காக இல்லை. ஈசுவர சங்கல்பத்தால்தான் மற்ற தேசங்களில் வெவ்வேறு மதங்கள் ஏற்பட வேண்டும் என்றும், நம் தேசத்தில் மட்டும் வைதிக அநுஷ்டானம் இருக்க வேண்டும் என்றும் ஆகியிருக்கிறது. மற்ற மதங்களோடு நம் மதத்தை ஒப்பிட்டு அவர்களை "எங்கள் மதத்துக்கு வா" என்று நாம் கூப்பிட்டால், இப்படிக் கூப்பிடுவதே நம் சாஸ்திரங்களுக்கு விரோதம். பின் ஏன் இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், வேறு மதங்களில் உள்ளவர்கள்கூட அதில் துளித் துளி ஒட்டிக் கொண்டிருக்கிற வைதிக சமய அம்சங்களைப் பற்றி ரொம்பப் பெருமைப்படும்போது இந்த மதத்திலேயே உள்ள நாம், இது உபயோக மற்றது என்று நினைக்காமல் இதன் பெருமையைப் புரிந்து கொள்ள வேண்டும் – கர்வப் படுவதற்கு அல்ல; அதை அநுஷ்டானம் செய்து பழைய பெருமையைப் புதிதாக்கிக் காட்டுவதற்குத்தான்.

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

புனிதர் வந்தார்: புன்மைகள் மாய்த்தார்

''என்ன கூட்டம்! என்ன கூட்டம்! தேர்க்கூட்டம்! திருவிழாக் கூட்டம்!''

பேட்டைக்குப் பேட்டை மக்கள் கூட்டம் காட்டாற்றுப் பெரு வெள்ளமாகப் பெருகுகிறது: பக்தி வெள்ளமோ கடல் மடை திறந்தாற் போலக் கரை புரண்டு ஓடுகிறது! ஏறக்குறைய ஒரு மாமாங்கத்துக்குப் பின் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் சென்னை மாநகருக்கு வருகை தந்து அருளியுள்ளார்கள்.

ஒரு நாமம், ஒருருவம் இல்லாத தெய்வமே மாந்தர்களாகிய நம்மை உய்விக்க வேண்டி உருத்தரித்து; தட்சிணாமூர்த்தியாகத் தோன்றி வழிகாட்டியது. பிறகு அதுவே ஸ்ரீ சங்கர பகவத்பாதராக அவதரித்து, இன்று நம் கண் முன்னே நடமாடும் தெய்வமாகக் காட்சி தரும் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதியாகப் பரிணமித்து வீற்றிருக்கிறது. கலவையில் மூலவராக அமர்ந்து, உற்சவ மூர்த்தியாக ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதியைப் பாரதமெங்கும் பவனி வரச் செய்து, இப்பொழுது சென்னை மாநகருக்கும் அனுப்பி வைத்துள்ளது.

அந்த உற்சவ மூர்த்தியைக் காணத்தான் இந்தத் தேர்த் திருவிழாக் கூட்டம்!

ஹிந்து மதம் தனக்கு எம்மதமும் சம்மதம் என்பதோடு, எம்மதத்துக்கும் அது சம்மதமானது என்ற விரிந்த பொருளையும் ஏற்றிருக்கிறது. ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகளின் விஜயத்தில் நாம் இக் குறிப்பைக் காண்கிறோம். எல்லா மதத்தினரும், எல்லாச் சமயத்தினரும் சாதி மத வேறுபாடின்றி அவரைத் தரிசித்து அருள் பெற்று ஆனந்தம் அடைகிறார்கள்.

ஸ்ரீ சுவாமிகளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. ஓய்வுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, பக்தர்களின் மகிழ்ச்சியில் மகிழ்ச்சி காண்பதிலேயே தம் நேரம் முழுவதையும் செலவிடுகிறார்கள். ''சென்ற முறை வந்திருந்தபோது சென்னையின் பல பகுதிகளுக்குப் போக முடியாமற் போய்விட்டது. அதற்குப் பல காரணங்கள். ஆனால் இந்தத் தடவை அந்தப் பகுதிகளுக்கெல்லாம் போனோம். புதிதாக உருவாகியுள்ள காலனிகளுக்கும் பேட்டைகளுக்கும் போனோம். ஏழை எளிய மக்கள் எங்கள்பால் காட்டும் ஆர்வத்தைக் கண்டபோது மெய் மறந்து போனோம். நிஜமாகவே மக்களின் மனத்தில் பக்தி வெள்ளம் நிறைந்திருக்கிறது!'' என்று கூறிச் சந்தோஷப்பட்டார்கள்.

'''பக்திக்குப் பிறப்பிடம் தென்னாடு' என்பதை வடநாடு ஒப்புக் கொள்கிறது. வடநாட்டுக்கும் வேண்டிய மட்டில் ஏற்றுமதி செய்து தனக்கும் நிறைய வைத்துக்கொண்டிருக்கிறது. இந்த பக்தி ஒரு சீராகப் பெருகி, உள்ளத்தை நனைத்து, மனிதனை நித்தியானந்த நிலைக்கு இட்டுச் செல்ல வல்லது. இதற்கு ஒருசில ஆசார நியமங்கள் வேண்டும். அதுதான் ஒழுக்கம் எனப்படுவது.'' இவ்விதம் செம்மையான வாழ்வுக்கு உதவுபடியான உன்னதக் கருத்துக்களை அவ்வப்போது அருமையான உபந்யாசங்கள் மூலம் அருளி வருகிறார்கள்.

தொழிற்பேட்டைகளுக்கும் கல்விக் கூடங்களுக்கும் விஜயம் செய்யும்போது அங்கு இயங்கும் இயந்திரங்களைச் சுட்டிக் காட்டி, அவை இயங்கும் முறையை எடுத்துக் கூறி, வாழ்க்கையில் ஒழுக்கத்துக்கு ஏற்றம் தருமாறு கூறுகிறார்கள். பக்தியும் ஒழுக்கமும் ஒன்றுக்கொன்று அனுசரணையானவை; ஒன்றுக்கொன்று பலம் சேர்ப்பவை என்பதை வலியுறுத்தி வருகிறார்கள்.


ஆசாரியர்களை வரவேற்கும் விஷயத்தில் மத மாற்சர்யங்கள் சிறிதும் எட்டிப் பார்ப்பதில்லை என்பதோடு பிளவுபட்ட மனங்களும் ஒன்றுபட்டு இயங்குகின்றன என்பது கண்கூடு. இது நீடிக்க வேண்டும் என்பதற்காக, மதம் என்பது இணைக்கும் சக்தியே ஒழியப் பிளக்கும் சக்தியல்ல என்பதைச் சுட்டிக் காட்டி, இணைந்து கூட்டாகச் செயல்பட்டு ஒழுக்கத்தைப் பேணி வளர்க்க வேண்டும் என்று மக்களைக் கேட்டுக் கொள்கிறார்கள்.

'தமிழ், சமஸ்கிருதம் இரண்டுமே இரண்டு கண்கள் போல. இரண்டுமே ஆதி சிவன் பெற்றுவிட்ட மொழிகள். ஒன்றுக் கொன்று உறுதுணையாக வளர்ந்து உலகத்தையே அதிசயத்தில் ஆழ்த்தியுள்ள மொழிகள். இவை இரண்டும் உள்ளொளி வழங்கக் கூடிய மொழிகள்' என்று திருஷ்டாந்தங்களுடன் எடுத்துக் காட்டி வருகிறார்கள்.

இன்று வரதட்சிணை என்பது கடுமையாகிக் கொடுமை என்னும் பெயரைச் சூட்டிக் கொண்டு விட்டது. இந்தக் கொடுமையை ஒழிக்க ஆள்வோரும், அரசியல்வாதிகளும் சட்டத்தின் துணையை நாடுகிறார்கள். ஆனால் ஆசாரியர்கள் அணுகும் முறை அதற்கு நேர் மாறானது. தன்னிச்சையாக மக்களின் மனத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது.

பையனைப் பெற்றவர் ஒருவர் ஆசாரியர்களைத் தரிசனம் செய்யப் போயிருந்த பொழுது, ''இன்னார் பெண்ணை உங்கள் பையனுக்குக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்'' என்று கூறினார்கள். அவர்கள் சம்மதம் தெரிவித்த பின், பெண் வீட்டாரை அனுப்பி 'லௌகிகம்' பேசிக் கொள்ளச் சொன்னார்கள். அதாவது வரதட்சிணை பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வரச் சொன்னார்கள். அவர்கள், 'பெரியவர்கள் சொன்ன பின் வரதட்சிணைப் பேச்சுக்கே இடமில்லை' என்று சொல்லிவிட்டார்கள்.

இதுபோல் ஒன்றல்ல, இரண்டல்ல; நான்கைந்து கல்யாணங்கள் இதுவரை நடந்துள்



னை. பின்னை வீட்டுக்காரர்களாகவே மன மூவந்து வரதட்சிணையை ஏற்க மறுக்கும் மனப்பாங்கைப் பெற வேண்டும் என்பதற்காக ஸ்ரீ குமாரைச் செயலாளராக்கி வரதட்சிணை மறுப்போர் சங்கம் என ஒன்று தொடங்குமாறு ஆணையிட்டுள்ளார்.

வருகிற மார்ச்சு மாதம் முதல் வாரத்தில் அனைத்துலக ஹிந்துக்கள் கூட்டம் ஒன்று சென்னையில் நடைபெற விருக்கிறது. இதனையொட்டி பிப்ரவரி மாதம் 29ந் தேதியன்று ஹிந்து மதங்களின் பெருமைகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் இதிகாச புராணக் காட்சிகள் தேரில் பவனி வர இருக்கின்றன.

''அனைத்துலக ஹிந்துக்கள் கூட்டத்தில்; வேறு மதத்தினரும் பங்கு பெறுவார்களோ?''

''அப்படிப் பங்கு பெறுவதாயிருந்தால் இது பல்வேறு மதங்களைக் குறித்த பெரிய மகாநாடாகி விடும். ஆனால் வெளி நாடுகளில் சென்று வாழும் நமது ஹிந்துக்கள் ஒன்றுகூடி நமது கலாசாரங்களை அங்கு அநுஷ்டித்து வர வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இக்கூட்டம் நடைபெறுகிறது. எத்தனையோ பிற மதத்ினர். ஹிந்து மதத்தின்பால் ஈடுபாடு காட்டுகிறார்கள் என்றாலும் மதமாற்றம் நமது நோக்கமல்ல. பிற-மதத்தினர் நம் மதத்தினிடம் காட்டும் ஈடுபாட்டுக்காக அவர்களைப் பாராட்டுவோம். அவர்களோடு நட்புரிமை பூண்டு அவர்கள் மதத்தையும் நாம் புரிந்து கொள்ள முயல்வோம். அவரவர் மதத்தைச் சிறப்பாக அநுஷ்டித்த வண்ணமே அவர்கள் உய்ய வேண்டுவோம்! மனிதன் கடைத்தேற ஒரு கருத்தைக் கொள்ள வேண்டும். ஒரே நம்பிக்கையாக இருக்க வேண்டும். அந்தக் கருத்திலும் நம்பிக்கையிலும் நிலையாக நின்றால், சுவாதி நீரைத் தவிர வேறு நீரைப் பருகாத சாதகப் புள்ளென நாம் இன்பம் பெற முடியும். எளிய வாழ்வு; ஏற்றம் தரு நிலையே நம் குறிக்கோள்!''

இதுவே ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் உலகுக்கு அளிக்கும் அறிவுரை; அறவுரை.

— ரா. வீ.

புகைப்படம் : உத்ரா

காதல் பெரிய விஷயம். காதலிப்பதோ அதை விடப் பெரிய விஷயம். இந்தப் பெரிய விஷயத்தைச் சின்ன விஷயம் (சோடிஸீ பாத்) என்று கூறிக் கலைத் திறன் மிக்க படமாகத் தயாரித்திருக்கிறார் பி.ஆர். சோப்ரா.

கதாநாயகன் அருண் கதாநாயகி பிரபாவைக் கண்டதுமே காதல் கொள்கிறான். ஆனால் அந்தக் காதலை வெளியிட அவன் படும் பாடு...! திரைக்கதையைக் கலை நுணுக்கத்தோடும் கற்பனைச் செறிவோடும் வெகு அழகாக யதார்த்தம் இழையோடச் சித்திரித்திருக்கிறார்களே, அதுவும் எங்குமே துளியும் விரசம் தட்டாமல் படம் பிடித்திருக்கிறார்களே. அதைச் சின்ன விஷயம் என்று கூறி ஒதுக்கிவிட முடியுமா? டைரக்ஷன் புகழை வாசு சட்டர்ஜியும் காமிராவின் கலை நுணுக்கப் பெருமையை மகாஜனும் தட்டிக் கொண்டு போகிறார்கள்.

அமோல் பாலேகரும் வித்யா சின்ஹாவும் அருண்—பிரபா பாத்திரத்தை ஏற்று, அந்தப் பாத்திரங்களுக்கே உயிர் ஊட்டி வாழ வைத்து விடுகிறார்கள்.

ஆனால் இடைவேளைக்குப் பின்...? காதலன் தன் காதல் ஈடேறக் கர்னல் சிங்கின் உதவியை நாடும் பொழுது வாழ்வோடு ஒட்டாத கதையாகி விடுகிறது. ஆயினும் கதையைக் கர்னல் சிங்காக வரும் அசோக் குமார் தம் நடிப்பாற்றலால் பரிமளிக்க வைத்து விடுகிறார். சின்ன விஷயம் என்று சொல்லிப் பட உலகில் ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தி யிருக்கும் இந்தப் படத்தில் இசை அம்சம்தான் அவ்வளவாகச் சோபித்துச் செவியை நிறைக்கவில்லை.

ரா வீ.



ஒரு நாள் எஸ். சீனிவாசய்யங்கார் சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்தார். யாரோ ஒரு பிராம்மணர் யாசகத்துக்கு வந்து நின்றார். ''போடா போ! வேலைசெய்து பிழைக்க வழியில்லை. பிச்சையெடுக்க வந்து விட்டான்! போ போ!'' என்று முணு முணுத்துக்கொண்டே கையால் போகும்படி சாடை காட்டினார்.

வந்த பிராம்மணர் விடாக்கண்டர். அத்துடன் அய்யங்காரின் இயல்பை அறிந்தவர் போலும்! நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. அய்யங்காரும் புஸ்தகத்தைப் படித்துக்கொண்டே யிருந்தார்.

அரை மணியாகியது. அப்போது அந்தப் பக்கமாக அய்யங்காரின் மனைவியார் வந்தார். ''மேஜை டிராயரைத் திறந்து பத்து ரூபாய் கொடுத்துப் போகச் சொல்லு!'' என்றார் அய்யங்கார்.

யாசகருக்குப் பத்து ரூபாய் கொடுத்து விட்டுத் திரும்பி வந்த ஸ்ரீமதி அய்யங்கார், ''முதலிலேயே கொடுத்து அனுப்பியிருந்தால் ஒரு ரூபாயுடன் போயிருக்கும். கொடுக்கக் கூடாது என்று இத்தனை நேரம் நீங்கள் வம்பு பிடித்ததால் பத்து ரூபாய் கொடுக்க வேண்டியதாயிற்று!'' என்றாராம்.

அனைவரும் உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணிய திரு எஸ். சீனிவாச அய்யங்காரின் தயாள குணத்தை அழகாக விளக்கும் இந்தச் சம்பவத்தை அவர் புதல்வியார் ஸ்ரீமதி அம்புஜம்மாள் மாக்ஸ்முல்லர் பவனில் எடுத்துரைத்தார். இதே நிகழ்ச்சியில் ஸ்ரீமதி ராஜேசுவரி நடராஜனும் குமாரி ராதா சீனிவாசனும் தத்தமது தகப்பனார்களான பாஸ்கரத் தொண்டைமான், ஸ்டாலின் சீனிவாசன் ஆகியோர் பற்றிப் பேசினர்.

● ● ●

பம்பாய் சண்முகாநந்த சபா செய்துவரும் நற்பணிகளைப் பாராட்டித் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அதன் தலைவர் திரு ராமானுஜத்தைக் கௌரவித்தது. அதோடு, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி சபா நிர்வாகிகளும், ஸ்ரீ டி. வி. ராமானுஜம் அவர்களுக்குக் ''கலைக் காவலர்'' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். (படம்)

இந்த விழாவில் பேசிய செம்மங்குடி சீனிவாசய்யர் கூறிய ஒரு விஷயம் பலருக்கும் வியப்பளித்தது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, கும்பகோணத்தில் எஸ். ஜி. கிட்டப்பா நடிக்கும் நாடகம் நடந்து கொண்டிருந்ததாம். அந்த நாடகத்துக்குத் தட்சிணாமூர்த்தி பிள்ளை, செம்மங்குடி நாராயணசாமி அய்யர், மகாராஜபுரம் விசுவநாதய்யர் போன்றவர்கள் முன் வரிசையிலும் பின்னால் செம்மங்குடி சீனிவாசய்யர் போன்ற இளவட்டங்களும் உட்கார்ந்திருந்தனர். எஸ். ஜி. கிட்டப்பா அபாரமாகப் பாடினார். எல்லோரும் நாத வெள்ளத்தில் மூழ்கிப் போயிருந்தார்கள். பாடி முடிந்த பிறகு சீனிவாசய்யர் பக்கத்தில் இருந்தவரை ''இதுவரை என்ன ராகம் பாடினார்?'' என்று கேட்டார். அவர் விழித்தார். இதே நிலைமை தான் முன் வரிசையிலிருந்த பெரிய வித்வான்களுக்கும்! ''என்ன ராகமாயிருந்தால் என்ன? எவ்வளவு அற்புதமாகப் பாடினார்! எப்படி நம் இதயங்களை நிறைத்துப் பிரமிக்க வைத்தார் அதுவல்லவா முக்கியம்?'' என்றார் பெரிய வித்வான் ஒருவர்.

மேற்படி நிகழ்ச்சியைப் பன்மொழி அறிஞரும், இலக்கிய சங்கீத நிபுணருமான ஸ்ரீ டி. எஸ். பார்த்தசாரதி அவர்களிடம் கூறியபொழுது, ''செம்மங்குடி சீனிவாசய்யருக்கோ, மகாராஜபுரம் விசுவநாதய்யருக்கோ ராகம் இன்னது என்று தெரியாமற் போனதில் ஆச்சரியமில்லை. ஏனெனில் எஸ். ஜி. கிட்டப்பாவுக்கே தெரியாது. அவருக்குச் சங்கீதம்தான் முக்கியமே தவிர ராகத்தின் பெயர் அல்ல. பல சமயங்களில் பாடிவிட்டுத் திரைக்குப் பின்னே வந்து நாம் இதுவரை பாடியது என்ன ராகம் என்று கேட்டுத் தெரிந்துகொள்வார். இப்படி அவர் பல ராகங்களைப் பாடிப் பிரபலப்படுத்தி யிருக்கிறார்—கடயந்துவராளி, ஸோஹனி ஆகியவை அவர் பிரபலப் படுத்தியவைதான்'' என்றார்.

● ● ●

யாராவது நம் நாட்டு எழுத்தாளர்களைச் சந்தித்து, ''நீங்கள் யார்?'' என்று கேட்டால், ''நான் தமிழ் எழுத்தாளன்'' என்றோ ''தெலுங்கு எழுத்தாளன்'' என்றோ ''பஞ்சாபி எழுத்தாளன்'' என்றோ ''ஹிந்தி எழுத்தாளன்'' என்றோதான் பதில் சொல்லுவார்கள். இவர்களுக்கெல்லாம் மாறுபட்ட வகையில் பதில் சொல்லுவார் திரு உமா சங்கர் ஜோஷி. அவர் சொல்லும் பதில் இதுதான்: ''நான் ஓர் இந்திய எழுத்தாளன், குஜராத்தியில் எழுதுபவன்''

பேராசிரியர் உமா சங்கர் ஜோஷி சென்னை வந்து சில தமிழ், தெலுங்கு, மலையாள எழுத்தாளர்களைச் சந்தித்து உரையாடிய போது, சாகித்திய அகாடெமியின் துணைத் தலைவர் பேராசிரியர் கே. ஆர். சீனிவாசய்யங்கார் அறிமுக உரையில் மேலே குறிப்பிட்ட தகவலைத் தெரியப்படுத்தினார்.






THOMAS'DCM/ 475/Tam

சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம்
12

சந்நிதியில் தமிழ் நிதி



குலசேகர ஆழ்வார் வருகிறார் என்பதை அறிந்து ஞானியார் தம் பேச்சை நிறுத்தினார்.

கூட்டம் முண்டியடித்துக் கொண்டு வெளியே ஓடத் தொடங்கிற்று.

ஸ்ரீரங்கநாதரின் மதில் சுவரில் மேள தாளங்களின் எதிரொலி எழுந்தது.

சோழநாட்டு இளவரசர், குலசேகர ஆழ்வாரை வரவேற்று அவர் கூடவே வந்து கொண்டிருந்தார்.

ஒரு பக்கம் கொள்ளிடமும், மறு பக்கம் காவிரியும் குலசேகர ஆழ்வாருக்கு அணிவிக்கப்பட்ட மற்றொரு நீர் மாலை போல் காட்சி அளித்தன. அந்த அழகை வானில் பறந்த பறவைகள் மட்டுமே உணர முடிந்தது.

ஆசைகளாலே உந்தப்பட்டு, அல்லாடி அவலமுற்று அவதிப்படும் மனித ஜாதியில் ஆசைகளைத் தூக்கி எறியும் ஒருவன் பெருமையைச் சுற்றி வரும் கூட்டம்தானே உணர்த்த முடியும்!

மரியாதைக்குரிய மன்னர், வணக்கத்துக்குரிய துறவியாகிவிட்டதால், அதிகாரத்துக்குத் தலை வணங்கும் மக்கள் ஆன்மீகத்துக்குத் தலை வணங்கி அவர் முன்னே வந்து கொண்டிருந்தார்கள்.

எங்கே தேவைகள் செத்துவிடுகின்றனவோ, அங்கே தெய்வம் கோவில் கட்டிக் கொள்கிறது.

எங்கே பேராசை எடுத்தெறியப் பட்டுவிட்டதோ அங்கே ஆயிரக்கணக்கான தீபங்கள் மின்னவிடுகின்றன.

சேரமானாக இருந்தபோது, இல்லாத ஜெகஜ்ஜோதியான அழகு குலசேகர ஆழ்வாரான பிற்பாடு அவர் முகத்தில் குடிகொண்டிருந்தது.

வழி நெடுகிலும் மக்கள் அவர் காலைத் தொட்டு வணங்கினர். பலர் தங்கள் குழந்தைகளை அவர் காலடியில் போட்டு எடுத்தனர்.

ஒரு முதியவர் மாலை அணிவிக்க வந்தபோது குலசேகர ஆழ்வார் அதைக் கையிலே வாங்கிக் கொண்டு, ''மலர்கள் இறைவனுக்கும், மங்கையருக்கும் மட்டுமே உரியவை. மனிதன் சடலமாகும்போது தான் மலர்கள் அவனை அலங்கரிக்கலாம். மணக் கோலமும் பிணக் கோலமுமே மனிதன் மாலைகள் தாங்கும் கோலங்கள். உங்கள் அன்பு மாலையை நான் ஸ்ரீரங்கனுக்கு அளிக்கிறேன்'' என்றார்.

முதியவர் அவரை வணங்கி வழிவிட்டார்.

கோயில் வாசலுக்கு வந்தபோது பூரண கும்ப மரியாதைகளோடு குலசேகர ஆழ்வார் வரவேற்கப்பட்டார்.

உடனே அவருக்குப் பெரியாழ்வாரின் ஞாபகம் வந்தது.

''நான் ஓர் அரசன் என்பதை இன்னும் இந்த மக்கள் மறக்கவில்லையே! அதனால் தானே ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு இல்லாத மரியாதை எனக்குக் கிடைக்கிறது!'' என்று எண்ணிய போது அந்த மரியாதையை மறுக்கும்படி மனம் தூண்டிற்று.


எனினும், தனக்குப் பிடிக்காத ஒன்றை, பிரியத்தின் காரணமாக மற்றவர்கள் செய்தால், அதை மறுக்கக் கூடாது என்பது நாகரிக சம்பிரதாயமாயிற்றே!

குலசேகர ஆழ்வார் பல்லைக் கடித்துக் கொண்டு அந்த அன்புக் கொடுமையைத் தாங்கிக் கொண்டார்.

எல்லோரும் படியைத் தாண்டிக் கோவிலுக்குள்ளே புகுந்தார்கள்.

அவரோ படியின் மீது ஏறி நின்றார். அதிலும் படியின் மீதிருந்த தாமரைப் பூ வடிவத்தின் மீது நின்றார். எல்லோரும் அவரையே பார்த்தார்கள். அவர் சொன்னார்:

''கோயிலுக்குள் நுழையும்போது படியின் மீது ஏறிச் செல்ல வேண்டும்.





திரும்பிப் போரும்போது படியைத் தாண்டிச் செல்ல வேண்டும். காரணம் என்ன தெரியுமா? நாம் படிப்பதற்காகவே கோயிலுக்குள்ளே போகிறோம். அதனால்தான் இதைப் 'படி' என்று ஆணையிடும் வார்த்தையாகவே வைத்தார்கள். நடுவில் இருக்கும் தாமரை மலர் கல்வியின் சின்னம். திரும்பிப் போகும்போது படித்துக் கொண்டு விட்டோம் என்ற மரியாதையோடு இதைத் தாண்டிச் செல்கிறோம்.''

உடனே எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு அவரோடு படியின் மீது ஏறிச் செல்லத் தொடங்கினார்கள்.

ஆழ்வார் அரங்கனைச் சேவித்துப் பாடத் தொடங்கினார்:

தபால் தலைகள் சேகரித்தல், பட்டாம்பூச்சிகள் சேகரித்தல் என்று எத்தனையோ விதமான பொழுது போக்குகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

பால் நீபர் என்ற ஜெர்மானியரின் பொழுது போக்கு ரேசர் பிளேடுகள் சேகரிப்பது! முப்பது வருடங்களாக அரும்பாடு பட்டு அவர் எழுபத்தாறு நாடுகளிலிருந்து அவரால் சேகரிக்கப்பட்ட ரேசர் பிளேடுகளின் மொத்த எண்ணிக்கை 13,700க்கும் அதிகம். 1904ம் வருடம் நவம்பர் 15ம் தேதி வெளியிடப்பட்ட முதல் பிளேடும், தங்கத்தினால் செய்யப்பட்ட பிளேடும் அவரது சேகரிப்புகளில் அதிக மதிப்பு வாய்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன.

ஆதாரம்: ஜி-டி-ஆர். ரிவ்யூ - தகவல்: ரத்தினம்

•மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக்
கொள்ளும்இவ்
வையந் தன்னொடும் கூடுவதில்லையான்
ஐய னே!அரங் கா!வென்
றழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந் தேனென்றன்
மாலுக்கே !

நூலி னேரிடை யார்திறத் தேநிற்கும்
ஞாலந் தன்னொடும் கூடுவ தில்லையான்
ஆலியா அழையா அரங் கா!வென்று
மாலெ ழுந்தொழிந் தேனென்றன்
மாலுக்கே !

மார னார்வரி வெஞ்சிலைக் காட் செய்யும்
பாரி னாரொடும் கூடுவ தில்லையான்
ஆர மார்வ னரங்க னனந்தன்நல்
நார ணன்நர காந்தகன் பித்தனே !

உண்டி யேயுடை யேயுகந் தோடும்இம்
மண்ட லத்தொடும் கூடுவதில்லையான்
அண்ட வாணன ரங்கன்வன் பேய்முலை
உண்ட வாயன்ற னுன்மத்தன்
காண்மினே !

தீதில் நன்னெறி நிற்கஅல் லாதுசெய்
நீதி யாரொடும் கூடுவ தில்லையான்
ஆதி ஆய னரங்கன் அந் தாமரைப்
பேதை மாமண வாளன்றன் பித்தனே!

எம்ப ரத்தரல் லாரொடும் கூடலன்
உம்பர் வாழ்வையொன் றாகக்கருதிலன்
தம்பி ராமை ரர்க்குஅரங் கநகர்
எம்பி ரானுக் கெழுமையும் பித்தனே!

எத்தி றத்திலும் யாரொடும் கூடும்அச்
சித்தந் தன்னைத் தவிர்த்தனன்
செங்கண்மால்
அத்த னே!அரங் கா!வென்
றழைக்கின்றேன்
பித்த னாயொழிந் தேனெம்பி ரானுக்கே!

பேய ரேயெனக் கியாவரும் யானுமோர்
பேய னேயெவர்க் கும்இது பேசியென்!
ஆய னே!அரங் கா!என் றழைக்கின்றேன்
பேய னாயொழிந் தேனெம் பிரானுக்கே!

அங்கை யாழி யரங்க னடியிணை
தங்கு சிந்தைத் தனிப்பெரும் பித்தனாய்க்
கொங்கர் கோன்குல சேகரன்
சொன்னசொல்
இங்கு வல்லவர்க் கேதமொன் றில்லையே!

விசேஷ தீபாராதனைகள் நடந்தன. கூடி வந்த கூட்டம் முழுவதும் அப்படியே நின்று கொண்டிருந்தது.

ஆழ்வார் திரும்பி அவர்களைப் பார்த்தார். அனைவரும் அப்படியே அமர்ந்தனர்.

'தன்னை அவர்கள் பேசச் சொல்கிறார்கள்' என்பதை அறிந்தார்.

''பக்தகோடிகளே...'' என்று துவங்கினார்.

''இறைவனின் சிருஷ்டியில் மனிதன் மட்டுமே பேசுகிறான். ஆடுமாடுகளும் மரம் செடி கொடிகளும் பேசுவதில்லை. மற்றவற்றைவிட மனிதன் உயர்ந்து நிற்பது மனத்தினாலும், வாயினாலுமே.

''காதல் என்பது காக்கைக்கும் தெரியும். கொஞ்சும் பழக்கம் குருவிக்கும் உண்டு. பசி எடுப்பதைப் பசுவும் அறியும். பயம் என்பது பாம்புக்கும் பிறக்கும்.

''நீரில்லையேல் செடி கொடி வாடும். நீரை உண்டால் மலராக வெளியிடும்.

''எல்லா ஜீவராசிகளுக்கும் எல்லா உணர்வுகளும் உண்டு.

''சிந்தனையும் பேச்சும் மனிதனுக்கு மட்டுமே உண்டு!

''சொல்லிவிட்டுச் சிந்திக்கிறவன் மனிதன் ; சிந்தித்துச் சொல்கிறவன், ஞானி.

'' 'மனஸ்' என்ற சொல்லில் இருந்துதான், 'மனுஷ்யன்' என்ற சொல்லே பிறந்தது. ஆகவே அனைத்துக்கும் மூலம் மனமே.

''நன்மை தீமைகள் அனைத்துக்கும் பொறுப்பு மனமே.

'' வேண்டும் என்று சொல்வதும் மனமே ; வேண்டாம் என்று மறுப்பதும் மனமே !

''அந்த மனத்தை இழுத்துப் பிடிக்கத் தெரிந்து விட்டால், நீ இறைவனை—நெருங்கி விட்டாய் என்று பொருள்.

''மனத்தை வென்றவன் மரணத்தைக் கண்டு பயப்பட மாட்டான்.

''வரவு வரும்போது குதிக்கமாட்டான்; செலவு வரும்போது திகைக்க மாட்டான்.

''எந்தக் காலத்தில் எது நடக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறானோ அவன் வாழ்வில் அது நடக்கும்.

''கோயிலுக்குச் சென்று தலையில் உள்ள ரோமத்தைக் காணிக்கையாகக்

கொடுக்கிறீர்களே, அது ஏன்? அதையும், 'மொட்டையடித்தல்' என்று சொல்லாமல், 'முடியிறக்குதல்' என்று சொல்கிறீர்களே, ஏன்?

''முடி என்றால் என்ன பொருள்? மகுடம் என்று பொருள். ஒவ்வொரு மனிதனின் தலையிலும் ஆணவம் என்ற முடி இருக்கின்றது. அந்த முடியை ஆண்டவன் முன்னால் இறக்கி வைக்கிறீர்கள். அவனுக்கு நீங்கள் கட்டுகிற கப்பம் அதுதான்.

''மனத்தின் வழியாகவே ஆணவத்தை அறுக்கத் தெரியாத பாமரனுக்கு இந்த முடியிறக்குதல் எளிமையாகச் சொல்லித் தரப்படும் பாடமாகும்.

''உங்கள் மனத்திலிருந்து அவலம் நிறைந்த மலங்கள் ஒழியட்டும்; அமைதி நிறைந்த கோயிலாக அது திகழட்டும்.

''நான் உங்களுடனேயே சில நாட்கள் தங்கியிருந்து விடைபெற இருக்கிறேன். நித்திய கருமத்துக்காக இப்போது விடை பெறுகிறேன்.''

—பேசி முடிந்த குலசேகர ஆழ்வார் சோழ மன்னர் ஏற்பாடு செய்திருந்த ஒரு விடுதிக்குப் புறப்பட்டுச் சென்றார். அவருடன் வந்த அடியார்கள் வஞ்சியில் இருந்து கொண்டு வந்திருந்த தங்கத் தாம்பாளங்களையெல்லாம் ஆலயப் பண்டாரகரிடம் ஒப்படைத்தார்கள்.

அந்தத் தாம்பாளங்களுக்கு நடுவே ஓர் ஓலைக்கட்டு இருந்ததை ஒருவன் பார்த்தான். மன்னர் மறதியாக இதை வைத்திருக்கக் கூடும் என்று நம்பினான். அதை அப்படியே எடுத்துக் கொண்டு விடுதிக்கு ஓடினான்.

அப்போது குளித்து விட்டுப் புத்தாடை அணிந்து கொண்டிருந்தார் குலசேகர ஆழ்வார். பயபக்தியோடு அந்த ஓலையை நீட்டி, அது கிடைத்த விவரத்தைச் சொன்னான் வந்தவன்.

ஆழ்வார் அந்த ஓலையை வாங்கிப் படித்துப் பார்த்தார். அவர் நெற்றியில் வியர்வை துளித்தது.

நெற்றியில் வியர்வை துளிப்பது இருதயம் அதிர்ச்சியுற்றிருக்கிறது என்பதற்கு அடையாளம்.

அத்தியாயம் 13

மங்கலம் அமங்கலம்

நாராயண நம்பூதிரியும் ரவிவர்மனும் சந்தித்த அதே இரவில் பத்மாவதியை வீட்டில் விட்டுத் திரும்பிய மெல்லிளங்கோதை தன் அந்தப்புரக் கதவைத் திறந்தபோது மார்த்தாண்ட வர்மன் அங்கேயே காத்துக் கொண்டிருந்தான்.

சாதாரணமாக இரவு நேரங்களில் ஏட்டுச் சுவடிகளைப் புரட்டிக் கொண்டிருக்கும் அவன், அப்போது ஆசையின் வடிவமாக நின்றான்.

பத்மாவதியின் நினைவாகவே உள்ளே நுழைந்த மெல்லிளங்கோதை மார்த்தாண்ட வர்மனைப் பார்த்ததும் மயக்க நிலையில் ஆழ்ந்தாள்.

எவ்வளவு மயங்கிய நிலையிலும் தன் விருப்பத்தை வெளியிடாத பெருமை இந்துப் பெண்ணின் தனித்தன்மை.

மெல்லிளங்கோதை அங்கிருந்த நாற்காலி ஒன்றில் மெதுவாக அமர்ந்தாள்.

கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டே நின்ற மார்த்தாண்ட வர்மன் தானும் வந்து அருகில் அமர்ந்தான். அவன் அமர்ந்ததும் நாற்காலி ஆடத் தொடங்கிற்று.

''உங்களைத் தாங்கக் கூடிய சக்தி நாற்காலிக்கு இல்லை!'' என்றாள் அவள்.

''உனக்கு இருக்கிறது அல்லவா!'' என்றான் அவன்.

''கொடிக்குச் சுரைக்காய் சுமையாகாது'' என்றாள் அவள்.

''நீ படித்த படிப்பெல்லாம் இப்போதுதான் பயன்படுகிறது'' என்றான் அவன்.

''வயது குறைந்தாலும் உங்கள் மனம் பாடஞ் சொல்கிறதே'' என்றாள் அவள்.

''அரசர் முடிதுறந்தபிறகு இந்த அரண்மனையில் இருக்கவே பயமாக இருக்கிறது'' என்றான் அவன்.

''அதற்கு நான்தான் காவலா?'' என்றாள் அவள்.

''மனைவி பக்கத்தில் இருந்தால்தான் கணவனுக்குத் தைரியமே வருகிறது'' என்றான், அவன்.

''சக்தி பிரிந்து விட்டால் சிவமே சக்தி இழந்து விடுகிறதாம்'' என்றாள் அவள்.

''நாம் என்ன ஆராய்ச்சி நடத்தப் போகிறோமா, இல்லை.....?'' என்று இழுத்தான் அவன்.

''உங்கள் அவசரம் எனக்குப் புரிகிறது'' என்றாள் அவள்.

அவள் கழுத்தில் இரண்டு கைகளையும் சுற்றி வளைத்தான் அவன்.

அவள் உட்கார்ந்திருந்த நாற்காலி கீழே சாய்ந்தது.

அவன் அப்படியே அவளைக் கைகளில் தூக்கிப் பள்ளியில் கிடத்தினான்.

என்ன கேடு காலமோ, அவர்கள் நடந்து கொண்ட முறை அவ்வளவும் அபசகுனமாக இருந்தது.

புராதனம் என்றால்.....?

100!

புராதனப் பொருட்கள் (antiques) என்று எவை களைச் சொல்லலாம்? நூறு ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட பொருட்கள் என்று சட்டம் கூறும். 1875ல் செய்யப்பட்ட ஒரு பொருள் இந்த ஆண்டி லிருந்து புராதனப் பொருள். -பாலி- யூத் டைம்ஸ்

அவள் முகத்தோடு முகம் வைத்து அவன் விளையாடியபோது குங்குமம் கலைந்தது. கூந்தலைப் பற்றி அணைத்த போது மலர் சரிந்தது. அவன் அவளை வேடிக்கை செய்தபோது புரண்டு படுத்த அவள் கீழே விழுந்தாள். இது தான் அவள் பஞ்சணையில் படுக்கும் கடைசி நாள் என்று அது அறிவுறுத் திற்றோ!

அந்த இளங் கிள்ளைகள் எந்த அப சகுனத்தையும் உணரவில்லை.

அர்த்தசாமத்தில் ஒலித்த மணியின் ஓசையும் அவலமாகவே ஒலித்தது.

''பகவதி அம்மன் கோவில் மணி உடைந்து போயிருக்கிறது. எத்தனையோ முறை சொல்லி விட்டேன், தர்மகர்த்தா மாற்றாமல் இருக்கிறார்'' என்றான் மார்த்தாண்ட வர்மன்.

''அதுசரி. அர்த்தசாமமாகிவிட்டது. இன்னும் தூக்கம் வரவில்லையா?'' என்றாள் அவள்.

பனிச்சென்று அவள் கையைப் பற்றித் தூக்கி உட்கார வைத்தான் அவன். கையில் இருந்த தங்க வளையல் நெளிந்து வளைந்தது. அதையும் உணராத மார்த்தாண்ட வர்மன் தத்துவம் பேச ஆரம்பித்தான்.

''ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ரகசியத்தை வைத்த இறைவன், அந்த ரகசியங்களைப், பரிமாறிக் கொள்ளவே இரவைப் படைத்திருக்கிறான். இல்லை என்றால், இரவு என்ற ஒன்றே இல்லாமல் வாழ முடியாதா என்ன?''

—இப்படிப் பேசிக் கொண்டே உறவுக்காக அவன், அவளை நெருங்கினான்.

அவள், ''தீபம், தீபம், தீபத்தை அணையுங்கள்'' என்றாள்.

அதுவும் அபசகுனமா?

கட்டிலில் உட்கார்ந்தபடியே தீபத்தை நோக்கி விசிறியால் வீசினான் மார்த்தாண்ட வர்மன். தீபம் அணைந்தது. அணைந்த தீபம் ஓர் ஆனந்தமான இரவை அவர்களுக்குத் தந்தது.

நாராயண நம்பூதிரியின் பொழுது குழப்பத்தில் விடிந்தது என்றால் இவர்கள் பொழுது ஆனந்த மயக்கத்தில் விடிந்தது.

எழுந்து வெளியே வந்த மார்த்தாண்ட வர்மனுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

அரண்மனை மைய மண்டபத்தில் என்றும் காணாத அதிசயமாக ரவிவர்மன் அமர்ந்திருந்தான்.

''ரவிவர்மரா! எப்போது வந்தீர்கள்?'' என்று திகைப்போடு கேட்டான் மார்த்தாண்ட வர்மன்.

ரவிவர்மன் பதில் பேசாமல் எழுந்து நின்றான்.

''ஏதும் அவசரமான செய்தியா?'' என்று கேட்டான் மார்த்தாண்ட வர்மன்.

''அவசரம் மட்டுமல்ல; அபஸ்வரமான செய்தியும்தான்'' என்றான் ரவிவர்மன்.

ஸ்ரீரங்கம் செல்லும் வழியில் தந்தைக்கு ஏதாவது ஆகியிருக்குமோ என்ற கலக்கத்தோடு ''என்ன? என்ன?'' என்றான் மார்த்தாண்ட வர்மன்.

''நேற்று இரவு நுணைத் தளபதி இரும்பொறையை யாரோ கொன்று விட்டார்கள்'' என்றான் ரவிவர்மன்.

மார்த்தாண்டவர்மனுக்குத் திக்கென்றது.

பாண்டிய நாட்டு அல்லது கொங்கு நாட்டு வேவுகாரர்கள் அதைச் செய்திருக்கக் கூடும் என்றே அவன் நினைத்தான்.

''யார்மீது உங்களுக்குச் சந்தேகம்?'' என்று அவன் ரவிவர்மனையே கேட்டான்.

''சந்தேகத்துக்கே இடமில்லாதவர், என்று யாரை நீங்கள் நம்புகிறீர்களோ, அவர் மீதுதான்'' என்றான் ரவிவர்மன்.

''நான் சிறியவன். புரியச் சொல்லுங்கள்'' என்றான் மார்த்தாண்ட வர்மன்.

''நான் சந்தேகப்படுவது யாரைத் தெரியுமா? நாராயண நம்பூதிரி...!'' என்றான் ரவிவர்மன்.

மார்த்தாண்ட வர்மனின் முகம் மாறிற்று. சிறிது நேரம் அவன் யோசித்தான். பிறகு ரவிவர்மனிடம் திரும்பி ''தயவு செய்து நீங்கள் வெளியே போகிறீர்களா?'' என்றான்.

ரவிவர்மன் அவனையே உற்றுப் பார்த்துவிட்டு வெளியேறினான்.

அவன் வெளியே போவதற்கும் நாராயண நம்பூதிரி உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது. (தொடரும்)

"இதுதான் என் கடைசிக் கச்சேரி" என்று கூறி விட்டு ரீதிகௌளையை ஆரம்பித்தார் ஸ்ரீ செம்மங்குடி. "இந்த ரீதியில் பாடிக்கொண்டிருக்கும்போது கடைசிக் கச்சேரி என்று எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?" என்பதே ரசிகர்கள் மனத்தில் உருவான கேள்வி.

நிறைய அங்கத்தினர்களை உடைய பெரிய சபாக்கள் பெரும்பாலும் நாட்டியம், நாடகம் என்றே நடத்திக்கொண்டிருப்பதால் சங்கீதப் பிரியர்களுக்குச் சிறிய அமைப்புக்கள் இன்று நிறையத் தோன்றிவிட்டன. ஆனால் இதன் அவசியத்தை உணர்ந்து முன்னோடியாக விளங்கிய சபாக்களில் இரண்டாவது இடம் பெறுகிறது மியூஸிக் க்ளப். இது அண்மையில் நூறாவது நிகழ்ச்சியை நடத்தியது.



நூற்றுக்கு நூறு; நூற்றிலே ஒன்று!

இந்நூறு நிகழ்ச்சிகளும் அதன் அங்கத்தினர்களுக்கு மிகுந்த மன நிறைவை அளித்துள்ளமையால் மியூஸிக் க்ளப்புக்கும் அதன் தலைவரான நடராஜன் அவர்களுக்கும் நூற்றுக்கு நூறு மார்க் தரலாம். நூறாவது கச்சேரியாக அமைந்த செம்மங்குடியின் கச்சேரியோ நூற்றில் ஒரு கச்சேரியாக இருந்தது.

இந்த மாலை நிகழ்ச்சிக்கு முன்னதாக மியூஸிக் க்ளப் பிற்பகலில் ஏற்பாடு செய்திருந்த ஸ்ரீ ஏ. கே. ஸி. நடராஜனின் க்ளாரினெட் வழக்கமான இனிமையுடன் விளங்கியது.

நாதஸ்வரத்துக்கு இணையாக அந்த மேல்நாட்டு வாத்தியத்தைக் கையாள முயன்று கணிசமான வெற்றி பெற்றுள்ள நடராஜன் அவர்கள் வாசிப்பைக் கடைசிவரை இருந்து கேட்டுச் சிறப்பித்தார் அமைச்சர் திரு ராஜாராம். பக்கவாத்தியமாக இரட்டைத் தவில். திறந்த வெளியில் அல்லாமல் சிறிய மண்டபத்தினுள்ளே தவில் வாசிக்கக் கேட்பது செவிப் புலன்களுக்குச் சிரமந்தான் என்றாலும் அந்தக் கஷ்டத்தைச் சிறிதும் எண்ணிப் பார்க்க விடவில்லை வலையபட்டி சுப்பிரமணியம் அவர்களின் ஆற்றல்.

ரொம்ப நாளைக்கு முன்னால் டியூக் எலிங்டன் என்ற ஜாஸ் மேதை அமெரிக்காவிலிருந்து வந்து மியூஸிக் அகாடமியில் தமது இசைக் குழுவின் நிகழ்ச்சியை நடத்தினர். அப்போது அவர் தனியே டிரம் வாசித்தது இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. அவர் விரல்கள் இரண்டு குச்சிகளை வைத்துக் கொண்டு ஏதோ மாயாஜாலம் புரிவது போலவே எனக்குத் தோன்றிப் பிரமிக்கச் செய்தன. 'அடேயப்பா! ஒரு மனிதனின் நரம்புகள் இத்தனை வேகமாகத் தான கதி தப்பாமல் இயங்க முடியுமா?' திறந்த வாய் மூடவில்லை நான். ஆனால் அவர் 'டியூக்' என்றால் தாம் சக்கரவர்த்தி என்று நிரூபித்துவிட்டார் வலையபட்டி. அது என்ன வேகம்! அந்த விரல்கள் இயங்கினவா, பறந்தனவா? வெறும் வேகம் மட்டுமா? அத்துடன் நுணுக்கமான லய ஆற்றலும் இணைந்தல்லவா வருகிறது! யாழ்ப்பாணம் பால சுப்பிரமணியம் அவர்களும் நன்றாக ஈடு கொடுத்துச் சிறப்பித்தார்.

கடைசிக் கச்சேரி என்று எண்ணிக் கொண்டு பாடியதால்தானோ என்னவோ செம்மங்குடி பிரமாதப் படுத்தி விட்டார். இதற்காகவே ஒவ்வொரு முறையும் 'இதுதான் கடைசிக் கச்சேரி' என்று அவர் கூறிக் கொள்வதானால் ரசிகர்களுக்கு ஆட்சேபமிராது.

"ராகமெல்லாம் அதிகம் பாட முடியலே; முடிந்த வரை பாடறேன்" என்று கூறிச் சுருக்கமாகத்தான் பாடினர். கெட்டியாகப்

▼ கடைசிக் கச்சேரி?



பாடினாலும் உயிரைக் கொடுத்துப் பாடி நமக்கு ராகங்களின் ஜீவ களைகளைக் காட்டி விடுகிறாரே அது போதாதா? ''நான் அதிகமாகப் பாடவில்லை என்பதால் நீ குறைத்துக் கொள்ளாதே; தாராளமாக வாசி'' என்று ஜெயராமனிடம் அவர் கேட்டுக் கொண்டார். லால்குடியும் அளவாகத்தான் வாசித்தார். வாமன உருவுக்குள் அடங்கியதும் விசுவரூபம் தானே! அதென்னமோ செம்மங்குடிக்கு வாசிக்கும்போது அவர் ஆற்றல் அலாதியாகத்தான் பிரகாசிக்கிறது! இதற்குக் காரணம் நடுநாயகமாக வீற்றிருப்பவர் கொடுக்கும் உற்சாகம்தான். அதை லய வித்வான்களிடமும் பூரணமாக உணர முடிந்தது.

எல்லாக் கீர்த்தனைகளுக்கும் மிருதங்கம் வாசிக்கத்தான் செய்வார்கள். ஆனால் மிருதங்கத்தின் போஷிப்புக்காகவே காத்திருக்கும் பாட்டுக்களும் உண்டல்லவா? 'மாருபல்க'வில் அன்று காரைக்குடி மணி 'வெளுத்து வாங்கிவிட்டார்', 'ஜமாய்த்துத் தள்ளிவிட்டார்' என்றெல்லாம் சொன்னால் கூடவே அதில் நாகராஜனின் 'கஞ்சிரா வாசிப்பையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். தனி ஆவர்த்தனம் நல்ல ஜிலுஜிலுப்பு.

முன்னாள் பிரதம நீதிபதி அனந்தநாராயணன் முன்னால் அமர்ந்திருப்பார் எனினும் லேசில் உணர்ச்சிகளை வெளிப்படுத்திவிடமாட்டார். ஆயினும் அன்று யதுகுலகாம்போதியில் தீக்ஷிதரின் பார்த்தசாரதி என்ற பாடலை செம்மங்குடி தொடங்கியபோது அனந்தநாராயணன் அவர்களால் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. நிமிர்ந்து அமர்ந்து புன்னகையைத் தவழ விட்டார். அது கச்சேரி முடியும்வரை மாறவில்லை!

புதிய முயற்சி என்பதாலேயே ஒன்றை ஏற்றுக்கொள்ள மறுப்பது முறையாகாது. அகில இந்திய ரேடியோ தயாரித்து அளித்த ''வாத்திய விருந்தா'' சம்பிரதாயத்தில் அடங்குகிற சமாசாரம் அல்ல.

மேனாட்டு இசை வல்லுநர்கள் ஒரு கருத்தை மனத்தில் வைத்துக் கொண்டு அந்தக் கருத்து எந்த மாதிரி ஒலிகளை யெல்லாம் தங்கள் உள்ளத்தில் எழுப்புகின்றனவோ அவற்றை இசையாக அமைத்துத் தருவார்கள். ''ஆழ்கடல் காட்சிகள்'' என்று எண்ணிக் கொள்வார்கள். ஆர்க்கெஸ்ட்ரா அந்த எண்ணத்துக்கு இசை வடிவம் தருமாறு செய்வார்கள்.

இதே பாணியில், ''சென்ற தலைமுறையின் நிதானத்துக்கும் இந்தத் தலைமுறையின் பரபரப்புக்கும் இடையில் ஏற்படும் மோதல்கள், அவற்றின் விளைவுகள்'' என்பதாக ஒரு கருத்தை மனத்தில் வைத்துக் கொண்டு அதைச் சித்திரிக்கும் விதமாக நமது ராகங்களில் இசை அமைத்தார் ஸ்ரீ காம சாஸ்திரி. இம்முயற்சியில் சரசாங்கி, ஜோக், ரேவமதி (ரேவதியும் மத்தியமாவதியும் இணைந்தது) ஆகிய ராகங்களைக் கையாண்டார். பல்வேறு வாத்தியங்களை இருபத்தைந்து கலைஞர்கள் வாசித்து காம சாஸ்திரியின் இசைக் கற்பனைக்கு ஒலிவடிவம் தந்தார்கள். வாத்திய விருந்தா என்றால் வாத்தியக் குழு என்று அர்த்தம்.

இருபத்தைந்து கலைஞர்களை ஒன்று கூட்டி நிர்வகித்துப் பிசிறு தட்டாமல் ஒரேபோல் வாசிக்கச் செய்வது எவ்வளவு கஷ்டம் என்று கூறத் தேவையில்லை. இரண்டே மாதங்களில் அதில் பெரு வெற்றி பெற்றிருக்கிறார் ஸ்ரீ காம சாஸ்திரி. எதிர்காலத்தில் நாற்பத்தைந்து கலைஞர்கள் பங்கேற்பார்களாம்!

பழக்கமில்லாத புதிய முயற்சி என்பதால் நிகழ்ச்சிக்குக் குறைவான நேரம் ஒதுக்கியிருந்தது சரியே. காதுகளுக்குப் பழக்கமான பிறகு இன்னும் அதிகமாகவே வரவேற்பு இருக்கும்.

தேசிய முயற்சிகளுக்குக் கோஷ்டி கானமும் வாத்திய கோஷ்டியின் இசையும் பேருதவி புரிய முடியும். தொடக்கம் இது.

— குட்டிகிருஷ்ணன்

ராஜாஜி சிந்தனை

முன்னோர் தந்த மூலதனம்

அறிவைக் குழம்பவிடலாகாது. அன்பு உணர்ச்சியைக் கைவிடலாகாது. அத்துடன் பணிவுக் குணத்தையும் அடிக்கடி புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் நாம் கவலைப்படவும் செய்வோம்; எந்தக் காரியத்தையும் செய்ய முடியாதவர்களாக ஆகிவிடவும் செய்வோம்.

இன்னொரு விஷயத்தை உங்களிடம் கூற விரும்புகிறேன். இப்போதுள்ள மக்களைத் தாக்கினாலும் முன்னோர்களைத் தாக்கலாகாது. அப்படிச் செய்தால் அநேக விதமான சச்சரவுகளும் பகைமைகளும் உண்டாகும். அத்துடன் அது நியாயமற்றதும் ஆகும். உயிரோடுள்ளவர்களைத் தாக்கக் காரணங்களைக் காணலாம். ஆனால் இறந்துபோனவர்களைத் தாக்கப் போதுமான காரணங்கள் காண முடியாது. ஆதலால் பதில் சொல்ல முடியாத நிலையில் உள்ள இறந்தவர்களைத் தாக்குவதைத் தயவு செய்து விட்டுவிடுங்கள். இப்போது மேனாட்டு அறிஞர்கள் கண்டுபிடிக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் அநேக உண்மைகளை நம்முடைய முன்னோர்கள் கண்டுகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் பெரிய மனிதர்கள். நம்முடைய பெரிய மூலதனம் நம்முடைய முன்னோர்கள் தந்துள்ள ஞானம்தான். தற்காலத்து கணித சாஸ்திரத்துக்கு அஸ்திவாரமாக உள்ள தசாம்ச முறையானது இந்தியாவிலேயே கண்டுபிடிக்கப்பட்டது என்பதை அறிய நான் பெருமை கொள்கிறேன். அதுபோலவே தற்காலத்தில் காணப்படும் விஞ்ஞானமானது இந்தியா தேசத்திலேயே ஆதியில் உற்பத்தியாயிற்று என்பதை அறியவும் நான் பெருமை கொள்கிறேன். நம்முடைய முன்னோர்கள் முட்டாள்களும், பைத்தியக்காரர்களும், ஏமாற்றுக்காரர்களும் அல்ல. அவர்கள் உண்மையை நாடினார்கள். அதனால் அரும் பெரும் காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள்.

—சமூக சீர்திருத்தம் என்ற கட்டுரையில்



பிரபல திருமணம்

கல்கி நிறுவன டைரக்டரும், ஜெனரல் மானேஜருமான திரு வி. வைத்தியநாதன் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி வி. ராமமூர்த்திக்கும் சௌ. கார்ந்திமதி என்கிற ஷீலாவுக்கும் மயிலாப்பூர் ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் சென்ற மாதம் சிறப்பாகத் திருமணம் நடந்தது. மணமகள், ஜோத்பூரிலுள்ள 'மத்திய ஆராய்ச்சி நிறுவனத்'தைச் சேர்ந்த டாக்டர் ஏ. கிருஷ்ணன் அவர்களின் புதல்வி. திருமண வைபவத்துக்கும் வரவேற்பு நிகழ்ச்சிக்கும் சென்னை நகரப் பிரமுகர்களும், தொழில் அதிபர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் விஜயம் செய்து மணமக்களை ஆசிர்வதித்தனர்.

புதுமணத் தம்பதி ராமமூர்த்தி - கார்ந்திமதிக்கு நம் நல்வாழ்த்துக்கள்.

இவன் அந்த அலுவலகத்தின் அகலமான படிகளில் மிக நிதானமாக ஏறினான். அப்பா இறந்து ஐந்து வருஷங்களாகிறது என்பது இவ னுக்கு நினைவு வந்தது. அந்த பைல் உரிய காலத்தில் முடிந்திருந்தால் அப்பா இறந் திருக்க மாட்டார். கனமான நெஞ்சுடன் இவன் வராந்தாவில் நுழைந்தான். நீண்ட வராந்தாக்களின் அமைதி வித்தியாசமாகத் தோன்றிற்று. முன் எப்போதும் இந்த இடம் இப்படி இருந்ததில்லை. இந்தச் சிவந்த சுவர் களின் மௌனத் தோற்றம் இந்த இடத்துக் குச் சாத்தியமற்றதாய்த் தோன்றியது. ஒரு

குறுகிப் போய், ஒரு நாள் பின் மதியப் போதில் இறந்து போனார்.

மாடிப் படிக் கைப்பிடியில் வெள்ளை நகங்களாய் நீட்டிக் கொண்டிருந்த சுன் னாம்புத் தடவல்களை ரசித்தபடியே இவன் இரண்டாவது மாடியில் திரும்பினான்.

''சௌக்கியங்களா தம்பி?'' — திரும்பிப் பார்த்தான். அதே டவாலிச் சேவகன். அவன் உதட்டில் இரக்கம் தொனிக்கும் சிரிப்பு ஒட்டிக் கொண்டிருந்தது. 'தயவுசெய்து நீ இப்படிச் சிரிப்பதை நிறுத்தேன்' என்று கத்த வேண்டும் போலிருந்தது இவனுக்கு.

''என்னங்க தம்பி, இன்னுமா ஒங்க பேப்பர் செட்டில் ஆகலே?''

''இன்னமும் முடியல சேர்வ... ஆமா செக்ஷன் ஏன் இவ்வளவு 'டல்லா' இருக்கு?''



மரணமற்று..

எம். சுப்பிரமணியன்



''தம்பிக்கு விஷயம் தெரியாதுங்களா? செக்ஷன் வேறு இடத்துக்கு மாத்திப் பத்து நாளாச்சுங்களே....''

''இப்ப எங்க மாத்தியிருக்காங்க?''

அவன் சொன்னான்.

''அப்ப நான் வரட்டுமா சேர்வெ... வாங்களேன், ஒரு டீ சாப்பிடலாம்.''

''டீ கெடக்கு தம்பி. நீ ஜோலிய முடிச்சுப் பிட்டுச் சந்தோஷமா திரும்பி வா கண்ணு! ஸ்வீட், காரம்னு சும்மா ஜமாய்ச்சுப்பிட லாம்!'' இவன் நகர்ந்தான். இவனுக்கிருக் கும் இந்தப் புரிதல் அவர்களுக்கும் இருந் திருக்குமெனில் அம்மா இப்படிச் செத்துக் கொண்டிருக்க மாட்டாள். நாலு நகை யுடன் கல்யாணியைத் திருப்பி அனுப்பி யிருக்க முடியும்.

புதிய இடத்தை இவன் அடைந்தபோது இவன் நிழல் இவன் கால்களில் நழுவியிருந் தது. வராந்தாவில் பைல்களுடன் ஒரு பெண் இவனைக் கடந்து போனாள்.

வேளை தான் வழிதவறி வந்து விட்டோமோ எனச் சந்தேகமாக இருந்தது.

ஒருவேளை இன்று அந்த பைல் முடிந்து விடக்கூடும். அம்மா கூட மிகுந்த நம்பிக்கை யுடன் இருந்தாள்.

அப்பாவின் மரணம் அம்மாவை மிக ஆழமாக நொறுக்கியிருக்க வேண்டும். அப்பா இப்படிச் செத்திருக்கக் கூடியவர் இல்லை. அப்பாவுக்கு அந்த பைல் மூலம் நிறையப் பணம் வரவேண்டி யிருந்தது. நிறை யக் கடன். கல்யாணியின் கல்யாணச் செலவு வேறு. கடைசிவரை நடந்து நடந்தே அப்பா வின் வாழ்க்கை கரைந்து போயிற்று. கடன் காரர்களின் கூர்மையான வார்த்தைகள் அவரை உள்ளூறச் சாப்பிட்டிருக்க வேண்டும். ஒரு சிறு தகராறில் கல்யாணி திரும்பி வந்த சோகம் வேறு. அப்பா மனம் செத்து,

''எக்ஸ்கியூஸ் மீ!''

அவள் நின்ற விதம் அழகாய் இருப்பதாகப் பட்டது.

டிபார்ட்மெண்ட், செக்ஷன் பெயரைச் சொன்னான்.

''மன்னிக்கணும். தயவுசெய்து நீங்கள் ''என்கொயரி''யில் கேளுங்கள்'' என்றாளவள்.

''தாங்க்யூ''. இவன் நகர்ந்தான். இவ்வளவு மென்மையாகப் பதிலிறுக்கக் கூடியவர்கள் இந்தச் சுவர்களுக்குள் இருக்க முடிந்தது இவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒருவேளை அவள் பெண் என்பதால் அப்படி தோன்றியிருக்கக் கூடும். இவன் அந்த அலுவலகத்தின் நீண்ட வளைவுகளில், டைப்ரைட்டர் சத்தத்தினிடையே என்கொயரியைத் தேடினான். எதிர் வரும் முகங்களில் கேட்கத் தோன்றி, பின் முடியாமல், ஒவ்வொரு முகமாய் மெல்லத் தாண்டிக் கொண்டிருந்தான். இவனுக்குப் பதில் சொல்வதற்கான பொறுமையும், நேரமும் அந்த முகங்களில் சிறிதும் இல்லை யென்பது தெரிகையில் வருத்தமாக உணர்ந்தான். மிகுந்த சிரமத்துடன் எதிரே வந்தவரிடம் மறுபடியும் கேட்டான்.

''நான் இந்த இடத்துக்குப் புதியவன். தயவுசெய்து என்கொயரியில் விசாரியுங்கள்.''

இவனுக்கு எரிச்சலாக இருந்தது. தான் அதற்குத்தான் வழி கேட்பதாய்ச் சொன்னான் இவன். அவனுடைய பார்வை இவன் மேல் பரிகாசமாய் அலைந்தது.

என்கொயரி ஒரு பழைய கார் ஷெட்டில் சிறை வைக்கப்பட்டிருப்பதை, சிவந்த அதன் எழுத்துக்கள் பிரதிபலித்தன. என்கொயரியில் ஒருவன் பருமனாக நாற்காலியில் பரவி யிருந்தான். அவன் உறங்குவது போலும் விழிப்பது போலுமொரு நிலையில் இருந்தான். இவன் 'எக்ஸ்கியூஸ் மீ' சொன்னான். இவன் இரண்டு முறை சொன்ன பிறகே அவனுக்குப் புரிந்தது. அவன் நிச்சயமாகச் செவிடாக இருக்க முடியாதெனத் தோன்றியது. இவன் இலாகாவின் பெயரைச் சொல்லி வழி கேட்டான்.

''என்ன டிபார்ட்மெண்ட் சொன்னீங்க?'' சொன்னான்.

''இல்லையே... அப்படியொரு செக்ஷன் இங்கே வேலை செய்யலை இல்லையே.. ஒருவேளை நீங்கள் தவறாக...''

''இல்லே சார்..., இப்பத்தான் இங்கே 'ஷிப்ட்' பண்ணியிருக்காங்களாம்...''

''அப்படி யொன்றும் இல்லையே, சார்! எனக்குத் தெரியாம இங்கே எந்த டிபார்ட்மெண்டும் வேலை செய்யறதில்லையே? நீங்கள் சொல்வது உண்மையா?''





நல்லதொரு நாட்டியம்

''ரூபமு ஜூசி'' என்ற சிருங்கார ரஸம் ததும்பும் தோடி ராக வர்ணம் - துரிதமான சொல்லடுக்குகளும், வேகமான ஸ்வர வரிசைகளும் கொண்டு மேடையில் ஒரு சவாலாக அமைந்தது. 'வெண்ணிற ஆடை' நிர்மலா அதை மிகவும் திறமையாகச் சமாளித்தார். பாத வேலைகளும், ஹஸ்த அபிநயங்களும் காலப் பிரமாணத்துடன் கலந்து பரதநாட்டிய நிகழ்ச்சியைப் பரிமளிக்கச் செய்தன. ரசிகர்களை வசீகரிக்கும் நிர்மலாவின் பொலிவான தோற்றம் நிகழ்ச்சியைக் களைகட்டச் செய்தது.

நிர்மலாவும் அவர் மாணவி தாக்ஷாயணியும் இணைந்து ஜெயதேவரின் அஷ்டபதிக்கு ஆடிய ராதா-கிருஷ்ண நடனம் ரசிகப் பெருமக்களின் கையொலியைப் பெற்றது. இடை வேளைக்குப் பிறகு மதுரை சேதுராமனின் குரலில் பதங்கள் கம்பீரமாக எழுந்து சபையை ஆட்கொண்டன. யமுனா கல்யாணியில் ''கிருஷ்ணா நீ பேகனே பாரோ'' எழில் வடிவமாக இலங்கியது. நிர்மலாவின் முக பாவங்கள் பாடலின் கருத்துக்கு ஏற்ற விதத்தில் - யசோதையாகவும் கண்ணனாகவும் மாறி ரசிகர்களைப் பரவசப் படுத்தின. குற்றாலக் குறவஞ்சியில் வசந்தவல்லி ஆடும் பந்தாட்டம், இலக்கிய நயமும் பரத வண்ணமும் கொண்டு நிகழ்ச்சிக்குச் சிறந்த முடிவாக அமைந்தது.

- காந்தன்



''நிச்சயமாக!'' — இவன் முடிக்கவில்லை.

''என்னடா ராஜாமணி தகராறு?'' — ஒரு கண்ணாடி இளைஞன் எதிர் வந்தான். அவன் கையில் சேஸ் இருந்தது. அட்டையில், கனவுகளுடன் ஒரு நீலப் பெண். கண்களில் காதல் மின்ன, தன் கால்களை வானை நோக்கி நீட்டிக் கொண்டிருந்தாள். ராஜாமணி விஷயத்தைச் சொன்னான்.

''நீ ஒரு மடையன்டா. தென்புறமுள்ள கார் ஷெட்டிலே அந்த செக்ஷன் வேலை செய்ய ஆரம்பிச்சுப் பத்து நாட்களாச்சு தெரியுமா'' என்றவன், ''இவனிடம் கோவிச்சுக்காதீங்க ஸார்'' என்றான். கொஞ்சம் பொறுத்து ''நான் உங்களை அங்கே அழைத்துச் செல்கிறேன்'' என்றான்.

''மிக்க நன்றி சார்'' என்றான் இவன்.

''இதோ பாருங்க, இந்தப் பசங்க கிட்ட இப்படியெல்லாம் காரியம் சாதிக்க முடியாது. நீங்க கொஞ்சம் 'பிரஷர்' கொடுக்கணும். நான் சொல்றது உங்களுக்குப் புரிகிறதா? இல்லேன்னா இங்கே ஒரு சின்னப் பேப்பர் கூட நகர்த்த முடியாது. எத்தனை வருஷம் சொன்னீங்க?''

சொன்னான்.

''இது மிகவும் பரிதாபம்தான். இந்தப் பசங்கிட்ட சுவிரக்கம் என்பதே கிடையாது. புலிக்குப் புண்ணாக்கு வாங்கிப் போட்டேன்னு கண்ணை மூடிக்கொண்டு சாங்ஷன் பண்ணுவானுங்க. பசுவுக்குப் புல் வாங்கிப் போட்டேன்னு ஆயிரத்தெட்டு கேள்விகள்'' என்றான். முகத்தில் புன்னகை மலர ஒரு வட்டக் கண்ணாடி இளைஞன் ''ஹாய் ராஜு!'' என்றபடியே வந்தான். அவன் கையில் ஃபெமினா இருந்தது.

இவன் ''ஹாய் ஆனந்த்!'' என்று கை ஆட்டினான். இருவரும் இவனை மறந்து பேச ஆரம்பித்தார்கள். ஷபனா ஆஸ்மி பற்றிக் கண்கள் அமிழ, சிலாகித்துக் கொஞ்ச நேரம். டைப்பிஸ்ட் பரிமளாவைப் பற்றி மிகுந்த உற்சாகத்துடன் கொஞ்ச நேரம். அப்புறம் அந்த அலுவலகத்தின் சட்ட திட்டங்கள், புரொமோஷன், லீவு — அவர்களுக்குப் பேசுவதற்கு நிறைய விஷயம் இருந்தது. அவர்களுடைய பேச்சிலிருந்து உலகம் மிகவும் கெட்டுவிட்டதாகத் தெரிந்தது.

''மிஸ்டர். ஜகதீஷ் இருக்காருங்களா?'' வெளியே நாற்காலியில் உட்கார்ந்திருந்தவன் இவனை வெறித்த பார்வையுடன் நோக்கினான். ஒரு தெரு நாயைப் பார்ப்பது போன்ற ஓர் அலட்சிய பாவம் அந்தக் கண்களில் மின்னுவதாக இவனுக்குத் தோன்றியது.

''மிஸ்டர் ஜகதீஷைப் பார்க்கணும்''—மறுபடியும் சொன்னான்.

''ஜகதீசன்னு ஆயிரம் ஜெகதீஷ் இருக்காங்க... எந்த ஜகதீஷ் வேணும்னு சொன்னாத்தானேய்யா.''

இவன் எரிச்சலுடன் மறுபடியும் சொன்னான்.

''அவரைத்தான் பார்க்கணுமா?'' அவன் இவனை மேலும் கேலியாகப் பார்த்தான். ''உள்ளே போய் எச்-2 ஸீட்டிலே கேளு.'' இவன் மேஜைகளின் குறுகிய வளைவுகளில் தன்னை வளைத்துக் கொண்டு நடந்தான். ஒவ்வொரு முகத்துக்கெதிரும் பைல்கள் குவிந்திருந்தன.

''மன்னிக்கணும் சார்! மிஸ்டர் ஜகதீஷைப் பார்க்கணும்.''

அவன் பைலில் குதித்துக் கொண்டிருந்தான்.

''மிஸ்டர் ஜகதீஷைப் பார்க்கணும்...''


வேறு எந்த ஆரோக்கிய பானமும் பரிபூரணமானது அல்ல.
சாப்பிட நேரமில்லையா?
சாதாரண ஆரோக்கிய நிலையில்
துடிப்புடனும் சக்தியுடனும் விளங்க உங்களுக்குத் தேவையான இந்த 23 அத்தியாவசிய ஊட்டச் சத்துக்கள் நிறைந்த பரிபூரண பானம்
காம்ப்ளான்®
ஒன்றுதான்.
புரதம்
கார்போஹைடிரேட்
கால்ஷியம்
லிப்பிடுகள்
பாஸ்பரஸ்
சோடியம்
குளோரைடு
(ஏ வடிவில்)
பொட்டாஷியம்
இரும்பு
சத்து
அயோடின்
வைட்டமின் 'ஏ'
வைட்டமின் பி1
ரிபோஃப்ளேவின்
நிகோடினமைடு
கால்ஷியம்
கோலின்
பென்டோதெனேட்
பைரிடாக்ஸின் (பி6)
வைட்டமின் பி12
ஃபாலிக் அமிலம்
வைட்டமின் ஸி
வைட்டமின் டி
வைட்டமின் ஈ
வைட்டமின் கே
அதோடு, இதர சிறுசிறு பொருட்கள், உடல் சரிவர ஆரோக்கியமாக இயங்க உதவும்.
பாலையும் விட இன்னும் அதிகமான வைட்டமின்கள், புரதம், கால்ஷியம், இரும்புச் சத்து மற்றும் இதர அத்தியாவசிய ஊட்டச் சத்துக்களை காம்ப்ளான் அளிக்கிறது.
'பரிபூரண' போஷாக்கிற்கு டாக்டர்களால் பெரிதும் சிபாரிசு செய்யப்படுவது
சரியாக சாப்பிடுவதில்லையா?
நோயால் சக்தி இழந்துவிட்டீர்களா?
Glaxo
Complan
THE COMPLETE PLANNED FOOD
காம்ப்ளான்
CMGC.17-203 TM



அழகின் வெற்றி!

ஒற்றியது விரல் கன்னக் குழியை;
நெற்றி தாங்கும் சுட்டி எழிலை.
பற்றியது மனம் ஓர விழியை,
வெற்றி காட்டும் அதரப் பொழிலை.

மேலட்டை வண்ணப் படம்:
திலீப் பானர்ஜி

அவன் விரித்த பைலில் ஒரு விரலைப் பதித்து மூடியபடி நிமிர்ந்தான்.

''நீங்க....?''

சொன்னான். அவன் முகம் சுவாரசியமற்று இறுகுவதை இவன் கவனித்தான்.

''இப்பத்தான் எங்கோ போனார் வெளியிலே! இருங்க கூப்பிடறேன்.''

''எப்ப வருவார்னு....?''

''நான் என்ன டைம் கீப்பராய்யா அவருக்கு? அதான் கூப்பிடறேங்கிறேனே... மனுஷனுக்கு இருக்கிற தொந்தரவு போறாதுன்னு...!''

இவனுக்குக் கோபம் வந்தது. அடக்கிக் கொண்டான்.

''தயவு செய்து சொல்லி அனுப்புங்க சார்'' என்றான் மறுபடியும்.

''ம்...ம்'' என்றபடி பிரித்த பக்கத்தில் மூழ்கினான் அவன். இவன் வெளியேறினான். வெளியே வானத்தை வெறித்த வண்ணம் இருந்தான். வானம் தெளிவாக மிகுந்த அமைதியுடன் இருந்தது. ஆனால் இப்போதெல்லாம் தன்னால் அதில் லயிக்க முடியவில்லை என்பது இவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்போதெல்லாம் இவன் மிகச் சுலபமாய் எதிலும் கோபமுறுவதாகக் கல்யாணி சொன்னாள். அப்போது அவளிடம் மூர்க்கமாக மறுத்தான் எனினும் அதுதான் உண்மை எனத் தோன்றியது.

ஒருவேளை தனக்கொரு வேலை கிடைக்காதது காரணமாய் இருக்கக் கூடும். அப்பாவின் மரணமும் கூட இதற்குக் காரணமாக இருக்கலாம். அப்பா அப்படிச் செத்திருக்கக் கூடியவர் இல்லை. இந்தப் பைல் அவரைச் சாகடித்து விட்டது. அப்பாவின் மரணம் இந்தச் சுவர்களைப் பொறுத்தவரையில் ஒரு சாதாரணமான, அற்பமான ஒரு தனி மனிதனுடைய மரணம் அவ்வளவுதான். அவனுடைய கோபம் இங்கே ஒரு சிறிய செங்கல்லைக் கூட அசைக்க முடியாது.

''நீங்கதானே தியாகராஜன்? உள்ளே கூப்பிடறாங்க.''

நாற்காலிக்காரன். இவன் உள்ளே நுழைந்தான். டைப்பிங் பெண் இவனை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலையைத் தாழ்த்திக்கொண்டாள். இவன் நேராக எச்-2 ஸீட்டுக்குப் போனான். அவன் இப்போதும் சாணித்தாள்களின் மங்கிய வரிகளில் எதையோ மும்முரமாகத் தேடிக் கொண்டிருந்தான்.. இவன் அவனுக்கு ''தாங்க்ஸ்'' சொன்னான். அவன் 'ம்ம்' என்றான். இவன் அறையில் நுழைந்தான். இரண்டு மூன்று பேர் உள்ளே இருந்தார்கள். இருக்கைகள் நிரம்பியிருந்தன. இவன் ஒதுங்கியே ஒரு மூலையில் நின்றான்:

''நம்ம மந்திரிக்கு ரொம்ப வேண்டப்பட்ட ஆளு... டைரக்டரு.'' ஓ.கே. பண்ணிட்டாரு.... நீங்க கொஞ்சம் தயவு பண்ணி....''

''அட என்னங்கண்ணே நீங்க... நம்ம விஷயத்துல அப்பிடி இருக்க முடியுங்களா... நேத்தே டெஸ்பாட்ச் பண்ணியாச்சண்ணே. நீங்க சொல்லி என்ன செய்யாம இருந்திருக்கோம்... என்ன நாஞ் சொல்றது...?''

''நன்றிங்க உங்களுக்கு; கிளம்பறேன்.''

''செய்யுங்க...அப்படியே அண்ணங்கிட்ட ஒரு சமாசாரம் சொல்லி ரொம்ப நாளாகுது... அதைக் கொஞ்சம் கவனிச்சா...''

''அந்த வெசயந்தானே... ஒங்களுக்குச் செய்யாமயா... முடிச்சிருவோம்... தலைவர் வந்திரட்டும்... கவலையை விடுங்க... அப்ப வரட்டுங்களா....''

''நெனவு வெச்சிக்கிடுங்க....''

''சொல்லணுமா... வாரேன்.'' அவர்கள் போனதும், ''வரவர இந்தப் பசங்களாலே படா பேஜாராப் போச்சப்பா'' என்று முணுமுணுத்தபடியே ஸீட்டில் அமர்ந்தார். இவனை ஒரு முறை அவர் பார்த்ததாகத் தோன்றிற்று. இவன் அவருடைய பார்வையில் பல முறை ஏமாந்திருக்கிறான். மௌனமாக மறுபடியும் அவர் பைலில் அமிழ்ந்தார்.

திடீரென்று அவருடைய குரல் சுவாரஸ்யமின்றி ஒலித்தது.

''வாட் கேன் ஐ டு ஃபார் யு?''

குறைந்தது ஒரு நூறு முறையாவது இவன் அந்த மனிதரைச் சந்தித்திருக்கக் கூடும். ஒவ்வொரு முறையும் இந்தக் கேள்வியை அவரால் கேட்காமல் இருக்க முடிந்ததில்லை.

''உம்...உங்க விஷயத்தைச் சொல்லுங்க.''

சொன்னான் — அப்பாவைப் பற்றி, கல்யாணியைப் பற்றி, அந்தப் பைலைப் பற்றி, அதில் வரவேண்டிய தொகையைப் பற்றி. அதைத் தன்னுடைய குடும்பம் எவ்வளவு மோசமான நிலையில் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது என்பது பற்றி. இவன் சொல்லிக் கொண்டிருக்கையில் அவர் போனில் பேசிக் கொண்டிருந்தார். இவனுக்குத் தான் அழுது விடுவோமோ எனத் தோன்றிற்று. இவன் முன்னால் தன்னால் அழ முடியாது.

''ஸார்...''

''நீங்க நாளைக்கு வாங்கோ! இப்போ நான் அவசரமா செகரட்டரியைப் போய்ப் பார்த்தாகணும்! வேணுங்கிறதைச் செய்து வைக்கிறேன்!''

''மன்னிக்கணும் சார். ஏற்கனவே அஞ்சு வருஷம் ஆயிடுத்து. தயவு செய்து...''

''அதுக்கு நான் என்ன செய்ய முடியும்? நாங்க என்ன சும்மாவா உட்கார்ந்துக்கிட்

டிருக்கோம்? நான் என்ன பண்ண முடியும் சொல்லு. மேலதிகாரியின் ஆணைக்கு உட்பட்டுத்தான் நான் நடக்க முடியும். உன்னுடையதை நிறுத்தி வைக்கணும்னு எனக்கு என்ன ஆசையா என்ன?''

இவன் மறுபடியும் கெஞ்சினான். வெறுப்புடன் மணியை ஒலித்தார். அவருடைய கோபம் பெல்லின் குரலில் விகாரமாகத் தொனித்தது. நாலைந்து தடவை அழுத்திய பிறகே பியூன் வந்தான்.

''நம்பிராஜனை வரச்சொல்லு.''

''அவர் வீட்டிலே இல்லே ஸார்.''

''கோவிந்தனை வரச்சொல்லு.''

''சரி சார்.''

சற்று நேரத்தில் சோடா பாட்டில் கண்ணாடியுடன் ஒருவன் வந்தான்.

''இந்த பைல் என்னையா ஆச்சு?''

''எந்த பைல் சார்?''

''அதான்யா அந்த ராமநாதன் பேப்பர்ஸ். நீங்களெல்லாம் என்னய்யா பண்றீங்க?''

''அதெ நான் டீல் பண்ணலே சார்.''

''பின்னே யார் பண்றது?''

''பட்டாபி சார்.''

''அவன் கிழிச்சான். அவனை வந்தவுடனே என்னைப் பார்க்கச் சொல்லு.''

''சரி சார்.''

பட்டாபி இவனுக்குப் புதியவனில்லை. இந்த பைல் ஆரம்பிக்கப்பட்ட பிறகு பட்டாபி எட்டாவது ஆள். இவனுக்கு முன்பிருந்த ரங்காராமானுஜத்திலிருந்து ரோசப்வரை அதற்கு விடிவு வரவில்லை. ஒவ்வொரு முறை இவன் வரும்போதும் புதிய பிரச்னைகள் உருவாகியிருந்தன. இந்தக் குறிப்பிட்ட கேஸில் சர்க்கார் ஜி. ஓ. தெளிவாக இல்லை. இதில் உள்ள சிக்கலைத் தீர்ப்பதற்கு இந்த அலுவலகத்திற்கு அதிகாரம் போதாது. ஏ. ஜி.யின் பிரத்யேகமான ஒப்புதல் வேண்டும். அவர்களால் காரணங்களை மிகக் கலபமாய்ச் சொல்ல முடிந்தது. இப்போது பட்டாபி வருவான்... புதிதாக வேறு ஏதாவது சொல்வான்.

''கூப்பிட்டீங்களாமே ஸார்.''

''அந்த ராமநாதன் பைல் என்னாச்சய்யா? உடனடியாகப் பைசல் பண்ணியாகணும்.''

''அக்கௌண்டண்ட் ஜெனரல் ஒப்புதலுக்கு அனுப்பி ஒரு வருஷம் ஆவுது சார். இதுவரை பதில் வரவில்லே.''

அவர் பட்டாபியை ஒருமாதிரியாகப் பார்த்தார்.

''நீ போய் பைலைக் கொண்டாய்யா. நானே பார்க்கிறேன்.''.

வெகு நேரம் கழித்து முழுவதும் கிழிந்திருந்த ஒரு பைலுடன் அவன் வந்தான். அவர் பார்வை அங்கேயும் இங்கேயும் அலைந்தது.

''வாட் நான்ஸென்ஸ் மிஸ்டர் பட்டாபி. இன்னும் அந்தப்பேப்பர் டெஸ்பாட்ச் ஆகலே. பில்கள் அப்படியே இருக்கு... வாட் த ஹெல். நீ என்ன பண்ணிண்டிருக்கே இங்கே? இனிமே எப்ப அனுப்பி எப்ப சாங்ஷன் ஆறது?''

''இல்லே சார். அந்த பர்ட்டிகுலர் கேஸ்லே அந்தச் சாவு இயற்கையா, தற்கொலையான்னு....''

''போய்யா நீயும் உன் சமாதானமும்... தாமதத்துக்குக் காரணம் எழுதி இன்னிக்கே டெஸ்பாட்ச் பண்ணு.... என் தலையெழுத்து ஒன்னையெல்லாம் கட்டிண்டு மாரடிக்கவேண்டியிருக்கு.... ஏன் நிக்கறே. போ.''

அவன் நகர்ந்தான்.

''நான் மிகவும் வருந்துகிறேன் மிஸ்டர் தியாகராஜன். இன்னும் ஒரு வாரத்தில் உங்க பைலை முடித்துவிடுகிறேன். தயவு செய்து இவற்றையெல்லாம் பொருட்படுத்தாதீர்கள்'' என்றவர் மணியை ஒலித்தார். ''ஒரு காப்பி கொண்டா'' என்றார்.

மூடு கதவை அறைந்து சாத்திவிட்டு இவன் வேகமாக இறங்கி நடந்தான்.

அப்பா இறந்துபோன அந்த வெய்யில் காலத்து மத்தியானம் இவனுக்கு ஞாபகம் வந்தது.




அழகிய பரிசு!
இலவசம்!
நீங்கள் வாங்கும்
ஒவ்வொரு
ரூ 100/-
பில்லுக்கும்
ஒரு அழகிய
பிளாஸ்டிக்
கைகுப் பை
இலவசமாக
உண்டு!
உங்கள் அபிமான
ஓவியர் கல்பனாவின்
புதிய ஜவுளிக்கடை
சுபலக்ஷ்மி
வண்ணத் துணிகளின் வசந்த மாளிகை
17-C, ரங்கநாதன் தெரு, மாம்பலம்
சென்னை-600017.

ஏற்கப்படாத எடிஸன் கருவி!



தாமஸ் ஆல்வா எடிஸன் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்த ஒரு கருவியைக் கண்டுபிடித்தார். அங்கத்தினர் மசோதாவுக்கு ஆதரவு தருவதை அல்லது எதிர்ப்பதை உணர்த்த எதிரே உள்ள இரு பித்தான்களுள் ஒன்றை அழுத்தினால் போதும். வாக்கெடுப்பு பதிவாகிச் சில விநாடிகளில் முடிவு தெரிந்து போகும். இப்படி ஓர் அற்புதக் கருவியைக் கண்டுபிடித்ததற்காக மிக மகிழ்ந்து சில தலைவர்களிடம் பேசினார் எடிஸன். 'ஐயய்யோ கூடவே கூடாது! அதை ஏற்கவே முடியாது!' என்று அவர்கள் பதறித் துடித்தார்கள். காரணம் வினவியபோது விளக்கம் கிடைத்தது.

மெதுவாக, நிதானமாக வோட்டுப் பதிவாகும் போது மசோதா வோட்டுக்கு விடப்படும் தருணத்துக்கும் வோட்டுப் பதிவு செய்யும் சமயத்துக்கும் இடைப்பட்ட நேரத்தில் உறுப்பினர் புனராலோசனை செய்யக் கூடும். அவர் மனம் மாறுவதும் சாத்தியம். ஆனால் பித்தானை அழுத்துவது என்று வந்து விட்டால் புனராலோசனை, மனமாற்றம் என்பதற்கு வாய்ப்பே இராது. இதைப் புரிந்து கொண்டதும் தமது கருவி ஏற்கப்படாது என உணர்ந்தார் எடிஸன். அன்றே ஒரு தீர்மானத்துக்கு வந்தார். எந்த ஒரு புதுமையையும் சிருஷ்டிக்கு முன்னர் அது ஏற்கப்படுமா என்று சிந்திப்பது. ஏற்கப்படும் என்று உறுதி பிறந்தபிறகே தயாரிப்பது. —நன்றி - அமெரிக்கன் ரிவ்யூ

ஜானகி சபதம்

மூத்தவள் தந்தையை இழந்ததும், தானே தந்தையின் நிலையில் இருந்து கொண்டு தங்கையைச் சிரமப்பட்டுப் படிக்க வைத்து ஜில்லாக் கலெக்டராக்கிவிடுகிறாளாம். இதற்காகத் தன் திருமணத்தைத் தள்ளிப்போட்டுக் கொண்டே வருகிறாளாம். கிராமத்துக் கர்ணமாக வேலை பார்க்கும் அவளைக் காதலித்தவன் கல்யாணத்துக்குப் பணம் போதாத நிலையில் கர்ணத்தைப் போலவே பொய்க் கையெழுத்திட்டுப் பணம் பெற்றுக் கடைசி நிமிஷத்தில் கைது செய்யப்படுகிறானும்; அப்புறம் பல தவறான வழிகளில் பணம் பண்ணி அந்தப் பெண்ணையே மணந்து கொள்ள முயல்கிறான். இப்படித் தொடங்குகிற கதை அப்புறம் எப்படியெல்லாமோ போகிறது.

கிராமக் கர்ணமாக வரும் கே. ஆர். விஜயா தமது குளிர்ந்த புன்னகையாலும், பொருள் பொதிந்த பார்வையினாலுமே தம் பாத்திரத்தை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார். கிராமத்துப் பெரிய தனக்காரர்களுடன் மோதி அவர்களுடைய பலத்த எதிர்ப்புக்கும், இடையூறுகளுக்கும் இடையே பக்கத்து ஊர் ஆஸ்பத்திரிக்கு ரஸ்தா போடும் வேலையைத் தான் ஒருத்தியாகவே செய்து முடிக்கும் கிராமக் கர்ணத்தின் மன உறுதியைக் கே. ஆர். விஜயாவிடம் பரிபூரணமாகக் காண முடிகிறது.

'வெண்ணிற ஆடை' நிர்மலா துடி இடையும், பொடி நடையுமாக வந்து போனாலும் ஒரு கலெக்டருக்குரிய கம்பீரத்தை அவரிடம் காண முடியவில்லை. கலெக்டர் வேலையைவிடக் காதல் லீலைகளில் சக்கைப் போடு போடுகிறார். நம் படங்களில் அது போதுமானதுதானே! பெண் கலெக்டரைக் காதலிப்பவர் விஜயகுமார். அவரும் தம் வேலையை ஒழுங்காகச் செய்கிறார், காதல் லீலைகளில்தான்!

தேங்காய் சீனிவாசன், கருணிராஜன், மனோரமா ஆகியவர்கள் வந்து தங்கள் விடாமுயற்சியால் நகைச்சுவைக் காட்சிகளுக்கு உயிர் கொடுக்க முயன்றிருக்கின்றனர். பாவம், நகைச்சுவை!

ரவிச்சந்திரன் ஆக்கப் பொறுத்தும், ஆறப் பொறுக்காத காதலனாக வந்து பின்னால் வில்லனாக மாறிக் கதாநாயகியைத் துன்புறுத்துகிறார். பொய்க் கையெழுத்து, திடீர்ப் பணம் எதுவும் அவரைக் காப்பாற்றவில்லை. ஒரு முறை தவறு செய்தது மட்டும் அல்லாமல் பல முறையும் தவறு செய்யும் காதலனை (வில்லனை?) ஏனோ கண்டிப்புக்கும் கண்டிப்புக்கும் பேர் போன அந்தக் கிராமக் கர்ணம் கை கழுவி விடவில்லை?

சேகரும், ரோஜா ரமணியும் 'டீன் ஏஜ்' காதலர்கள்; அளவுக்கு மீறிக் கட்டிப் புரள்கிறார்கள். ஆனால் திரைக் கதையோடு அவர்களுக்கு என்ன சம்பந்தம்? சின்னப்பெண் பேபி ராணியின் வயதுக்கு மீறிய பேச்சுக்களை 'சென்ஸார்' எப்படி அனுமதித்தனர்! அதுவும் திரைக் கதையோடு தொடர்பில்லாததை வெட்டுவதில் சிரமம் என்ன வந்துவிடப் போகிறது?

'ஜானகி சபதம்' போன்ற படங்களைத் தயாரிப்பதில்லை' என்று படாதிபதிகள் சபதம் செய்வது நல்லதா, மக்கள் 'அவற்றைப் பார்ப்பதில்லை' என்று சபதம் செய்வது நல்லதா? எது நல்லது? —காந்தன்



19. கல்விப் பிரச்னை

கற்ற வழியாயினும் மற்ற வழியாயினும்
வெற்றி பெறின் அதுவேயாம் உற்றவழி

பொன்னியின் புதல்வர்

சுந்தா



ஜில்லி ஜில்லி என்று ஒரு கற்பனை நாய்; அதைத் ''தியாக பூமி'' நாவலில் கல்கி படைத்து, கதாநாயகியின் குழந்தை சாருவுடன் விளையாட விட்டார். ஜிம்மி ஜிம்மி என்று ஒரு கறுப்பு நாய்; அதை அவர் தம் போக் ரோடு வீட்டில் வளர்த்துத் தமது குழந்தைகளுடன் விளையாட விட்டார். அது தவறிப் போன பிறகு, அதன் பெயரையே வெள்ளை நாய் ஒன்றுக்குச் சூட்டி, தாம் அடுத்தாற்போல் குடி மாறிய டாக்டர் குருசாமி முதலியார் வீட்டில் வளர்த்தார்.

துமிலன் எழுதிய கட்டுரை ஒன்றில், அந்த இரண்டாவது ஜிம்மி பற்றிச் சுவையான சில வரிகள் இருக்கின்றன. சிந்தனை செய்து கொண்டே கூண்டுப்புலி போலக் கல்கி நடை பயிலுகையில் அந்த வெள்ளை ஜிம்மி இப்படியும் அப்படியும் தலையை அசைத்து வேடிக்கை பார்க்குமாம். அந்தக் காட்சியைத் துமிலன் வர்ணிக்கையில், ''அமெரிக்க ஹாஸ்ய ஆசிரியர் ஜேம்ஸ் தர்பர் மாதிரி, அவரும் தன்னைப் பற்றி ஒரு நல்ல நாய்க் கதை எழுதக் கூடாதா என்று அது எண்ணிக் கொண்டிருந்திருக்குமோ என்னமோ?'' என்கிறார். அவ்வாறு அது எண்ணியிராவிட்டாலும், தனக்கு வேடிக்கை காட்டுவதற்காகத்தான் எசமானர் அப்படி நடை போடுகிறார் என்று நிச்சயமாய் எண்ணி இருக்கும்:

அந்த ஜிம்மி செய்து காட்டிய வித்தைகளையும் அதனுடன் விளையாடிய விளையாட்டுக்களையும், ஆனந்தியும் தம்பி ராஜேந்திரனும் இன்னமும் நினைத்துக் கொண்டு கதை கதையாகச் சொல்லுகிறார்கள். அந்தக் கதைகளுடன் அவர்கள் சொல்லாத ஒன்றும் உண்டு.

அவர்கள் ஜிம்மியுடன் எப்போது விளையாடினாலும் எவ்வளவு விளையாடினாலும், மகிழ்ச்சியுடன் கல்கி பார்த்துக் கொண்டிருப்பார். ஆனால், பள்ளிக்கூடத் தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருந்த ஒரு சமயத்தில், அவர்கள் பாடம் படிக்காமல், ஜிம்மியுடன் வெகு நேரம் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டதும் அவருக்குக் கடும் கோபம் வந்து விட்டது. ''உங்களுக்கு எப்போதுதான் விளையாடுவது என்பது கிடையாதா? படித்துப் பாஸ் பண்ண வேண்டுமே என்று கொஞ்சம்கூடக் கவலை இல்லையே! பரீட்சை முடிகிற வரை, ஜிம்மிகிட்டே போங்கள் சொல்கிறேன்!'' இவ்வாறு கூப்பாடு போட்டுவிட்டு, தமது கோபத்தை ஜிம்மி மீது திருப்பி, அதைக் கரகரவென இழுத்துக் கட்டிப் போட்டுவிட்டார்.

அப்பாவின் கோபத்தைக் கண்டு நடுங்கிப்போன மகளும், மகனும், தத்தம் அறைகளில் பதுங்கி, அழுது கொண்டே பாடப் புத்தகங்களைப் புரட்டினார்கள். சங்கிலியில் கட்டுண்ட ஜிம்மியும் ஓலமிட்டு அழுதது.

கல்கியின் கோப நடவடிக்கை நியாயமானதே என்று, இதை வாசிக்கும் பெற்றோர்கள் கருதி அவரை மெச்சுவார்கள் என்பதில் ஐயமில்லை: ''படிக்கிற பிள்ளைகளிடம் இப்படித்தான் கண்டிப்பாய் இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் உருப்படமாட்டார்கள்'' என்பார்கள். ஆனால் அந்தோ! அவர்களுக்கு என்ன ஏமாற்றம்! இப்போது சொன்னது வெறும் கட்டுக் கதை!

ஜிம்மி என்றொரு வெள்ளை நாய் கல்கியின் வீட்டில் இருந்தது என்பது உண்மை; அதனுடன் சிறுவனும் சிறுமியும் விளையாடுவார்கள் என்பதும் உண்மை. ஆனால் தேர்வு சமயத்தில் அதனுடன் விளையாடியதற்காக அவர்களைத் தந்தை சண்டை பிடித்து அழவைத்துப் படிக்கச் செய்தார் என்பது, வேண்டுமென்றே எதிர்மறையாய்ச் சொன்ன பொய். அப்படி அவர் ஒருபோதும் நடந்து கொள்ள மாட்டார், நடந்து கொண்டதில்லை என்பது, ஒரு

சமயம் குற்றாலத்திலிருந்து அவர் எழுதிய இரண்டு கடிதங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:



ஆனந்திக்கு (6-4-46)

பரீட்சை நெருக்கடிக்கும் 'பிரைவேட்' வாத்தியார்களுக்கும் மத்தியில் அவகாசம் கண்டுபிடித்துக் கடிதம் எழுதியதற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

இந்த வருஷம் கொஞ்சம் சிரமப்பட்டுப் பரீட்சையை முடித்து விட்டீர்களானால், அடுத்த வருஷத்திலிருந்து கஷ்டமே இராது. எல்லாம் சௌகரியமாய்ப் போய்விடும். பரீட்சைக்கு நன்றாய்ப் படிக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் பரீட்சையிடம் பயப்படக்கூடாது. படித்துத் தெரிந்து கொண்டதை நன்றாய் எழுதினால் கட்டாயம் பாஸ் ஆகிவிடும்.

முக்கியமாகத் தம்பியிடம் தமிழ் இலக்கணத்தைக் கண்டு பயப்பட வேண்டாம் என்று சொல்லவும். இந்த வருஷம் அவன் தமிழ் இலக்கணத்தை விட்டுவிட்டு மற்றதெல்லாம் எழுதினால் போதும். தமிழ் இலக்கணம் நானே அவனுக்கு அப்புறம் சொல்லிக் கொடுத்து விடுகிறேன்.





○ சென்னையில் நடந்த பாரதி விழா ஒன்றில் கவி நாமக்கல் தலைமை தாங்கியபோது 'மைக்'கில் பிரார்த்தனை கீதம் பாடுவது மகள் ஆனந்தி. ○ ஸ்ரீ டி. என். ஸுப்பிரமணியம். ○ குருகுலக்கல்வி பரிசைமிட்டு அவற்றை மெச்சிப் பேசினார். எழுதினார். ஆயினும், பின்னர் தமது கடிதம் ஒன்றில் அவற்றின் குறைகளைச் சுட்டிக் காட்டினார். பக்கத்தில் ஸனாதன பாத இந்து மத பாடசாலை மாணவர்களின் சங்கம். பக்கத்தில் நின்று அண்ணாந்து பார்ப்பவர் திருமாளிகைமணி முதலியார். ○ ஸ்ரீ எஸ். கே. ராமச்சந்திரன்.

ராஜேந்திரனுக்கு (9-6-46)

சீக்கிரத்தில் உங்களுக்குப் பரீட்சை ஆரம்பமாகிவிடும். எல்லாப் பரீட்சைகளிலும் நீங்கள் சக்கைப் போடு போட்டு விடுவீர்கள். அதற்காகக் கவலைப்பட வேண்டாம். தெரிந்த கேள்விகளுக்குத் தயக்கம் இல்லாமல் பதில் எழுதிவிடுங்கள். ஆனால்எழுத்து மாத்திரம் கொஞ்சம் நன்றாய் இருக்க வேண்டும். அப்பாவுக்குக் கடிதம் எப்படி எழுதினாலும் பாதகம் இல்லை. ஆனால் வாத்தியார்கள் அப்பாவைப் போல் ஆசையோடு பார்க்க மாட்டார்கள். எழுத்து கோணலாய் இருந்தால் அவர்களுக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிடும். கோபத்தில் சரியான விடை கூடத் தப்பாக அவர்களுக்குத் தோன்றும். மார்க்கைக் குறைத்துப் போடுவார்கள். ஆகையால் பரீட்சைக்குப் பதில் எழுதும்போது, எழுத்து நன்றாய் இருக்க வேண்டும். முதல் ஒரு பக்கமாவது திருத்தி அழகாக எழுத வேண்டும். இரண்டாவது பக்கத்திலிருந்து அவசரமாய் எழுதினால் பாதகமில்லை. ''பையனுக்குக் கையெழுத்து





பக்வாஷ்

சமீபத்தில் சென்னையில் பக்வாஷ் மகாநாடு நடந்தது. 1952ல் கனடாவில் நோவாஸ்காஷியா மாவட்டத்துக்கு அருகில் உள்ள பக்வாஷ் என்ற சிற்றூரில் இருபத்திரண்டு விஞ்ஞானிகள் கூடி மனித குல முன்னேற்றத்துக்காக என்ன செய்யலாம் என்று பேசினார்கள். அதிலிருந்து ஆண்டுதோறும் நடக்கும் இந்தக் கூட்டத்துக்கு பக்வாஷ் மாநாடு என்ற பெயர் நிலைத்துவிட்டது. - பாலி - லைன்ஸ் டுடே

நன்றாய் இருக்கிறது: ஏதோ அவசரத்தில் இறுக்கித் தள்ளிவிட்டான்'' என்று வாத்தியார் எண்ணிக் கொள்வார்.

இவற்றில் முதல் கடிதத்தில், தமிழ் இலக்கணம் பற்றிக் கல்கி குறிப்பிட்டிருக்கிறார் அல்லவா ? அதைப் பள்ளிகளில் கற்பிக்கும் முறையை அவர் தாக்கி இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ''பெற்றோன்'' என்ற புனைபெயரில் தமது பத்திரிகையில் எழுதினார். அந்த முறை எவ்வளவு கேடானது என்பதுடன், ''கல்கி வளர்த்த தமிழ்'' எனப் போற்றும்படியாய், தமிழ் வளத்தைப் பெருக்கியவர், ''கல்கித் தமிழ்'' என்ற இனத்தையும் இலக்கியத்தையும் படைத்தவர், தமிழ் இலக்கணம் பற்றி எவ்விதக் கருத்தும் சுய அனுபவமும் கொண்டிருந்தார் என்பதையும் அதிலிருந்து புரிந்துகொள்ளலாம்:

நான் ஹைஸ்கூலில் படித்த காலத்தில் 'டைரக்ட் மெதட்'' என்னும் முறை சிலாக்கியமாகக் கருதப்பட்டது. அதாவது பாஷையைக் கற்பிக்கும்போது நேர்முகமாகப் பாஷையைப் படிக்கவும் பேசவும் எழுதவும் கற்பித்தார்கள். படிக்கச் சொல்லி அதன் பொருளை விளக்கினார்கள். எழுதச் சொல்லி அதிலுள்ள பிழைகளைத் திருத்தினார்கள்.

பாஷையைக் கற்பதற்கு இலக்கணம் அவசியம் இல்லை என்று கருதப்பட்டது. ஹைஸ்கூல் வகுப்புகளில் பிழையின்றிப் பேசவும் எழுதவும் அவசியமான அளவு இலக்கணம் கற்பித்தால் போதும் என்று அந்த நாளில் இருந்தது.

நான் ஹைஸ்கூலில் படித்தபோது நன்னூல் சூத்திரம் ஒன்றுகூடக் கற்றதில்லை.

இப்போது ஐந்தாவது பாரத்துக்கு ஐம்பத்தாறு நன்னூல் சூத்திரங்கள் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றைப் பாருங்கள்:

''அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம் ஏம் ஓம் இவை படர்க்கை யாரையும்
உம் ஊம் கடதற இருபாலாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை.''

இம்மாதிரி ஒரு வருஷத்தில் ஐம்பத்தாறு சூத்திரங்களை ஒரு பதினைந்து வயதுக் குழந்தை மனப்பாடம் செய்ய வேண்டும். அதற்குப் பொருளும் தெரிந்துகொள்ள வேண்டும்! அவ்வளவையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந்து பரீட்சையில் எழுத வேண்டும்.

இப்படி நான் சொல்வதிலிருந்து நான் இலக்கணத்துக்குப் பரம விரோதி என்று சில நண்பர்கள் தீர்மானித்து விடக்கூடும். ஆனால் அது உண்மை அன்று.

மொழி ஆராய்ச்சி மிக அபூர்வமான சுவையுடைய விஷயம். இலக்கணமும் அப்படித்தான். ஆனால் இவையெல்லாம் பாஷையில் தேர்ச்சி யடைந்த நிபுணர்களுக்குத்தான் சுவையளிக்கும். கலாசாலையில் படிக்கும் மாணாக்கர்களுக்கு — இலக்கியச் சுவை நன்றாய்க் கண்டவர்களுக்கு — ஓரளவு இலக்கணம் கற்பிக்கலாம். மொழி ஆராய்ச்சியையே முக்கிய பாடமாக எடுத்துக் கொள்கிறவர்கள் இலக்கணத்தைப் பரிபூரணமாய்க் கற்க வேண்டும். மற்றவர்களுக்கெல்லாம் மொழியைப் பிழையின்றி எழுதுவதற்கு வேண்டிய இலக்கணம் கற்பித்தால் போதும் அல்லவா? இதற்கு வேண்டிய இலக்கணத்தைப் பிள்ளைகளுக்கு ஒரே மாதத்தில் சுலபமாய்க் கற்றுக் கொடுத்து விடலாமே? (கல்கி இதழ் 2-5-48)

இந்தப் பகுதி, ''எத்தனை நாள் இந்தக் கொடுமை?'' என்ற வேதனைக் கேள்வியைத் தலைப்பாய்க் கொண்ட ஒரு கட்டுரையில் உள்ளது. அதே கட்டுரையில், ஆங்கில மொழி, சரித்திரம், பூகோளம், கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றைக் கற்பிக்கும் கேடான முறைகளையும் கல்கி தாக்கி இருந்தார். அதைத் தொடர்ந்தும் சில கட்டுரைகள் எழுதினார். அவற்றில் ஒன்று, ''பரீட்சை என்னும் பாதகம்'' பற்றியது ; இன்னொன்று, ''பாடப் புத்தகக் கொள்ளை'' பற்றியது. (இவை யாவும் ''திருமகளும் கலைமகளும்'' என்ற நூலில் தொகுப்பாய் வந்துள்ளன.)

கேடுகளைத் தாக்குவதோடு நில்லாமல் நல்ல சீர்திருத்த யோசனைகளையும் தெரிவித்தார் கல்கி. அப்போது நாடு சுதந்திரம் அடைந்து, நம்மவர்களே எதையும் இச்சைப்படி செய்து கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தது. அதனால்தான் அந்தச் சமயம் பார்த்துத் தமது யோசனைகளை அவர் வெளியிட்டார். அந்த யோசனைகளுக்கு, வெவ்வேறு தரப்பாரிடையே மனத்தளவில் நிறைய விளைவுகள் உண்டாகத்தான் செய்தன; ஆனால் செயல் அளவில் நேரடியான,

உடனடியான விளைவுகள் இல்லை. மாறாக, சீர்திருத்தம் என்ற பெயரால் சில சீர்கேடுகள் தோன்றின. அவற்றைக் 'குரங்குத் தனம்' என்று கண்டித்தார் கல்கி.

நல்ல கல்வி நோக்கமும் உயரிய குறிக்கோள்களும் கொண்ட சிலர், அங்கங்கே நடத்திக் கொண்டிருந்த குருகுலங்களைக் கல்கி பார்வையிட்டு, அவற்றை மெச்சிப் பேசினார், எழுதினார். அவற்றின் மேம்பாட்டுக்காகவும் நிதி உதவிக்காகவும் தமது செல்வாக்கைப் பயன்படுத்தினார். ஆயினும், பின்னர் தமது கல்விச் சீர்திருத்தக் கட்டுரை ஒன்றில், அவற்றின் குறைகளைச் சுட்டிக் காட்டினார் :

சர்க்காரிடம் கிராண்ட் வாங்குவதற்காக இந்த ஸ்தாபனங்களில் சர்க்கார் பாடத் திட்டத்தைக் கண்டிப்பாய் அநுசரிக்கவேண்டி இருக்கிறது. அதாவது அபத்தக் களஞ்சியங்களைப் பிள்ளைகளின் மூளைகளில் திணிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், சர்க்கார் கல்வித் திட்டப்பாடங்கள் மட்டும் போதுமா? குருகுலம், வித்தியாலயம், ஆசிரமம் என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பதை முன்னிட்டு அதிகப்படியாக ஏதாவது கற்பிக்க வேண்டும் அல்லவா? எனவே குழந்தைகளை மேலும் வாட்டுகிறார்கள். சிலப்பதிகாரத்தையும் கலித்தொகையையும் கரதலப் பாடமாக நெட்டுருப் பண்ணச் சொல்லுகிறார்கள். கைத்தொழில் பயிற்சி, டிரில் பயிற்சி எல்லாம் நடத்த வேண்டி வருகிறது. இஷ்டம் போல் ஓடி ஆடி விளையாடப் பிள்ளைகளுக்கு நேரமே கிடையாது. குறிப்பிட்டுள்ள காலத்தில் ஆசிரியர் மேற் பார்வையில் விளையாடவேண்டும்! இதுவிளையாட்டாகுமா? ஒரு நாளும் ஆகாது. இந்த நிலையில் விளையாட்டும் ஒரு பாடக் கடனாக மாறிவிடுகிறது.

(கல்கி இதழ் 7-8-49)

வழக்கப்படியான பள்ளிக்கூடமாயினும் சரி, குருகுல மாதிரியிலான பள்ளிக்கூடமாயினும் சரி, அது குழந்தைகளுக்குச் சிறைக்கூடமே என்று கருதினார், கல்கி போற்றிய அறிஞர் டி.கே.சி. இயற்கைச் சூழலில், இயற்கையான முறையில், கட்டுப்பாடும் இடையூறும் இன்றிக் குழந்தைகள் கல்வி கற்க வேண்டும். நேராகப் பார்த்தும் கேட்டும் விஷயங்களை மனத்தில் ஈர்த்துக் கொள்ள வேண்டும். நெட்டுருப் போடக் கூடாது; பாடப் புத்தகங்கள் கூடாது; பரீட்சையோ கூடவே கூடாது. டி.கே.சி.யின் இந்தக் கருத்துக்களில் கல்கிக்கு முழு உடன்பாடு உண்டு.

இந்தக் கருத்துக்களின்படியே, இயற்கைக் கல்வி வளர்ப்புப் பண்ணை ஒன்றை நடத்துவதெனக் கல்கியும் டி.கே.சி.யும் ஒரு சமயத்தில் தீர்மானித்தார்கள். அதிலே, கல்கியின் குழந்தைகள், டி.கே.சி.யின் பேரக் குழந்தைகள், மற்றும் மனமொத்த நெருங்கிய நண்பர்களின் குழந்தைகள் ஆகியோரை முதலில் சேர்த்துக் கொள்வது என்று திட்டம் இட்டார்கள். ''தமிழ்ப் பண்ணை'' என அதற்குப் பெயர் வைப்பது என்றும் முடிவு செய்தார்கள். ஆனால் அந்தப் பண்ணை, பலவித காரணங்களால், யோசனை வடிவிலேயே நின்றுவிட்டது. அவர்கள் அதற்கு வைப்பதாய் இருந்த பெயர் மட்டும், பின்னர் ஒரு புத்தக வெளியீட்டகத்துக்குப் பயன்பட்டது.


கல்வி கற்கும் வயதைக் கல்கியின் குழந்தைகள் அடைந்த சமயத்தில், அவருடைய வாழ்க்கை நிலை நிச்சயமற்றதாய் இருந்தது. தமிழ்ப் பண்ணைத் திட்டம் உருப்பெறாமல் போனதற்கு அது ஒரு முக்கிய காரணம்.

மூன்றாவது சிறைவாசம் முடிந்து, போக் ரோடு வீட்டில் கல்கி இருந்து கொண்டு, சொந்தப் பத்திரிகைக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தபோது, டி. என். சுப்பிரமணியராவ் என்ற இளைஞர், தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு வேலை தேடி வந்து அவருடைய உதவியை நாடினார். அவரைத் தம் குடும்பத்தில் ஒருவராய்க் கல்கி ஏற்று, வேலை வாய்ப்புக்கு வேண்டிய பயிற்சிகள் பெறுவதற்கு உதவி செய்தார். அந்த இளைஞர் மூலமே தமது குழந்தைகளுக்கு அவர்கள் விரும்பி ஏற்கும் விதத்தில் ஆரம்பப் பாடங்கள் கற்பித்தார். சுப்பிரமணிய ராவ் வேலை கிடைத்துப் போன பிறகு, குழந்தைகளின் படிப்பு, ஒரு கான்வெண்ட் உள்பட இரண்டு மூன்று, பள்ளிகளில் விட்டுவிட்டு நடைபெற்றது.

குருசாமி முதலியார் வீட்டுக்குக் கல்கி குடிமாறியதும், குழந்தைகளின் படிப்பு முறையும் ஒரு நிலையான கட்டத்துக்கு மாறியது. புரசவாக்கத்தில், எம். ஸிடி. முத்தையா செட்டியார் பள்ளியில் ஆசிரியராய் இருந்த எஸ். கே. ராமச்சந்திர அய்யர், அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார். பின்னர் அவரே லேடி முத்தையா செட்டியார் பள்ளியில் ஆனந்தியையும், தமது பள்ளியில் ராஜேந்திரனையும் சேரச் செய்தார். இருவரும் எஸ்.எஸ். எல். ஸி. தேறுகிற வரை வீட்டிலும்

ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் கண் பார்வை இல்லாதவர்கள் தடவிப் பார்த்தே புரிந்துகொள்ளும்படியாகக் கரன்ஸி நோட்டுகளின் ஒரு மூலையில் சிறு துவாரங்கள் போடப்பட்டு உள்ளனவாம். - இந்துஸ்தான் டைம்ஸ் - பாபு





ஒரே சமயத்தில் இரண்டு அரசு அலுவலகங்களில் ஒருவரே வேலை பார்த்திருக்கிறார்; சம்பளமும் வாங்கியிருக்கிறார்.

பதினெட்டு வருடங்களாக அவர் ரயில்வேயில் உதவியாளராகவும், அதே சமயம் தபால், தந்தி அலுவலகத்தில் சார்ட்டராகவும் வேலை பார்த்து இரண்டு அலுவலகங்களிலிருந்தும் பதினெட்டு வருடங்களாகச் சம்பளமும் வாங்கி இருக்கிறார். ரயில்வே போர்டின் புலனாய்வுத் துறையினரால் அவரது மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- தி ஸ்டேட்ஸ்மன் — சாமி

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

தொடர்ந்து பாடம் சொல்லிக்கொடுத்தார். சதாசிவத்தின் குமாரிகள் ராதாவுக்கும் விஜயாவுக்கும் அவரே வீட்டு வாத்தியாராக இருந்தார்.

''ஏன் இப்படிக் குழந்தைகளை ஜெயில்லே போட்டு வதைக்கிறீக?'' என்று டி. கே. சி., வருத்தத்துடனும் கோபத்துடனும் கல்கியையும் சதாசிவத்தையும் கேட்டுக் கொண்டேயிருந்தார். தமது பேரப் பிள்ளைகளை அவர் ''சிறைக் கூடம்'' அனுப்பாமல் தம் இச்சைப்படியான இயற்கை முறையிலேயே கல்வி கற்கச் செய்தார்.

போகட்டும் என்று விடாமல் தொடர்ந்து டி. கே. சி. செய்த போதனையின் காரணமாய், தமது குமாரிகளின் கான்வெண்ட் படிப்பை நடுவிலேயே நிறுத்தி விட்டார் சதாசிவம். ''அவுக நிறுத்திப் போட்டாக, நீங்களும் நிற்பாட்டுங்க'' என்று கல்கியிடம் டி.கே.சி. எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் கல்கி இணங்கவில்லை. சம வயதுக் குழந்தைகளுடன் பழகும் வாய்ப்புக்காகப் பள்ளிக்கூடம் போய் வரவேண்டியது அவசியம் என்பது அவருடைய கருத்து. ''இந்தக் கல்கி இருக்காகளே, நான் சொல்கிறதைக் கேட்கிறதே இல்லை'' என்று பெரியவர் அங்கலாய்த்து, பொது நண்பர்களிடம் ஆவலாதி சொல்லிக் கொண்டேயிருந்தார்.

பள்ளி ஆசிரியர் ராமச்சந்திர அய்யரைக் கல்கியின் வீட்டில் காண நேரும் போதெல்லாம் அவர் மீது சாடுவார் டி. கே. சி. தற்காப்பாகவும் பள்ளிப் படிப்பை ஆதரித்தும் அந்த ஆசிரியர் தொடுக்கும் வாதங்களை எல்லாம் அடித்து நொறுக்குவார். ''பள்ளிக் கூடங்களை எல்லாம் தீயை வைச்சுக் கொளுத்தணும்'' என்பார்.

இவ்விதக் கொள்கை உடைய டி. கே. சி. மாமா, தம் வீட்டுக்கு வந்து தங்கும் போதெல்லாம், கல்கியின் குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டந்தான். அவருக்கு வெறுப்பான பாடப் புத்தகங்களை, அவர் கண்ணில் படாதபடி அவசியமான அளவுக்கு மட்டும் படித்துவிட்டு, அவருக்கு விருப்பமான விளையாட்டுக்களிலும் விஷமங்களிலும் ஈடுபடுவார்கள். ''ஒவ்வொன்றும் ஒரு வேடிக்கை நாடகமால்லா இருக்கு !'' என்று ரசிகமணி வியப்பார்.


ஒரு சமயம் அக்காவும், தம்பியும், குழந்தைப் படங்களை வெவ்வேறு சஞ்சிகைகளிலிருந்து வெட்டி எடுத்து ஒட்டி ஓர் ஆல்பம் உண்டாக்கினார்கள். அதை டி. கே. சி. பார்த்து, ''எம்புட்டு அருமையான பாப்பா மலர் போட்டுட்டீக!'' என்று புகழ்ந்தார். அதன் முகப்புப் பக்கத்தில், ''தாய்ப் பூ தாமரைப் பூ. தங்கத்து வீட்டுச் சண்பகப் பூ!'' என்று வரைந்து கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். வீட்டுக்கு வந்தவர்களிடம் எல்லாம் அந்தப் பாப்பா மலரை எடுத்துக் காட்டியும் அதில் தாம் எழுதிய பாடலைப் பாடிக் காட்டியும், அவர்களையும் குழந்தைகளையும் மகிழ்வித்துத் தாமும் மகிழ்ந்தார்.

எவ்வளவோ வேலைகளுக்கு இடையேயும், தமது குழந்தைகளின் விளையாட்டுக்களை ரசிப்பதற்கும், அவர்களுடன் தாமும் சேர்ந்து விளையாடுவதற்கும்; தந்தையார் கொஞ்சம் நேரம் தேடிக் கொள்வதுண்டு. அவர்களுக்கு மட்டுக்கு மிஞ்சியே செல்லம் கொடுப்பார். எதையேனும் அவர்கள் உடைத்துத் தகர்த்தாலும் கோபம் கொள்ளமாட்டார். ஆனால் அவர்கள் முரட்டுத்தனமாய் விளையாடிக் காயப்படுத்திக் கொண்டால் மட்டும் கடுங் கோபம் வந்துவிடும். வெயிலில் அலைந்தோ, மழையில் நனைந்தோ உடல் நலத்தைக் கெடுத்துக் கொண்டாலும் கோபம் வரும்.

பொதுவாகப் பிள்ளைகள் எல்லாருமே பள்ளியில் கொடுக்கும் முன்னேற்ற அறிக்கைகளைப் பயந்து கொண்டேதான் பெற்றோரிடம் காட்டுவார்கள். ஆனால் கல்கியின் குழந்தைகளுக்கு அவ்வித பயம் இருந்ததில்லை. மதிப்பெண்கள் மிகக் குறைவாய் இருந்தாலும், அது பற்றி வேடிக்கையாய்க் கல்கி குறிப்பிடுவாரேயன்றி, குழந்தைகளின் மனம் சோரும்படி ஏதும் சொல்ல மாட்டார். நல்ல மதிப்பெண்கள்

பெங்களூரில் ஓர் அரசு அலுவலகத்தில் உள்ள விதிகளில் ஒன்று: 'பிரசவக் கால விடுமுறை, கர்ப்பமுற்றிருக்கும் பணியாளர்களுக்கு மட்டும் அளிக்கப்படுவது. அப்படிப்பட்ட பணியாளர்கள் பெண்களாக இருக்க வேண்டும்.

காரவான்—ராமு



வாங்கி இருந்தால், அல்லது பரிசுகளுக்கு உரித்தாய் இருந்தால், தமக்கு வழக்கமான ''பலே பேஷ்கள்'' போட்டுப் பாராட்டுவார்.

ஏற்கனவே சொன்னபடி, தமது குழந்தைகளுக்கு நிறையக் கதைகள் சொல்லுவார் கல்கி; அவர்களையும் சொல்லச் சொல்லிக் கேட்பார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர்களுக்கு ஏற்றதாய் உள்ள கதைப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்த வண்ணம் இருப்பார்.

அப்பாவைப் போல் தாமும் கதைகள் எழுத வேண்டும் என்று இயல்பாகவே ஆனந்தியும் ராஜேந்திரனும் ஆசைப்பட்டார்கள். முதலில் அக்காதான் எழுத ஆரம்பித்தாள். ஏதேதோ எழுதுவாள்; அவற்றில் தனக்கே நல்லதாய்த் தோன்றுகிறவைகளை, அப்பா இல்லாத சமயம் பார்த்து, அவருடைய மேஜை மேல் வைத்துவிட்டு ஓடிவிடுவாள். பெரும்பாலும் அவர் ஏதும் சொல்லாமலே இருந்துவிடுவார்; அதிலிருந்தே, ஆசிரியர் — அப்பாவின் தீர்ப்பைப் புரிந்து கொண்டு சும்மா இருந்துவிடுவாள். அபூர்வமாய்ச் சில வேளைகளில் மட்டும், அவளை அவர் கூப்பிட்டு, எழுதி வைத்ததைச் சுருக்கியோ மாற்றியோ கொண்டு வரச் சொல்லி, தாமும் செப்பனிட்டுத் தமது பத்திரிகையில் வெளியிடுவார்.

அக்காவுக்கு இருந்த தைரியம் தம்பிக்கு இல்லை. தான் எழுதுவதைத் தானே படித்துப் பார்த்துவிட்டுக் கிழித்துப் போட்டுக் கொண்டிருந்தான். ஆனால், ''பாலுவின் பிரயாணம்'' என்ற ஒரு கதையை எழுதி முடித்தவுடன் மட்டும் அதைக் கிழித்துப் போட மனம் இல்லை. அப்போது புதிதாய் வந்து கொண்டிருந்த ''ஜில்ஜில்'' என்ற குழந்தைப் பத்திரிகைக்கு அதை அனுப்பி வைத்தான். தன்னை இன்னாரின் மகன் என்று காட்டிக் கொண்டு அதன் மூலம் சலுகை அடைய விரும்பாமல், ஒரு புனைபெயருக்குள் ஒளிந்து கொண்டுதான் அனுப்பினான். தான் கொடுத்திருந்த முகவரி தன்னைக் காட்டிக் கொடுத்து விடுமே என்பதைச் சிறுவன் நினைத்துப் பார்க்கவில்லை.

புகழ்மிக்க கல்கியின் மகனிடமிருந்து ஒரு கதை வந்துவிட்டது என்பதில், ''ஜில் ஜில்'' பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்த இளைஞருக்கு ஒரே கொண்டாட்டம். அதைச் சிறப்பாகவும் பெருமையுடனும் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டார் அவர். சிறுவன் குறிப்பிட்டிருந்த புனைபெயரைப் புறக்கணித்து அவனுடைய இயற்பெயரிலேயே, தமது அடுத்த இதழில் பாலுவின் பிரயாணத்தை வெளியிட்டார்; கதையின் இளம் ஆசிரியர் இன்னார் என்பதைத் தடபுடலாய் அறிமுகப்படுத்திக் கட்டம் கட்டியும் போட்டுவிட்டார்.

அதோடு நிற்கவில்லை ''ஜில் ஜில்'' ஆசிரியர்; அந்த இதழைக் கல்கியிடம் நேரில் காட்டுவதற்காக ''ஜல் ஜல்'' என்று அவருடைய வீட்டுக்குப் போனார். அவரை வராந்தாவில் வரவேற்ற ராஜேந்திரன் தன் கதையை வெளியிட்டது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தான். ஆனால் அப்பாவிடம் அதைக் காட்ட வேண்டாமென்று தடை செய்தான். அந்தப் பொல்லாத ஆசாமியோ அவனுடைய புனைபெயரைப் புறக்கணித்தது போலவே அவனுடைய தடையையும் புறக்கணித்தார். அப்பாவின் நாற்காலிக்குப் பின்னால் நின்று கொண்டு, கை ஜாடை காட்டிக் கடைசி நிமிஷத்திலும் ஒரு தரம் அவன் தடை செய்து பார்த்ததும் வீணாயிற்று.

''ஜில் ஜில்'' ஆசிரியர் பெருமையுடன் பிரித்துக் காட்டிய பக்கத்தைக் கல்கி ஆசிரியர் பார்த்துவிட்டு, ''பேஷ், பேஷ்! நம்ம தம்பிகூடக் கதை எழுதி இருக்கானா?'' என்று சொல்லிக் கொண்டே திரும்பிப் பார்த்தார்.

ஆனால் அங்கே தம்பி இல்லை!

''பாலுவின் பிரயாணம்'' என்ற அந்தக் கதை என்ன என்பதை, அதை எழுதியவரும் வெளியிட்டவரும் மறந்துவிட்டார்கள்; ஆனால் அதைப் பற்றிய கதையை மட்டும் மறக்கவில்லை. தனித் தனியாகவும், வெவ்வேறு பாதைகளிலும், அவர்கள் செய்த பிரயாணத்துக்கு அது ஒரு வழிகாட்டிக் கதை; அந்தப் பிரயாணத்தில் அவர்கள் அடைந்த வெகுவான முன்னேற்றத்துக்கு ஓர் அடையாளக் கதை.

அந்தக் கதையில் மர்மம் இருந்ததோ என்னமோ, அதைப் பற்றிய கதையில் மர்மம் ஏதும் வேண்டியதில்லை. அதை வெளியிட்டவர் யார் என்பதை இப்போது தெரிவித்துவிடலாம் - அவர்தான் புத்தக வெளியீட்டுத்

துறையில் சிறப்புற்ற வானதி திருநாவுக்கரசு. (அவருடைய முன்னேற்றத்துக்குக் கல்கி எவ்வாறு உதவியாய் இருந்தார் என்பதைப் பின்னர் பார்ப்போம்.)

''பாலுவின் பிரயாணம்'', கல்கியைப் பொறுத்தவரை, அவர் அதைப் பார்த்த அக்கணத்திலேயே முடிவடைந்துவிட்டது. கூச்சத்தினால் ஓடிவிட்ட மகனைப் பின்னர் கண்டபோது அவர் அதைப் பற்றிப் பேசவே இல்லை.

தந்தையர்களில் இரண்டு வகைகள்— தம் தொழிலையே தம் பிள்ளைகள் மேற்கொள்ள வேண்டும் என விரும்புவோர் ஒரு வகை; மேற்கொள்ளக் கூடாது என எண்ணுவோர் இன்னொரு வகை. இரண்டாவது வகையைச் சேர்ந்த கல்கி, தமது மகன் ஓர் எழுத்தாளனாய்ப் பரிணமிப்பதையோ, பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுவதையோ விரும்பவில்லை. விரும்பி இருந்தால், அதற்கு வேண்டிய ஊக்கம் கொடுத்திருப்பார்; பயிற்சியும் அளித்திருப்பார்.

அந்த இளம் வயதில் ராஜேந்திரனும் எழுத்து அல்லது பத்திரிகைத் துறையில் தீவிர ஆசையோ வகையான நாட்டமோ கொண்டிருக்கவில்லைதான். விவேகாநந்தா கல்லூரியில் படித்து, ''இண்டர்மீடியட்'' தேறிய பின் எம். பி. பி. எஸ். பட்டம் பெற்று டாக்டராக வேண்டும் என்பதுதான் அவனுடைய ஆசையாய் இருந்தது. அதைத் தகப்பனாரிடம் வெளியிட்டபோது, வைத்தியக் கல்லூரியில் அதற்கு இடம் கிடைப்பது எளிதல்ல என்பதை அவர் சுட்டிக்காட்டினார். அப்போது சென்னை முதன்மந்திரியாய் இருந்த ராஜாஜியின் சிபாரிசை நாடினால் என்ன என்று மகன் கேட்டான். ''நல்ல வேடிக்கை!'' என்றார் கல்கி. ''என் பிள்ளைக்காக நான் ராஜாஜியிடம் சிபாரிசுக்கு நிற்பதா? முடியாது. நடக்காது!'' என்று ஒரேயடியாய் மறுத்துவிட்டார். டாக்டர் தொழிலுக்கு அடுத்தபடியான மருந்து உற்பத்தித் தொழிலுக்குப் படிக்கலாமே என்று அவரே மாற்று யோசனை கூறினார். ''பி. ஃபார்ம்'' என்ற பட்டத்துக்கு உரிய அந்தப் படிப்புக்கு, அதே வைத்தியக் கல்லூரியில் எளிதாகவே இடம் கிடைக்கக் கூடியது என்பதை எடுத்துச் சொன்னார். அந்த யோசனையைக் கட்டாயமாய் ஏற்கும்படி செய்தார். தம்மைப் பிடித்த ஆஸ்துமா நோய்க்காக ஆயிரக் கணக்கில் மருந்துகளுக்காகச் செலவிட்டுக் கொண்டிருந்த அவர், தம் மகன் மருந்து உற்பத்தியில் நிறையப் பொருளீட்டி, தாம் இழந்ததைப் பன்மடங்காகப் பெருக்கட்டுமே என்று, ஒரு பக்கத்தில் எண்ணினாரோ என்னமோ!

அந்தப் படிப்பைத் தன் விருப்பமின்றியே ராஜேந்திரன் மேற்கொண்ட போதிலும், பொறுப்பு உணர்ச்சியினால் அக்கறையுடனேயே அதில் ஈடுபட்டான். அதற்கான மூன்றாண்டுப் படிப்பில் முதலாண்டுப் படிப்புதான், கல்கி காலமான போது முடிந்திருந்தது. தந்தையின் விருப்பத்தை அவர் மறைந்த பிறகும் நிறைவேற்றியே ஆக வேண்டும் என்ற உறுதியுடன் மீதி இரண்டாண்டுப் படிப்பையும் அவன் முடித்துப் பட்டம் பெற்றான். மருந்து நிறுவனம் ஒன்றில் சிறிது காலம் வேலையும் பார்த்தான்.

பின்னர் ராஜேந்திரன், தந்தை நிறுவி நடத்திய பத்திரிகையிலேயே சேர்ந்தது, அதிலே அடிமட்டத்திலிருந்து பதிப்புத் தொழில் நுட்பங்களைப் பயின்றது, இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பத்திரிகை வெளியீட்டின் நவீன உத்திகளைக் கற்றது, எல்லா வகையிலும் தேர்ச்சி அடைந்த பிறகு, உண்மையான வாரிசாகத் தகப்பனாரின் ஆசனத்தில் அமர்ந்தது— இவற்றைக் கல்கி எதிர்பார்த்திருக்க முடியாதுதான். ராஜேந்திரனும்கூட ஒரு கட்டம் வரை இவ்வளவையும் எதிர்பார்க்கவில்லை. தந்தைவழியே அடைந்த ஆற்றல்களை ராஜேந்திரன் ஆர்வத்துடன் வளர்த்துக் கொண்டதாலும், வாழ்க்கை வழியே அடைந்த வாய்ப்புகளைத் தக்கபடி பயன்படுத்திக்கொண்டதாலும் நிகழ்ந்தவை இவை. இதை எண்ணுகையில், எதிர்பாராதவிதமாய் அல்லாமல், இயல்பாகவே எல்லாம் நடந்துள்ளதாகத் தோன்றுகிறது.

கல்கியின் இறுதிக் காலத்தில், தம் கையால் அவர் எழுத இயலாமல்போன ஒரு வேளையில், தமது பேனாவைத் தலையணைக்கு அடியிலிருந்து எடுத்து மகன் கையில் கொடுத்து எழுதச் சொன்னாராம். அந்தச் செயலை ஒரு வாழ்த்துச் சைகையாக ராஜேந்திரன் பாவித்து, தந்தை பேணிய நெறிகளையும் பண்புகளையும் தொடர்ந்து பேணும் வழித்தோன்றலாய்ப் பணியாற்றுகிறார்.

(தொடரும்)

ஒரிஸ்ஸா அரசுத் தலைமைச் செயலகத்தில் ஓர் எட்டு அம்சத் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் ஒன்று: அதிகாரிகளும் ஊழியர்களும் எப்போதும் சிரித்த முகத்தோடு இருக்க வேண்டும்.

- காரவான் ''முத்து''




வாரீர்–புதுமை தவழ்ந்திட

எலுமிச்சைப்

புத்துணர்வுப்

பரவசத்தோடு



லிரில் புத்துணர்வு.
பார்த்தறியாப் புதுமை.
பரவசக் கிளுகிளுப்பு.
லிரில்.
அலையெறியும் தளதள
பச்சை. அதன் நயமோ
குளுகுளு எலுமிச்சை.
பொங்கிப் பீறிடும்
நுரைவளம்.



லிரில்

புத்துணர்வு சோப்

கிளுகிளு புத்துணர்வில் குளித்தெழ

மகாராஷ்டிரம், குஜராத், மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் மட்டுமே கிடைக்கும்.

இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமான தயாரிப்பு.

லிண்டாஸ்-LR. 148-140 TM


5
கதை:
கௌசிகன்
சித்திரம்:
ம.செல்வன்
"லாக் அப்" அறைகளின் சாவிக் கொத்தைக் காணுமே. யாரங்கே, கான்ஸ்டபிள்...!
போச்சு, நாம் வசமாக மாட்டிக் கொண்டோம்.
ஆனால் சாரு சிறைப் பறவையாகித் விரும்பவில்லை.
மாதவன் அந்தச் சாவிக் கொத்தைத் தொடுங்கள். ஒரு ஐடியா! முயன்று பார்ப்போம்.
சில நிமிஷங்களுக்குப் பிறகு...
அந்தப் பெண் மறைந்து விட்டாள். லாக் அப் அறையின் கதவு திறந்து கிடக்கிறதே.
நீங்கள் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கும் போது, அவன் மனிதர்கள் உள்ளே புகுந்து சாவியைத் திருடி அவளையும் கிளப்பிக் கொண்டு போய் விட்டார்கள்.
...நான் கொஞ்சம் கண்ணயர்ந்தது உண்மைதான். ஆனால்....
சீக்கிரம் உஷார்ப் படுத்துங்கள். அவளை எப்படியும் பிடித்தாக வேண்டும்.
குழப்பமும் கலவரமும் அடைந்தார் இன்ஸ்பெக்டர்.
இந்தப் பொட்டல் பிரதேசத்தில் அவள் சுலபமாகத் தப்பிவிட முடியாது.
அவளோடு வந்த வாலிபனை நீங்கள் மறந்து விட்டீர்கள். லக்ஷ்மண் உங்கள் காரை எடுங்கள், போலீஸ் தேடுதலுக்கு உதவலாம்.
நம் சூழ்ச்சி பலித்து விட்டது மாதவன். காலியாக இருந்த இன்னொரு 'லாக் அப்' அறையை அவர்கள் சோதனையிடவில்லை. லக்ஷ்மணுக்கும் இவளுக்கும் என்ன தொடர்பு?
தெரியவில்லை. இவள் தகப்பனார்


போலீஸின் பரபரப்பு அதிகமாகிறது.
சாலையில் எதிர்ப்படும் எல்லா வண்டிகளையும் சோதனையிடுங்கள். இங்குள்ள எல்லா வீடுகளையும் தேடிப் பாருங்கள். எப்படியும் அவள் கிடைத்தாக வேண்டும்.
அந்த இந்திய உளவாளிப் பெண்ணைக் கண்டு பிடிப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வெகுமதி வழங்குவார் எங்கள் எஜமானின் மகள்.
போலீஸின் இந்தக் குழப்பத்திலும் நெருக்கடியிலும் சாருவும் மாதவனும் வெளியேறுவதை யாரும் கவனிக்கவில்லை.
மாதவன், இங்கிருந்து நாம் எங்கு போகிறோம்? என் தகப்பனாரை நான் விரைவில் காண விரும்புகிறேன்.
என்னை நம்பு சாரு. உன் தந்தைக்கு வாக்களித்திருக்கிறேன். அவரை ஏமாற்றத்துக் குள்ளாக்க மாட்டேன்.
மறைவிடத்தில் பத்திரப்படுத்தி இருந்த சாருவின் உடைமைகளை எடுத்துக் கொண்டு அவளைக் கரடுமுரடான மலைப்பாதையில் அழைத்துப் போகிறான் மாதவன்.
இக் கிராம மக்கள் நம்மைக் காட்டிக் கொடுத்து விடமாட்டார்கள் சாரு. உனக்கு ரொம்பக் களைப்பாக இருக்கிறதா?
களைப்புத்தான். இந்த உடைகளும் அசௌகரியமாக உள்ளன. ஆனால் நான் இந்த வேஷத்துடன் தான் இருந்தாக வேண்டும், இல்லையா?
மாதவன், இனி என்னால் அதிக தூரம் நடக்க முடியாது.
அதோ...பார்! ஒரு பஸ் வருகிறது. கவலைப் படாதே.
பஸ்ஸா...? நான் காண்பதெல்லாம் வெறும் புழுதிப்படலத்தைத்தான். உங்களுக்குக் கழுகுப் பார்வைதான் மாதவன்.
மாதவனின் கழுகுக் கண்கள் அவனை ஏமாற்றவில்லை. ஆனால் அதைவிடத் திறமைமிக்க நவீன சாதனங்களைத் தங்கள் பார்வைக்கு அளித்துக் கண்காணித்தார்கள் அந்தப் பொட்டல் பிரதேசத்தை, கயவர்கள்!
முதலாளி மகள் லில்லியின் ஊகம் சரிதான். அதோ இருவர் ஒரு பஸ்ஸை நிறுத்தி ஏறுகிறார்கள். அது அவர்களாகத்தானிருக்க வேண்டும்.



Creative Unit-A 1981-Tam

ஒருநாள்...



கே. வி. நாராயணசுவாமி

நான் காலையில் சீக்கிரமாகவே எழுந்து பழகியவன்தான். சிறு வயதிலிருந்தே வந்த பழக்கம். சங்கீதக் குடும்பம். என் தகப்பனாரும் பாட்டனாரும் என்னைக் காலை நான்கு மணிக்கே எழுப்பி உட்கார்த்திச் சாதகம் செய்யத் தூண்டுவார்கள். நான் ஒரு வயலின் வித்வானாகத்தான் ஆசைப்பட்டேன். ஆனால் என் வீட்டில் நான் வாய்ப்பாட்டு வித்வானாகத்தான் ஆகவேண்டும் என்று விரும்பினார்கள்.

காலை ஆறு மணிக்கு எழுந்தவுடன் கொஞ்ச நேரம் தியானம். வேறு பூஜை பாராயணம் என்று நான் விரிவாக எதையும் வைத்துக் கொள்வதில்லை. சாதகமும் அளவோடு கொஞ்சமாக இருக்கவேண்டும் என்று எண்ணுபவன். 'ஓவர்' சாதகம் கூடாது என்று என் குருநாதர் அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் அடிக்கடி சொல்லுவார். மேலும் நான் சென்னையிலுள்ள இசைக் கல்லூரியில் பேராசிரியராக இருப்பதால் என் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும்போதே எனக்கு அது சாதகமாகவும் ஆகி விடுகிறது.

காலையில் வெறும் காப்பிதான்/இன்று கொஞ்சம் குளிர்ந்த காற்றாகவே வீசுகிறது. வெந்நீர் ஸ்நானத்துக்கு ஏற்பாடு செய்யச் சொல்கிறேன். வெய்யில் நாட்களில் பச்சைத் தண்ணீர் ஸ்நானம்தான். இதற்கு முன் தினமணி பேப்பரைப் படித்து விடுவேன்.

ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வந்ததும் டெலிபோனில் ஒன்றிரண்டு நண்பர்கள் கூப்பிடுகிறார்கள். அவர்களுக்குப் பதில் சொல்கிறேன். ஒரு நண்பர் அன்று மாலையில் நான் பாடவிருக்கும் கச்சேரியை நினைவுபடுத்துகிறார். ஒரு குறிப்பிட்ட கீர்த்தனையைக் கொஞ்சம் விஸ்தாரமாகப் பாடச் சொல்லி வேண்டுகிறார்.

என் குருநாதர் அடிக்கடி தம் சிஷ்யர்களைப் பார்த்துக் கூறும் ஒரு வாக்கியம் நினைவுக்கு வருகிறது. "நீங்க சங்கீதம் கற்றுக் கொள்வதை விட இங்கிதம் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும்" என்பார். அந்த வித்தையில் அவர் கைதேர்ந்தவர். கச்சேரியில் என்ன என்ன உருப்படிகள் பாடவேண்டும் என்றெல்லாம் அவர் அலட்டிக் கொள்ள மாட்டார். முன்கூட்டியே தீர்மானம் செய்து கொள்ளவும் மாட்டார். சதஸில் போய் உட்கார்ந்தவுடன், எதிரே உள்ள ரசிகர்களை ஒரு நோட்டம் விடுவார். அவர்களை எப்படித் திருப்தி செய்ய முடியும் என்று கணித்து விடுவார். அப்புறம் அந்த இடத்துக்குத் தகுந்தாற்போல் அன்றைக்கு வள்ளலாரின் அருட்பா ராகமாலிகையோ, கிருஷ்ணகர்ணாமிர்தமோ ஓஹோ வென்று அப்ளாஸ் வாங்கிவிடும்.

சாப்பிட உட்காருகிறேன். பாவக்காய், கண்டைக்காய் போன்ற பதார்த்தங்கள் எனக்குப் பிடிக்காது. ரொம்பப் பிடித்தது என்று சொன்னால் தயிர் சாதம்தான்! எளிய உணவு.



- "ஓவர் சாதகம் கூடாது என்று என் குருநாதர் சொல்லுவார்."
- "கரெக்ட்! அந்த சங்கதி இப்ப சுத்தமா விழறது."—மனைவி ஸ்ரீமதி பத்மா பாடக் கேட்கிறார் ஸ்ரீ கே. வி. என்.

பத்தேகால் மணிக்கெல்லாம் இசைக் கல்லூரிக்கு வந்து விடுகிறேன். பத்தரை மணியிலிருந்து மாலை நான்கரை மணிவரை அங்கே ஆசிரியர் தொழில்.

சில மாணவர்களுக்குச் சீக்கிரமே விஷயத்தைக் கிரகிக்கும் தன்மை இருக்கிறது.

அதைப் பார்க்கும்போது நமக்கு ஒருவித ஆத்ம திருப்தி. சிலருக்கு மிகவும் நேரடு கிறது. சில பிடிகள் வரவே மறுக்கின்றன. இங்கேதான் ஆசிரியர் நிதானம் தவறாமல் பொறுமையை இழக்காமல், தாம் விரும்பிய விளைவுகளை மாணவர்களின் உழைப்பினால் கொண்டு வர வேண்டும். நான் அந்த நாட்களில் பல ஆண்டுகள் குருகுல வாசம் செய்து குருநாதருக்கு வேட்டி உலர்த்திக் காயப் போட்டு, வெற்றிலே பாக்கு எடுத்து வைத்துச் சேவை செய்து சேகரித்த பொறுமையும் நிதானமும் இப்போது உதவுகின்றன.

ஒரு வகுப்பை முடித்துக் கொண்டு ஓய்வுக்காக ஆசிரியர்களின் அறைக்கு வரும்போது மரத்தடியில் அமர்ந்து இரு மாணவிகள் வெகு இதமாக ஒரே சுருதியில் ரேவாணி ராகத்தை மாறி மாறி ஆலாபனை செய்து பழகிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் காட்சி என்னை எங்கோ பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் அதே போன்ற சூழலுக்கு இழுத்துக் கொண்டு போகிறது.

நான் கடந்த பத்து வருட காலத்தில் நான்கு தடவை அமெரிக்கா சென்று அங்குள்ள இசைக் கல்லூரிகளில் இசைப் பயிற்சி அளித்திருக்கிறேன். கர்நாடக இசையில் அவர்களுக்கு அலாதி மோகம். சென்ற ஆண்டில்கூட ஆறு மாத காலம் பெர்க்லியில் தங்கிப் பயிற்சி அளித்தேன். எனக்கு நம்ப ஊரை விட்டு ஆயிரக் கணக்கான மைல்கள் தள்ளியிருக்கிறோம் என்ற உணர்ச்சியே இல்லை. ஏனென்றால், வயலின்-டி.என். கிருஷ்ணன், மிருதங்கம் – பாலக்காடு ரகு, கடம் -- விநாயகராம் எல்லோருமே அங்கே வந்திருந்தனர். சென்ற நவராத்திரியின்போது நாங்கள் பல கச்சேரிகள் நடத்தினோம்.

ஆனால் இதே அமெரிக்கா என் மனத்தின் அடித்தளத்தில் ஒருவித வேதனையையும் தோற்றுவிக்கும். நான் இரண்டாவது முறையாக அங்கு போயிருந்தபோதுதான் 1967 ஜனவரியில் என் குருநாதர் காலமானார். என் துரதிருஷ்டம் அவருடைய கடைசி நேரத்தில் கூட இருக்க முடியவில்லை.

பிற்பகல் பயிற்சிகள் தொடங்குகின்றன. ஒரு மாணவன் மிகவும் சிரமப்படுகிறான். எனக்கும் சிரமமாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது? அந்தக் காலமா? பொறுமை காக்கிறேன். பலனும் காண்கிறேன். ஒரு தினுசாக மாலை வகுப்புக்கள் முடிகின்றன. வீட்டுக்குக் கிளம்புகிறேன்.

டிபன் ஆகிறது. கொஞ்சம் கல்கண்டை மாத்திரம் கையில் எடுத்துக் கொள்கிறேன். நகரத்தில் உள்ள சபையில் அன்று கச்சேரி.

அரங்கத்தைப் பார்க்கிறேன். உற்சாகம் நிறைந்த முகங்கள். சில சந்தர்ப்பங்களில் பல்லவி பாடாமலேயே கீர்த்தனைகளைப் பாடிக் கச்சேரியை முடித்துவிடுவது உண்டு. இன்றைய ரசிகர்களுக்கு ஒரு பல்லவி பாடலாம் என்ற ஆர்வம் எனக்கே தோன்றுகிறது. நாட்டைக் குறிஞ்சி ராகத்தைத் தேர்ந்தெடுக்கிறேன்.

நாட்டைக்குறிஞ்சி என்பார்...
எங்களது நாட்டைக்
குறிஞ்சி என்பார் – என்று பல்லவி.

இதற்கு நல்வரவு இருந்தது. எனக்கே குஷி பிறந்து விடுகிறது. மலைப் பிரதேசங்களின் அழகுகளையும் வளங்களையும் ஜிலு ஜிலுப்பையும் மனம் உணர்கிறது. ஐயங்கார்வாள், நாட்டைக்குறிஞ்சியில் ராமசாமி சிவனின் 'எக்காலத்திலும் மறவேனே!' என்ற சாகித்தியத்தைக் கர்ணாமிர்தமாகப் பாடுவார். அதுவும் நினைவில் இருக்கிறது.

வீட்டுக்கு வரும்போது ஒன்பதரை மணி. கொஞ்சம் மோர் சாதம் சாப்பிடுகிறேன். சில் என்ற வாடைக் காற்று. உடம்பில் அசதி! தலையணையைத் தட்டிச் சரி செய்து வைத்துக் கொள்கிறேன். ஒரு நாள் பொழுது இப்படி மங்களகரமாகக் கழிகிறது.

கேட்டு எழுதியவர்: **கோமதிஸ்வாமிநாதன்**

நான் சிறுவனாக இருந்தபொழுது!

நான் சிறுவனாக இருந்த பொழுது சுவைத்துச் சாப்பிட மாட்டேன். அம்மா வாயில் ஊட்டியதும், சாதத்தை வாயில் வைத்திருப்பேன். அம்மா எப்போதும் கூறுவாள்:

"ஒழுங்காகச் சுவைத்துச் சாப்பிடு!"

நான் சாப்பிடும்போது அம்மா கதைகள் கூறுவாள். ஒரு முறை ஒநாய் கதையைக் கூறினாள்:

"வோல்கா என்ற சிறுமி இருந்தாள். அவள் கேக்குகள் செய்து விட்டுப் பாட்டியைப் பார்க்கச் சென்றாள்" என்று ஆரம்பித்த அம்மா, "உம்... ஆகாரத்தைச் சுவைத்துச் சாப்பிடு" என்றாள்.

நான் சுவைக்கத் தொடங்கினேன்: பிறகு அம்மா மறுபடியும் கதையைத் தொடர்ந்தாள்:

"அப்போது ஒநாய் பாட்டியை விழுங்கி விட்டது... ஊம், இவை அனைத்தையும் மென்று விழுங்கு. சாப்பிட்டாச்சா?...பிறகு அந்த ஒநாய் சிறுமியையும் விழுங்கி விட்டது." இதைக் கேட்டதும் நான் பயந்து விட்டேன்.

மிக ஒழுங்காகச் சுவைத்துச் சாப்பிட்டேன்.

"பிறகு வேட்டைக்காரர்கள் வந்தனர்" என்று மேலும் தொடர்ந்தாள் அம்மா. "உம்...சுவைத்துச் சாப்பிடம்மா; விழுங்கி விட்டாயா?.... வேட்டைக்காரர்கள் ஒநாயைக் கொன்று விட்டார்கள். பிறகு ஒநாயின் வயிற்றைக் கிழித்தனர். உடனே பாட்டியும், சிறுமியும் ஒநாய் வயிற்றிலிருந்து குதித்து வெளியே வந்தனர். அவர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை!" என்று கதையை முடித்தாள், அம்மா.

அப்பொழுது நான் கேட்டேன்:

"அம்மா! அவர்களை அந்த ஒநாய் சுவைக்கவே இல்லையா? அப்படியே விழுங்கி விட்டதா?"

(ருஷ்யக்கதை) — விக்தர் தாகுன்ஸ்கி





குழந்தைச் சிரிப்பு



ஆழ்ந்த படிப்பு

குழந்தைகள் சிரிக்கட்டும் எதிர்காலம் சிறக்கட்டும்

சிறுவர்களுக்கெனத் தமிழில் சிறிய அளவில் பத்திரிகை நடத்திக் குழந்தை இலக்கியம் படைத்து வந்த திரு வை. கோவிந்தன், தமிழ்வாணன், அழ. வள்ளியப்பா ஆகிய சிலர் 1950ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 13ந் தேதி பழனியப்ப செட்டியாரின் (பழனியப்பா பிரதர்ஸ் உரிமையாளர்) இல்லத்தில் ஒன்று கூடிக் குழந்தை எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பினை உருவாக்கியது உலகத்துக்கொரு புதுமை. அமெரிக்காவில் குழந்தை இலக்கியம் படைத்து வந்த மன்ரோ லீஃப் பின்னர் இந்தியா வந்த போது, உலகின் வேறெந்த நாட்டிலும் குழந்தை இலக்கியம் உருவாக்குவோர் சங்கம் அமைத்துக் கொள்ளாத நிலையில் தமிழ் நாட்டில் அத்தகைய புதுமை இலங்குவது கண்டு வியந்தார். சங்கத்தின் முதல் தலைவர் வை. கோவிந்தன்; செயலாளர் வள்ளியப்பா.

சுமார் மூப்பது உறுப்பினர்களைக் கொண்டு உருவாகிய அந்தச் சங்கம் படிப்படியாக வளர்ந்து இன்று 150 உறுப்பினர்களுடன் வெள்ளி விழா கொண்டாடுவது பாராட்டுக்குரியது. பொருள் வசதி இல்லாத ஒரு சங்கம், உறுப்பினர்களின் சந்தாத் தொகையையும் அளவற்ற உற்சாகத்தையும் உழைப்பையும் மட்டுமே மூலதனமாகக்கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது. நிதி வசதி இல்லாதது சங்கத்தின் பலவீனமல்ல; அதுதான் சங்கத்தின் பலம்!

தலைவர்



1957ம் ஆண்டு நேருவின் பிறந்த நாளன்று முதன் முதலாகச் சங்கத்தின் ஆதரவில் 10 குழந்தைப் புத்தகங்கள் வெளியிடப் பெற்றன. அதற்கு முந்தைய ஆண்டில் புதுதில்லியில் சாகித்ய அகாதமியினர் அமைத்த புத்தகக் கண்காட்சிக்கு நேருஜி விஜயம் செய்தபோது சிறுவர்களுக்கான நூல்களை ஆர்வத்துடன் வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாராம். அதைக் கண்ணுற்ற திரு வள்ளியப்பாவுக்கு நேருவின் பிறந்த நாளையொட்டி குழந்தை எழுத்தாளர் சங்க ஆதரவில் சிறுவர்களுக்கான நூல்களை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. இன்றளவும் 340 சிறுவர் நூல்கள் சங்க ஆதரவில் வெளியாகியுள்ளன.

சங்கத்தின் பிற பணிகள்: சிறுவர் இலக்கியத் துறையில் சிறப்பான தொண்டு ஆற்றியவர்களுக்குக் கேடயம் வழங்குதல். கேடயம் பெற்றவர்கள், தி. ஜ. ர., மயிலை சிவமுத்து, தூரன், அழ. வள்ளியப்பா, என். நடேசன் (ராஜி) ஆகியோர். சிறந்த சிறுவர் இலக்கிய நூல்களை வெளியிடும் பதிப்பாளர்களையும் கேடயம் வழங்கிக் கௌரவித்துள்ளது, சங்கம். ஏ. வி. எம். அறக்கட்டளையின் நன்கொடையினால் பல நூலாசிரியர்களுக்குத் தங்கம், வெள்ளிப் பதக்கங்களை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது.

வாரம் ஒரு முறை பிரபல எழுத்தாளர்களை அழைத்துக் குழந்தைகளுக்குக் கதை சொல்ல ஏற்பாடு செய்த பணி குழந்தைகளுக்கு விருந்தாக அமைந்தது. தங்கள் கதைகளைப் பிரசுரம் செய்யும் முன் குழந்தைகள் அவற்றை எந்த எந்த இடங்களில் எப்படி ரசிக்கின்றனர் என்பதைத் தாங்களே சுய மதிப்பீடு செய்து கொள்ள இந்த மேடை ஓர் உரைகல்லாகப் பயன்பட்டு வந்துள்ளது.

'அறிமுகம் — அனுபவம்' என்ற மாதாந்தர நிகழ்ச்சியில் எழுத்தாளர்கள் தங்கள் அனுபவங்களைத் திரட்டி அளிப்பது வெறும் பொழுதுபோக்காக இராமல் பயனுள்ள தகவல்களை வெளியிட வாய்ப்பளித்து வருகிறது.

1961ம் ஆண்டு சங்கம் வெளியிட்டுள்ள 'குழந்தை எழுத்தாளர் — யார்? எவர்?' என்ற நூலில் 201 எழுத்தாளர்களைப் பற்றிய விவரங்கள் இடம் பெற்றுள்ளன. 1972ல் வெளியான இதன் இரண்டாவது பதிப்பில் 320



'' செயலாளர் ''

எழுத்தாளர்களைப் பற்றிய விவரங்களை அரும் பாடு பட்டுச் சேகரித்து வெளியிட்டுள்ளது ஓர் அரிய சாதனை.


கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் 14 ஆண்டுகள் சங்கத்தின் தலைவராக இருந்துள்ள அழ. வள்ளியப்பாவுக்கு தம்பி சீனிவாசனும், 'பழனியப்பா பிரதர்ஸ்' ரத்தினமும் வலக் கரமாகவும் இடக் கரமாகவும் இருந்து அயராது உழைத்துள்ளனர்.

1976-ம் ஆண்டினைச் சர்வ தேசக் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாட 'யுனெஸ்கோ' தீர்மானித்துள்ளது. அதனை யொட்டிக் குழந்தை எழுத்தாளர் சங்கம் ஒரு 'குழந்தைப் புத்தக விவரத் தொகுப்பு', (Bibliography of Children's Books) வெளியிடத் திட்டமிட்டுள்ளது. பயனுள்ள முயற்சி பெரு வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

இந்த பிப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் பாரதப் பிரதமர் பங்கேற்றுக் கௌரவிப்பார் என்று எதிர்பார்க்கிறார்கள். ஒருவேளை வேலைச் சுமை காரணமாக அவர் வரமுடியாது போனால் என்ன? அவரது வாழ்த்துக்கள் நிச்சயம் உண்டு சங்கத்துக்கு. குழந்தைகள் சிரிக்கட்டும். எதிர்காலம் சிறக்கட்டும். — பாணன்

லிட்டில் ஸ்டேஜ் நாடகக் குழுவின் ''பூச்சரம்'' முழுக்க முழுக்க, குடும்பச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டது; தம்பிகளிடம் பாசமும், பரிவும், கொண்ட அண்ணன்; கண்டிப்பாக, சிக்கனமாகக் குடும்பம் நடத்த வேண்டும் என்பதில் ஆர்வமுள்ள அண்ணி — இவர்களிடையே வளையவரும் தம்பிமார்கள்.

அண்ணன் ராஜசேகரனாக வரும் ஏ.வி.எம். ராஜன் சகோதரர்களிடமுள்ள அளவுகடந்த பாசத்தையும், அதற்கும் மேலாகக் குடும்ப கௌரவத்தைக் கட்டிக் காப்பதில் உள்ள ஆர்வத்தையும், அதியற்புதமாகக் காட்டி மிக நன்றாக நடித்திருக்கிறார். பதிக்கேற்ற பத்தினியாக வரும் ஸ்ரீமதி புஷ்பலதா ராஜன், கண்டிப்பையும் கருணையும் காட்டி, ஒவ்வொரு தடவையும் கணவனோடு மோத நேரும்போதெல்லாம், பாலாய்ப் பொங்கி அதன் மீது நீர் தெளித்தாற் போன்று



பூச்சரம்



அடுத்த விநாடியே அடங்கிச் சிறப்பாக நடித்திருக்கிறார்.

தன் கணவனின் சகோதரர்களை நல்வழிப் படுத்த வேண்டும் என்பதுதான் ராஜசேகரனின் மனைவி லக்ஷ்மியின் எண்ணம். ஆனால் அதைச் சகோதரர்கள் நல்லபடியாக எடுத்துக் கொள்ளவில்லை; விரோத பாவத்தையே வளர்த்துக் கொள்கிறார்கள் — பலன்? வேதனையான திருப்பம் தான். நாடக ஆசிரியர் சுவர்ணமூர்த்தி ஒரு சாதாரணக் குடும்ப நிகழ்ச்சியில் சமத்காரமாகச் சில சிக்கல்களையும் 'சஸ்பென்ஸ்'களையும் புகுத்தி விரசம் தட்டாமல் நாடகமாக்கியிருக்கிறார். வசனம் அருமையாகப் பின்னப்பட்டிருக்கிறது. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்னும் கருத்தை, நாடகம் வலியுறுத்துவது ராஜசேகரன் குடும்பத்துக்கு மட்டுமல்ல, பாரதக் குடும்பத்துக்கே நல்லதுதான்.

ராஜன், புஷ்பலதா இருவருக்கும் அடுத்தபடியாகச் சிறப்பாக நடித்திருக்கிறவர்கள்: தம்பியின் மனைவி வசந்தியாக வந்து கணவனை ஆட்டி வைக்கும் பாத்திரத்தை ஏற்ற செல்வி ஆர். வாணி, வசந்தியின் தந்தை குதிரைப் பந்தயப் பைத்தியம் நல்லசிவமாக வந்த கே. ராஜவேலு.

''பூச்சரம்'' மணங் கமழும் பூக்களைக் கொண்டதுதான் — காகிதப் பூ அல்ல!

—கார்த்தன்

அருள்மிகு அண்ணாமலையார் திருப்பணிக் குழு, திருவண்ணாமலை

வட ஆற்காடு மாவட்டம்

மகா கும்பாபிஷேகம்

அருள்மிகு உண்ணாமுலை உடனுறை அண்ணாமலையார் திருப்பணி வேலைகள் பூர்த்தி செய்யப் பெற்று மகா கும்பாபிஷேகம் நாளது ராக்ஷச வருடம் பங்குனி மாதம் 22-ம் நாள் (4 4-1976) ஞாயிறு காலை 8-15 முதல் 9 மணி வரையில் ரிஷப லக்னத்தில் நடைபெறுகிறது. தமிழ் நாட்டில் இதுவரையில் நடைபெறாத முறையில் வெகு சிறப்பான முறையில் யாக குண்டங்கள் அமைக்கப்பெற்று 200 தேர்ச்சி பெற்ற சிவாச்சாரியர்கள் கலந்து கொள்ளுகிறார்கள். மகா கும்பாபிஷேகம் முடிந்து 5-4 76 முதல் 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். அபிஷேகத்தில் பங்குபெற விரும்புவோர் நாள் ஒன்றுக்கு ரூ. 250/- கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

செயலாளர்

அருள்மிகு அண்ணாமலையார்
திருக்கோயில், திருப்பணிக்குழு
திருவண்ணாமலை, வ. ஆ.

டி. வி. சுப்பிரமணிய செட்டியார்
உப தலைவர், திருப்பணிக்குழு

இன்பத் தென்றல்



குல்ஷன் நந்தா

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

20

சாரதாவின் மனத்தில் இப்பொழுது உள்ளூற ஒரு பயம் குடிகொண்டிருந்தது. 'அநூப்பின் காதல் அவன் வருங்காலத்தையும் வியாபாரத்தையும் நஷ்டத்துக்கு உள்ளாக்கி விட்டால் என்ன செய்வது?" என்று எண்ணிப் பார்த்த பொழுது வகை வகையான கற்பனைகள் எழுந்து அவள் உள்ளத்தின் அச்சத்தை அதிகப்படுத்தின.

அநூப் மடை திறந்தாற்போல் பேசியதற்கு அவள் வெகு நேரம் வரை எதுவுமே பதில் சொல்லவில்லை. அநூப்புக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. "என்ன அக்கா, நீ ஒன்றுமே கூறவில்லையே !" என்றான்.

"கூறுவதற்கு என்ன இருக்கிறது? எல்லாம் தான் நீ கூறிவிட்டாயே !"

"அப்படியானால் நீ ஏன் பேசாமல் இருக்கிறாய் ? உன் கருத்து ஒன்றையுமே கூறக் காணோமே !"

" ரொம்பக் களைப்பாயிருக்கிறது. வியாபார விஷயங்களை நாளைக்குப் பேசுவோமே!"

" நாளைக்கு நான் சிம்லா போவதாயிருக்கிறேனே !"

அநூப்பின் பேச்சைக் கேட்ட சாரதாவுக்கு ஒரேயடியாகத் தூக்கி வாரிப் போட்டது. சோபாவில் படுத்திருந்தவள் பட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். சிம்லா என்னும் சொல்லே அவளுக்குத் தேள் கொட்டினாற் போலக் கடுத்தது. அவள் பயப் பிராந்தியுற்றவளாய் அநூப்பின் முகத்திலேயே பார்வையைப் பதித்தவாறு அமர்ந்திருந்தாள்.

"ஆமாம், அக்கா ! நாளைக்குக் காலையிலே நான் சிம்லாவுக்குப் போய் ஆக வேண்டும்."

சாரதாவின் வியப்பையோ வியப்பின் காரணத்தையோ கவனிக்காமலே கூறினான் அநூப்.

"எதற்காகப் போக வேண்டும் ?"

"நகரசபை டெண்டருக்காக. அவர்களுக்கு இந்த வருஷம் மூன்று புல்டோஸர்களும் ஆறு டிராக்டர்களும் தேவை....."

" இருக்கட்டுமே ! அதற்காக இந்த அவசரம் எதற்கு? இரண்டு மூன்று நாட்கள் கழித்துப் போனால் போயிற்று !" அவள் டெண்டரைப் பற்றி யோசிக்காமலே பதில் சொன்னாள்.

"அப்படிச் செய்தால் ஆர்டர் கைநழுவிப் போய்விடும் !" அநூப் மெதுவான குரலில் கூறினான்.

இதைக் கேட்டுச் சாரதா வாய் அடைத்துப் போனாள். என்றாலும் அவள் அநூப் சிம்லா செல்வதை விரும்பவில்லை; அதற்காக, அவனுக்கு ஐயம் ஏற்படக்கூடிய வகையிலும், அவள் நடந்து கொள்ள விரும்பவில்லை. என்ன உபாயம் செய்து அவனைத் தடுத்து நிறுத்தலாம் என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே, "நீ ரூபாவைப் பார்த்தாயா, அக்கா ?" என்று அநூப் கேட்டான்.

" பார்த்தேனே !"

" எப்படி இருக்கிறாள் ? உனக்கு அவளைப் பிடித்ததா ?" அநூப் வெட்கப்பட்டுக் கொண்டே கேட்டான்.

''நல்ல அழகு, நல்ல குணம், சாது, கட்டிச் சமர்த்து !'' அடுக்கினாள் சாரதா.

''அவள் அம்மா என்ன சொன்னாள் ?''

''அதைப் பற்றிப் பேச முடியவில்லை.''

''ஏன் ?'' அநூப் பதற்றத்தோடு கேட்டான்.

அநூப்பின் முகம் போகிற போக்கைப் பார்த்துக் கொண்டே சாரதா அலட்சியமாகச் சொன்னாள் : ''அவள் அம்மாவுக்கு இரத்த அழுத்தம் ஏற்பட்டுவிட்டது. ஆஸ்பத்திரியில் இருக்கிறாள் நோய்ப் படுக்கையில். இந்த நிலையிலே பேசுவது உசிதமாகப் படவில்லை. இந்த மாதிரிப் பேச்செல்லாம் சமய-சந்தர்ப்பம் பார்த்தல்லவா பேச வேண்டும்?''

''மெய்தான். இருந்தாலும் ரூபா ஏதாவது சொல்லியிருப்பாளே !''

''சொல்லவில்லையே !''

'' ஒன்றுமே சொல்லவில்லையா ?''

'' எப்படியடா சொல்லுவாள் ? அவளுக்கு இருந்த பரபரப்பிலே இதையெல்லாம் பற்றிப் பேசத் தோன்றுமா ?''

சாரதா இந்தக் கேள்வியாலேயே ரூபாவின் பேச்சைத் தொடரவொட்டாமல் முற்றுப் புள்ளி வைத்துவிட்டாள்.

அநூப் பெருத்த யோசனையில் ஆழ்ந்தான்.

அவன் மலர்ந்த முகம் வாடி விட்டது. பேசாமல், தன் அறையை நோக்கி நடந்தான்.

சாரதாவின் மனம் அப்பொழுதும் அச்சத்தால் துடித்துக் கொண்டிருந்தது. கள்ளப் பார்வையால் அவன் முகத்தில் தோன்றி மறையும் உணர்ச்சிகளைக் கண்டவளுக்கு எதுவுமே விளங்கவில்லை.

காலையில் எழுந்து தேநீர் வரவழைத்த சாரதாவுக்கு அநூப் அதிகாலையிலேயே சிம்லாவுக்குப் புறப்பட்டுப் போய்விட்டான் என்கிற விஷயம் சனன் சிங் மூலம் தெரிய வந்தது. அவள் அதிர்ந்து போனாள். அநூப் தன்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டுப் போவான் என்பதை அவளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அநூப்பின் அந்தச் செயல் அவளுக்கு எட்டிக் காயாகக் கசந்தது. நச்சுக் கோப்பையைப் பருகியவள் போல் கண்களை இறுக மூடிக் கொண்டாள். அவளுக்கு ரூபாவின் போக்குகூட இன்னும் புரியாத புதிராகத்தான் இருந்தது. அவள் தனக்குக் கொடுத்த வாக்கை எப்படி நிறைவேற்றுவாள் ? நிறைவேற்றித்தான் ஆக வேண்டும் என்பதற்கு என்ன அவசியம் ? இந்த யோசனையில் மண்டை வலி கண்டதுதான் மிச்சம்.

ரூபாவின் விழிகளிலிருந்து தூக்கம் விடைபெற்றுக் கொண்டு விட்டது. உறக்கம் கொள்ளாமல் அவள் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள். மனத்தை இனம்புரியாத வேதனை பிடித்து வாட்டிக்கொண்டிருந்தது.



பூனை முதலில் ஒரு காட்டு மிருகமாக இருந்தது. சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ரோமானியர் அதைப் பழக்கி வீடுகளில் வளர்க்க ஆரம்பித்தனர்.

— வீக் எண்ட் - பாபு



அவள் அநூப்பை மறக்க எத்தனைக்கெத்தனை முயற்சி செய்தாளோ, அத்தனைக்கத்தனை அவன் நினைவு அதிகமாகி அவளை வாட்டி வதக்கியது. அவன் நினைவு அவளது மூளை நரம்புகளையெல்லாம் முடுக்கிவிட்டு விண்விண் என்று தெறிக்க வைத்தது. தாயாரின் உடல் நலக் குறைவு வேறு அவள் மனத்துக்குச் சுமை யேற்றியது.

ரோஸியின் உடல் நிலை நாளுக்கு நாள் தேறி வந்தது என்றாலும், மிக மெதுவாகத்தான் குணம் கண்டது. அநூப்பின் தமக்கைக்குக் கொடுத்த வாக்குறுதியை ரூபா தன் தாயாரிடம் கூறவில்லை. சாரதா தேவியின் பேச்சு வந்தால், அவளுடைய உபகாரங்களைப் பற்றி ரோஸி ஏகமாகப் புகழ்வாள். ரூபாவும் அவள் மனம் கோணாமல் 'ஆமாம், ஆமாம்' போடுவாள். காரணம், உண்மையைக் கூறித் தாயாரின் மனத்தை நோக அடிக்க அவள் விரும்பவில்லை.

அதனால் தாயாரின் வேதனையையும், அநூப்பின் நினைவால் கனக்கும் மனச் சுமையையும் குறைத்துக் கொள்ள ரூபா எங்கேயாவது வேலை பார்ப்பது என்ற முடிவுக்கு வந்தாள். ரோஸி அவளுடைய அந்த முடிவை அவ்வளவாக ஏற்கவில்லை என்றாலும், அவள் பிடிவாதத்துக்கெதிரே தாக்குப் பிடிக்க முடியாமல் திணறினாள். அதோடு தான் அவளுடைய கடந்த வாழ்க்கைத் திரையைக் கிழித்தெறிந்து விட்டதால், பெண் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் அவளால் சரியாகப் பதில் கூறமுடியவில்லை. அதனால் அவள் பெண்ணின் ஒவ்வொரு பேச்சுக்கும் தலை குனியும்படி ஆகிவிட்டது. சில சமயம் பெண்ணைச் சாடி அவள் பிடிவாதத்தைத் தகர்த்தெறியலாமோ என்று அவளுக்குத் தோன்றும். ஆனால் அடுத்த கணமே வேறு பல சிந்தனைகள் எழுந்து அவளைச் செயற்படவொட்டாமல் திணற அடிக்கும்; வாயடைத்துப் போவாள்.

ரூபா அன்றாடம் எப்படியாவது சிறிது நேரம் ஏற்படுத்திக் கொண்டு வேலை தேடிப் போய் வருவாள். ஆனால் அவளுக்கேற்ற வேலை ஏதும் கிடைக்காமற் போகவே, நம்பிக்கை இழந்து வாடலானாள். சிம்லா போன்ற சிறிய நகரத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் மிக்க வேலை கிடைப்பது என்பது அவ்வளவு எளிய காரியமில்லையே! ஸிஸ்டர் தெரெஸா கூடத் தன்னால் இயன்றவரை முயன்று பார்த்தாள். அவளுக்கும் அவ்வளவு விரைவில் வெற்றி கிட்டவில்லை. கடைசியில் டாக்டர் பக்ஷியின் சிபாரிசின் பேரில் அவளுக்கு ஒரு 'நைட் கிளப்'பில் டெலிபோன் ஆபரேட்டர் வேலை கிடைத்தது.

அவள் தனக்கு வந்த உத்தரவு காகிதத்தை எடுத்துக் கொண்டு நேரே ஆஸ்பத்திரிக்குச் சென்றாள். ஏனெனில் டாக்டர் பக்ஷிக்கு எதிர்த்தாற்போல் தனக்கு வேலை கிடைத்திருக்கும் விஷயத்தைக் கூறினால், தாயார் மறுத்துக் கூற மாட்டாள் என்று அவள் எண்ணினாள். இனி மாதம் இருநூறு ரூபாய் வரும், வீட்டுக் கஷ்டம் விடியும் என்று எண்ணிப் போனவளுக்கு ஏமாற்றமே எஞ்சியது. வேலை என்ற சொல்லைக் கேட்டதுமே ரோஸி கொதித்தெழுந்து விட்டாள். கூடாது என்று நிர்த்தாட்சிண்யமாகத் தடுத்து விட்டாள். உடல் நலம் குன்றியிருக்கும் தாயார் இருக்கும் நிலையில் அதிகம் பேசக் கூடாது என்பதற்காக ரூபா மௌனம் சாதித்தாள்.

ரோஸிக்கு உண்மை விளங்கியது. ஸிஸ்டர் தெரெஸா அவளைப் பார்த்தபொழுது ரூபாவின் நிலையையும் கருத்தையும் தெள்ளத் தெளிய விளக்கி விட்டாள். இருந்தாலும் ரூபாவின் பிடிவாதத்துக்காகத் தனது பதினெட்டு ஆண்டு நோன்புக்குப் பங்கம் ஏற்படுவதையும் அவள் விரும்பவில்லை. மகளை அவள் அப்படி வருத்தம் தெரியாமல் அல்லவா வளர்த்திருந்தாள்! ''அப்படியானால் நான் சொல்வதைக் கேட்க மாட்டாயா?'' என்று கேட்டாள்.

''அம்மா! என்னால் வேலையின்றி இருக்க முடியாதம்மா! நான் எவருக்கும் சுமையாக வாழ விரும்பவில்லை'' என்றாள் ரூபா உறுதியான குரலில்.

''ஆனால் ஜனங்கள் இந்த வேலையை மரியாதை நோக்கோடு பார்ப்பதில்லை. ஒவ்வொருவனுடைய தீய நோக்குக்கும் நீ பலியாக வேண்டியிருக்கும். அதிலிருந்து தப்புவது சிரம சாத்தியம். அதோடு இரவு வெகு நேரம் கழித்துத் தனியாக வீட்டுக்கு வர வேண்டியிருக்கும். அதுவரையில் யார் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பது? அதனால்தான்...''

''நான் என் காலில் நிற்க விரும்புகிறேன், அம்மா! அப்பொழுது எனக்கு நல்லது கெட்டது தெரியாமலா போகும்?''

''அப்படியானால் ஒரு வேலை செய்!''

''என்ன?''

''நான் உனக்கு வேறு வேலை வாங்கித் தருகிறேன். அதனால் உன் மரியாதையும் காப்பாற்றப்படும். இதைக் காட்டிலும் இரண்டு மடங்கு சம்பளமும் கிடைக்கும்!''

''எப்படி?'' ரூபா வியப்புடன் கேட்டாள்.

ரோஸி ஒரு நிமிஷம் அவளை உற்றுப் பார்த்தாள். பிறகு தலையணைக்கடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினாள். ரூபா அந்தக் கடிதத்தைத் தாயாரின் கையிலிருந்து வாங்கி, உறையின் மீது எழுதியிருந்த முகவரியைப் பார்த்தாள். பிறகு உறையிலிருந்து கடிதத்தை எடுத்துப் படித்தாள். ஒரு முறைக்கு இரு முறையாக, பல முறையாக. அப்புறம் ''இந்த சுபாலா என்கிறது யார் அம்மா?'' என்று கேட்டாள்.

''என் பழைய எஜமானி. பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் இவர்களிடம் வேலை பார்த்தேன். இவள் கல்யாணமாகிக் கணவன்

வீட்டுக்குப் போன பின்னரே எனக்கு விடுதலை கிடைத்தது!''

''இருக்கலாம். என்னைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ளாமலே ஐந்நூறு ரூபாய் சம்பளம் தரச் சம்மதித்து வேலைக்குக் கூப்பிடுகிறார்களே, அதெப்படி?''

''நான் அடிக்கடி அவர்களுக்குக் கடிதம் எழுதுவதுண்டு. என் உடல்நிலை பற்றி அறிந்து அவள் கலங்கிப் போய்விட்டாள். நான் யாரிடமும் கை நீட்டிப் பிச்சை வாங்குபவள் அல்ல என்பதும் அவளுக்குத் தெரியும். அதனால்தான் தனது இரட்டைக் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்காக உன்னை வரச் சொல்லுகிறாள்!''

''என்னால் இந்த வேலையெல்லாம் செய்ய முடியாது, அம்மா!'' ரூபா எரிந்து விழுந்தாள்.

''வேலை என்பது பெயருக்குத்தான். உன்னைத் தன் பெண்ணைக் காட்டிலும் மேலாக நடத்துவாள். நீயும் மரியாதையோடு வாழலாம். என் நோய் பற்றிய பிரச்னையும் தீரும்!''

''அதற்காக நான் உன்னைத் தனியே விட்டு விட்டுப் போக மாட்டேன் அம்மா !''

''ரூபா! பிடிவாதத்தை விடு. நான் சொல்வதைக் கேளு. நீ இங்கே தனியாக இருப்பது நல்லது அல்ல.''

''அம்மா! நான் உன் பேச்சைக் கேட்கவில்லை யென்றால்...?''

''நான் நாளைக்கே ஆஸ்பத்திரியை விட்டு விடுவேன்; உன்னோடு வீட்டில் வந்து தங்குவேன்!'' ரோஸி நடுங்கும் குரலோடு கூறி நடுங்கும் கையோடு ரூபாவின் கையிலிருந்த கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டாள்.

ரூபா விக்கித்துப் போய் விட்டாள். தாயாரின் விழிகளில் தாண்டவமாடிய தைன்ய நிலையைக் கண்டபொழுது அவளுக்குக் கையும் விளங்கவில்லை; காலும் விளங்கவில்லை. டியூட்டியில் இருந்த நர்ஸ் அதிகம் பேசக் கூடாது என்று அவர்களை எத்தனையோ தடுத்தாள். நிலைமை அவள் பிடிக்கு அடங்காமற் போகவே ஆத்திரத்தைக் கொட்டுவாளோ என்று தோன்றியது. எனவே, ரூபா பால் கூட வைக்கும் சாக்கில் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து வெளியேறிவிட்டாள்.

வெளியே வந்த பின்னரும், அவள் மூளையில் தாயாரின் முடிவும் சபிதாவின் கடிதமும் மாறி மாறிச் சுழன்று புரட்டி எடுத்தன.

அன்று இரவு பிரபு வீட்டுக்குத் திரும்பிய பொழுது, அநூப் வெளி வராந்தாவில் தன் பெட்டி படுக்கைகளை வைத்துக் கொண்டு அவனுக்காகக் காத்திருப்பதைக் கண்டான்.

''ஏண்டா பழி! வரப்போவதாகக் கடிதம் போட்டிருக்கக் கூடாது? அறைச் சாவியை வெற்றிலை பாக்குக் கடையில் கொடுத்துவிட்டுப் போயிருப்பேனே!'' என்றான்.

''இப்பொழுதெல்லாம் நீ வீட்டைப் பூட்டி விட்டுத்தான் வெளியில் போகிறாய் என்பது எனக்குத் தெரியாதே! இத்தனை பொறுப்பு உனக்கு எப்பொழுதடா வந்தது?''

''என்ன செய்வது? வீட்டுக்காரன் வாடகை தரவில்லையென்றால், சாமான்களையெல்லாம் தெருவில் தூக்கி எறிந்துவிடப் போவதாகப் பயமுறுத்தியிருக்கிறான், அப்பா!''

''இப்படி எத்தனை நாட்கள்தான் ஓட்ட முடியும்? வாடகையை வீசி எறிவதுதானே?''

''சொல்வது சுலபம்! ஆனால் பணத்துக்கு நான் எங்கே போவேன்?'' அநூப்பின் பெட்டியைத் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தவாறே கேட்டான் பிரபு.

''பணம் என்னடா பணம்! பிசாத்து பணம்! நான் தருகிறேனடா! தலையைச் சுற்றி விட்டெறியடா, வீட்டுக்காரனிடம்!'' அவனைப் பின்தொடர்ந்த அநூப் அலட்சியமாகப் பதில் சொன்னான்.

''இந்தத் தடவை அக்கா கணிசமாகப் பணம் கொடுத்திருக்கிறாள் போலிருக்கிறது!''

''இல்லை; உன் நண்பனின் சம்பாத்தியம். அக்காவின் கணவர் பேரிலிருந்த டிராக்டர் ஏஜன்ஸியை நான் எடுத்து நடத்துகிறேன்!''

''போடுடா தகடிகேன்னான்! அப்படியானால் உன் பணத்தை வாங்கிக்கொள்வதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் ஒரு நிபந்தனை. திருப்பித் தரும் கடனாகத்தான் ஏற்பேன்!''

''இங்கே கூட நகரசபையில் ஒரு பெரிய ஆர்டர் கிடைக்கப் போகிறது. நாளைக்கே டெண்டர் போடணும்.''

''அப்படியானால் ஐயா வியாபார நிமித்தம் தான் இங்கேவந்திருக்கிறார் என்று சொல்லு!''

''ஆமாம்!''

''நான் என்ன நினைத்தேன், தெரியுமா? உன் வானம்பாடி உன்னை வருந்தி அழைத்திருக்கும் என்று!''

''அவள்தான் ஹாஸ்டலையே விட்டுப் போய் விட்டாளே!''



"ஹாஸ்டலை விட்டுப் போனால் என்ன? வீட்டுக்குப் போயிருப்பாள். அங்கே போய்ப் பார்க்கிறதுதானே?"

"அங்கே பூட்டுத் தொங்குகிறது. அண்டை அயலாரிடம் விசாரித்ததில் ஆஸ்பத்திரியில் அவள் தன் அம்மாவோடு இருக்கிறாள் என்று கேள்விப்பட்டேன்!"

"நீ ஆஸ்பத்திரிக்குப் போகவில்லையா?"

"அங்கேயும் போனேன். ஆனால் பார்க்கிற நேரம் முடிந்து போயிருந்தது. டாக்டர்கள் அநுமதி தரவில்லை. அவள் அம்மாவுக்கு இதய நோயாமே!"

"பெண்ணுக்கல்லவா இதய நோய்! அது அவள் அம்மாவை எப்படிப் பற்றிக் கொண்டது?"

"உனக்கு எப்பொழுது பார்த்தாலும் வேடிக்கையும் விளையாட்டும்தானா?"

"ஆமாம். என்ன செய்கிறது? வாழ்க்கையே ஒரு விளையாட்டுத்தானே? நான் சொல்வது மெய் இல்லையென்றால், உங்கள் இருவருக்குமிடையே தொடங்கிய வேடிக்கை இப்படி ஆழ்ந்த காதலாக உருவெடுத்திருக்குமா?" என்று கேட்டுக் கொண்டே பிரபு உடை மாற்றிக்கொள்ளத் தன் அறைக்குள் நுழைந்து விட்டான்.

அவனுடைய இந்தப் பேச்சு அநூப்புக்குத் தவறாகப் படவில்லை. ஆனால் அது ரூபாவின் நினைவைக் கிளறி விட்டது.

அவன் சட்டைப் பையிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து இழுத்து உறிஞ்சலானான். அவன் ஊதிய புகை லேசாக அறை முழுதும் மண்டியது. அந்தப் புகை மேகம் அவனுக்குப் பனி மூட்டத்தை நினைவு படுத்தியது. அந்தப் பனி மூட்டத்தில்தானே இரண்டு இளம் உள்ளங்கள் முதன் முதலாக இணைந்து துடித்தன? அந்த நினைவுநெஞ்சை நிறைத்தது.

ரூபா முதல் நாள் கிளப்பில் வேலைசெய்யப் போன பொழுதே, அவ்விடத்துச் சூழ்நிலையைக் கண்டு அவள் உள்ளத்தில் இனம் புரியாததோர் அச்சம் தோன்றியது. குடி, சூது, கேலி, காமக் கேளிக்கை என்று எல்லாமே பகிரங்க ஆட்டம் போடுவதைக் கண்டபொழுது அவளுக்குத் தன் முடிவை மாற்றிக் கொள்ளத்தான் தோன்றியது. ஆயினும் தனக்குள்ள சிரமங்களை எண்ணிப் பார்த்த பொழுது பல்லைக் கடித்துக் கொண்டு அந்த வேலையைப் பார்த்தே தீருவது என்று மறு முடிவுக்கு வந்தாள்.

இந்த வேலை கிடைத்ததனால் அவளுக்குச் சிறிதும் மகிழ்ச்சி இல்லையென்றாலும், அவளுடைய போராட்டம் மிகுந்த வாழ்க்கையின் முதல் வெற்றி அயிற்றே! பிறர் உதவியின்றித் தன் காலில் நிற்க, தன்னைத்தானே புரிந்து கொள்ள, தன்னைத் தானே எடைபோட்டுக் கொள்ள அவளுக்குக் கிடைத்த முதல் வாய்ப்பு ஆயிற்றே! அதைக் கைநழுவ விடலாமா?

இப்படியெல்லாம் சீர்தூக்கியவாறு அவள் அன்பகத்திரி வரைக்கும் வந்து விட்டாள். தாயாரின் அறையை நோக்கி எட்டி எட்டி எட்டுப் போட்டவள் இடீர் பிரேக் போட்டது போலத் திகைத்து நின்றாள். காரணம், அவளது தாயாரின் அறையிலிருந்து அப்பொழுதுதான் அநூப் வெளியே வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் அவள் வெளியே வராந்தாவிலேயே பிரமை பிடித்தவள் போல் நின்றாள். அநூப் நாலே பாய்ச்சலில் அவளை நெருங்கி வந்து, "ஹலோ, ரூப்!" என்று மெதுவான குரலில் கிசுகிசுத்தான்.

ரூபா ஒன்றும் பதில் கூறாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அநூப்பின் விழிகளோடு தன் விழிகளை உறவாடவிட அவளுக்குத் துணிவு ஏற்படவில்லை. அவள் தலை குனிந்து தரையை நோக்கியவாறு மௌனம் சாதித்தாள்.

"உன் அம்மா தூங்குகிறாள்!" என்றான் அநூப்.

"டாக்டர் தூங்குவதற்காக ஊசி போட்டிருப்பார்!" நடுங்கும் குரலில் எப்படியோ சொல்லி முடித்தாள் ரூபா.

"இப்பொழுது உன் அம்மாவின் உடல் நிலை எப்படி இருக்கிறது!"

"முன்னைக்கு இப்பொழுது பரவாயில்லை. இருந்தாலும் அபாய நிலை தாண்டிவிட்டதாகக் கூற முடியாது."

"என்னால் ஆகக்கூடிய காரியம் ஏதாவது இருந்தால் சொல்லு!"

"நீங்கள் இங்கே வந்திருக்கக் கூடாது."

"ஏன்?" அநூப் துணுக்குற்றான்.

"நீங்கள் வருவதனால் என் மனச் சங்கடம் அதிகமாகிறது."

"என்ன சொல்கிறாய் நீ?"

"நான் வேலைக்குப் போகிறேன்!"

"வேலைக்குப் போகிறாயா? எதற்காக? எங்கே?" அவனது உள்ளத் துடிப்பு குரலிலும் ஒலித்தது.

"வேலையை விட்டால் எனக்கு வேறு வழி இல்லை. அதனால்...."

"உனக்கு உள்ள சிரமங்களை என்னோடு பகிர்ந்து கொண்டிருக்கலாமே!"

"என் சிரமங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள முடியாது. கூடவும் கூடாது என்பதனால்தான் வேலைக்கு ஒப்புக் கொண்டேன். எதுவும் என் விதிப்படி நடக்கட்டும். தயவு செய்து...."

"ரூபா....!" அநூப் உரக்கவே கூவி விட்டான்.

"மறந்து விடுங்கள், ரூபாவை."

எப்படி மறக்க முடியும்? நாம் சந்தித்துக் கொண்ட சந்திப்புக்கள், மேற்கொண்ட உறுதிகள், கண்ட கனவுகள் — இவற்றை என்னதான் முயன்றாலும் மறக்க முடியுமா? இருவருடைய இதயங்களிலும் விழுந்து வேரூன்றிய அன்பு என்ன ஆவது....?"

"எல்லாமே வெறும் பிரமை. இனி ரூபாவுக்குத் தன் தாயார்தான் எல்லாம். அவளைத் தவிர வேறு யாரிடமுமே அன்பு கிடையாது."

"அது உன் கடமை. தாயாரிடம் அன்பு பாராட்டாதே, அவளுக்குப் பணி செய்யாதே என்று யார் உன்னைத் தடுக்கிறார்கள்?"

"உங்கள்..." என்று தொடங்கிய ரூபா கூர்ந்து அநூப்பின் முகத்தை நோக்கினாள். அவள் விழிகளில் நீர் பனித்தது. அதை மறைத்துக் கொள்ள அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். (தொடரும்)

உண்மைக்கு அடிமையாக இருங்கள்;
நீங்கள்தான் சுதந்திரமான மனிதர். —அராபிய பழமொழி - ஆர். எம்.

வட்ட மேஜை

தமிழகத்தில் ''கதர் என்றால் அய்யாமுத்து. அய்யாமுத்து என்றால் கதர்'' என்று தலைவர்கள் பலர் எண்ணும்படி செயலாற்றியவர் கோவை அய்யாமுத்து.



கதருக்கு இலக்கணம் வகுத்தார்; இலக்கியம் எழுதினார். கதர் இயக்கத்துக்கு வடிவம் கொடுத்தார். புதுப் புது கண்டு பிடிப்புக்களைப் புகுத்தினார். சிந்தித்தவைகளைச் செயல்படுத்தினார்.

'' குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல் ''

என்றவாறு நல்லவைகளை வரவேற்றார்; அல்லாதவைகளைப் புறக்கணித்தார். முன்னேறுகிற வேகத்தில் கதர் இயக்கம் திசை மாறிவிடக் கூடாது என வற்புறுத்தினார். ஆறு கதிர் ராட்டை; ஆயிரங் கதிர் ஆலையாக மாறி விடக் கூடாது என்பது அவரது வேண்டுகோள்.

கஞ்சியின்றிக் கதறிய மக்களைக் கதர் தேற்றியது. இன்று அய்யாமுத்து அவர்கள் மறைவால் கதரே தேம்புகிறது. அய்யாமுத்து அவர்களின் தூய்மையான ஆன்மா அமைதி பெற இறைவனது பூங்கழல்களை இறைஞ்சவதோடு அன்னார் விட்டுச் சென்ற பணிகளைத் தொட்டுத் தொடர்ந்து அடித்தள மக்களை முன்னேற்றுவோம் என உறுதி பூண்டு கதருக்கு ஆறுதல் கூறுகிறோம்.

குடந்தை
22-1-76 உ. சிங்காரவேலன்

தங்களது 25-1-76 'கல்கி' தலையங்கத்தில் ''தி.மு.க. அரசு அண்மையில் பஞ்சப்படியை உயர்த்தி உத்தரவிட்டுள்ளதிலும் அரசியல் நோக்கைக் காண முடியும்'' என்ற வரியைப் படித்துவிட்டு எனது கீழ்க்கண்ட கருத்துக்களைத் தமிழ் நாடு என். ஜி. ஓ.க்களின் சார்பாக எழுதுகிறேன்.

இன்று இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள என். ஜி. ஓ.க்களை விடக் குறைந்த சம்பளம் வாங்குவோர், தமிழக ஊழியர்களே. உண்மையான தலைமையும், வன்முறையில் இறங்கா உள்ளமும் கொண்டுள்ள எங்களுக்கு வாதாட எந்தவித சக்தியும் இல்லை.

உதாரணமாக எல். டி. ஸி. எனப்படும் எழுத்தரின் சம்பள விகிதம் இங்கு எப்படி மாறுபட்டுள்ளது எனக் குறிப்பிடுகிறேன்:

மத்திய அரசு எழுத்தர் :

அடிப்படைச் சம்பளம்	..	260
பஞ்சப்படி	..	246
வீட்டு வாடகைப் படி	..	17
மொத்தம்		523

கேரள அரசு எழுத்தர் :

அடிப்படைச் சம்பளம்	..	235
பஞ்சப்படி	..	160
வீட்டு வாடகைப் படி	..	15
மொத்தம்		410

தமிழக அரசு எழுத்தர் :

அடிப்படைச் சம்பளம்	..	210
பஞ்சப்படி	..	105
வீட்டு வாடகைப் படி	..	17
மொத்தம்		332

வித்தியாசத்தைப் பாருங்கள். இதனை மற்றவற்றுக்கெல்லாம் அண்டை மாநிலங்களைச் சுட்டிக் காட்டும் டாக்டர் கலைஞருக்கு எடுத்துக்கூறி எங்கள் சார்பாக வாதாடுங்கள்.

கும்பகோணம்
24-1-76 ஓர் என்.ஜி.ஓ.


(பஞ்சப்படியை உயர்த்தியது தவறு என்று நாம் கூறவேயில்லை. உயர்த்தப்பட்டுள்ள சந்தர்ப்பம் அல்லது காலகட்டம் அரசியல் நோக்கினை உணர்த்தலாம் என்றுதான் குறிப்பிட்டிருந்தோம். —ஆர்)

என்னசேதி பகுதியில் இறைச்சி தயாரிக்கும் நவீனக் கூடம் பற்றிக் கூறியுள்ளீர்கள். சென்னை நகராண்மைக் கழகத்தார் புழல் கிராமத்தில் நவீன இறைச்சிக் கூடம் கட்டத் திட்டமிட்டபோது, ஜைனர்களும் மற்றவர்களும் குறிப்பிட்ட இடத்தில் இறைச்சிக் கூடம் கட்டக் கூடாதென விண்ணப்பித்ததன் நோக்கம் ஜைனர் கோவிலும், சிவன் கோவிலும் அருகில் இருந்ததுதான்.

அந்த மகஜரை ஏற்றுக்கொண்ட தமிழக முதல்வர், அவ்விடத்தில் இறைச்சிக் கூடம் கட்டும் திட்டம் கைவிடப்பட்டது என அறிவித்தாரேயன்றி நவீன இறைச்சிக்கூடமே கூடாது எனக் கூறவில்லை.

சென்னை
22-1-76 டி. எஸ். ஸ்ரீபால்

[ஜனவரி 12ந் தேதி ஒரு தினப் பத்திரிகையில் வெளியான செய்தியின் அடிப்படையில் மேற்படி என்னசேதிக் குறிப்பு எழுதப்பட்டது. —ஆர்.]



நேரம் பெண்ணானது

அழகிய பெண்ணுக்கும் கடியாரத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன? கடிகாரம் நேரம் போவதைக் காட்டுகிறது. பெண்ணின் அழகு நேரம் போவதே தெரியாமல் செய்கிறது!

—உமன்ஸிரா - சம்பத்குமார்

அவன்

வீட்டுக்குப் போகாமல் மேரியின் வீட்டிலேயே தங்க ஆரம்பித்து அன்றுடன் நாலாவது நாள். இன்றைக்காவது வீட்டுக்குப் போய் வரவேண்டும் என்று நினைத்தான் சந்தானம். மேரியின் அம்மா மெதுவாகப் பேச்சோடு பேச்சாக ஆரம்பித்துவிட்டாள், ''டைவோர்ஸுக்கு ஏற்பாடு பண்றீங்களா?'' என்று.

மேரியின் வீட்டில் இரவு தங்கும்போது நடக்கும் வழக்கம்போல் அவன் எட்டு மணிக்கே அலுவலகத்துக்குக் கிளம்பிவிட்டான். மேரி சாப்பிட்டுவிட்டு ஒன்பது மணிக்குத்தான் கிளம்புவாள். அவன் இன்னும் அவள் வீட்டுச் சாப்பாட்டுக்குப் பழக்கப் படுத்திக்கொள்ளவில்லை. என்னதான் அவள் வீட்டில் இரவு தங்கும் பழக்கத்தை வைத்துக் கொண்டாலும் இரண்டு பேரும் சேர்ந்து அலுவலகத்துக்குப் போய் வதந்தியின் நாக்குகளுக்கு இன்னும் அதிகமாக இரை போட அவன் விரும்பவில்லை.

எல்லோருக்கும் முதலில் அவன் அலுவலகம் வந்துவிட்டான். மேஜையில் குவிந்திருந்த பைல் கட்டில் அவன் மூழ்கினான். மனம் ஒரு கணம் கோமதியின் நினைவில் நின்றுவிட்டு மீண்டது.

அவனுக்குக் கல்யாணம் ஆகி ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டது. கோமதி வந்த புதிதில் அவன் கண்களுக்கு அழகாகத் தோன்றினாள். அவன் அவளை விரும்பித்தான் கல்யாணம் செய்து கொண்டான். இருவருக்கும் சமமான படிப்பு அந்தஸ்து. இன்னமும் கோமதியின் அழகில் குறை சொல்ல முடியாதுதான். ஆனாலும் இருவருக்கும் இடையில் ஒரு பாலம் ஏற்படாததால்தானோ என்னவோ சந்தானத்துக்குக் கோமதியிடம் ஆரம்பத்தில் இருந்த பிரமை விடுபட ஆரம்பித்தது.

அப்போதுதான்...

வேறு செக்‌ஷனில் இருந்த மேரி அவன் செக்‌ஷனுக்கு மாற்றலாகி வந்து அடுத்த மேஜைக்கே வந்தாள். பட்டாம்பூச்சி மாதிரிச் சிறகடித்துப் பறக்கும் அவள் ''இது என்ன சார்?... இந்த பைலை எப்படி சார் போட வேண்டும்?'' என்று அவன் அருகில் நெருங்கி வந்து குனிந்து நின்று கேட்கும்போதெல்லாம் சந்தானம் கிறங்கிப் போனான்.

இடைவேளையில் கோமதி கட்டிக் கொடுத்த தோசையையும் இட்லியையும் மேரிக்குக் கொஞ்சம் கொடுப்பதில் ஆரம்பித்த பழக்கம் ஒரு நாள் கொண்டு வந்திருந்த டிபன் பாக்சைத் திறந்து பார்த்து ''என்ன மேரி, இந்த இட்லியும் தோசையும் எனக்கு 'போர்' அடிக்கிறது. இன்றைக்கு ஹோட்டலுக்குப் போய் வருவோமா?'' என்று கேட்பதில் தொடர்ந்தது.

''ஓ. கே...'' என்று உடனே அவன் எதிரில் துள்ளி எழுந்து நின்ற மேரியை முழுமையாகப் பார்த்த அந்தக் கணத்தில் அவன் தன்னை இழக்க ஆரம்பித்தான்.

ஹோட்டலில், தனி அறையில் மெதுவாக அவள் கையில் உரசியபோது, ஒரு நாள் வெளியே நடக்கும்போது கூட்டத்தின் சந்தடிக்கு ஒதுங்குவது போல் அவளைச் சிறிது அணைத்தபடி நடந்தபோது, அதன் பின்னர் சினிமாக் காட்சியின் இருட்டைச் சாதகமாக்கிக்கொண்டு...

சந்தானம் தன்னை முழுமையாக இழந்தான்.

சந்தானத்தின் மனசிலிருந்து கோமதி மறைந்து மேரியே வியாபித்துக்கொண்டாள்.

ஒரு நாள், ''என்ன மேரி, இப்படி நான் உன்னுடன் சுற்றுகிறேனே இதைக் கேள்விப்

நான்கு நாட்களில் ஒரு நாடகம்!



பட்டால் உன் அம்மா உன்னை ஒன்றும் சொல்ல மாட்டாங்களா?'' (மேரிக்கு அப்பா இல்லை) என்று கேட்டான்.

''ஒன்றும் சொல்ல மாட்டாங்க. இதிலே சொல்ல என்ன இருக்குது? நாங்க ஒன்றும் இந்துக்கள் மாதிரி குறுகிய மனப்பான்மை கொண்டவங்க இல்லே. எங்க அம்மாவுக்கு ரொம்பப் பரந்த மனசு!....'' என்றாள்.

''அப்படியா? என்னை உன் அம்மாவுக்கு அறிமுகப் படுத்தி விடுகிறாயா?'' என்று அவன் தொடர்ந்தான்.

''வித் ப்ளஷர்'' என்றாள் அவள்.

''இன்றைக்கேவா?''

''இன்றைக்கு வேணும். முதலிலே அம்மா விடம் இந்துப் பையன் ஒருத்தனை அழைச்சுக் கிட்டு வரப் போகிறேன் என்று சும்மா ஒரு ஃபார்மலா சொல்லிவிட்டுத்தான் அழைச் சுக்கிட்டுப் போகணும். முன்னாடி சொல்லா மல் திடுதிப்பென்று அழைச்சுக்கிட்டுப் போனால் எனக்கு மானர்லே இல்லேன்னு நினைச்சுப்பாங்க...''

''ஓ. கே.'' என்றான் சந்தானம்.

மூன்றாவது நாளே அழைப்பு வந்துவிட்டது. சந்தானம் நீட்டாக டிரஸ் செய்து கொண்டு போனான். மேரியின் அம்மாவுக்கு அவனைப் பிடித்துப் போய்விட்டது.

ம. சாப்பிட்டு வரப் போனவன் அங்கேயே வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தான்.

மறு நாள் சினிமா.. ஒரு நாள் எங்கோ பிக்னிக்...

ஒரு நாள் மேரி வீட்டில் இரவு பத்து மணி வரை பேசிக் கொண்டிருந்து விட்டு ''இனிமே வீட்டுக்குப் போக பஸ், டாக்சி கிடைக் குமோ, என்னவோ?'' என்று சொல்லிக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டான்.

ஒரு நாள் தங்கியதில் குளிர் விட்டுப் போனவுடன் அதுவே வாரத்துக்கு ஒரு நாள் இரண்டு நாட்கள் என்று ஆரம்பித்து இப் போது மூன்று முழு இரவுகள் சேர்ந்தாற் போல் முடிந்து, நாலாவது நாள்.

அவள்

ஆரம்பத்தில் எல்லாம் கோமதிக்குச் சந் தானத்தின் விவகாரம் எதுவுமே தெரியாது. பல நடவை அவன் ''இன்னும் இரண்டு தோசை டிபனில் எடுத்துவை, இட்டிலி பூமாதிரி இருக்கணும். சட்டினி நிறைய வைத்து இன்னும் நாலு வை'' என்று சொன்னபோதெல்லாம் அவள் தன் கைத் திறனை அவன், அலுவலகத்து நண்பர்கள் மெச்சிக் கொள்வதாக நினைத்துப் பெருமை அடைந்தாள். நாளாக நாளாக அவன் வீட் டுக்கு வர நேரமானதையும், வந்தபோதெல் லாம் நடந்து கொண்ட தோரணையையும் பார்த்து ஒரு பாதியைப் புரிந்து கொண்டாள்.

சர்க்கரை ரேஷன் வாங்க ஒரு நாள் கியூவில் நின்று கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாகச் சந்தித்த சந்தானத்தின் அலுவலக பியூன்தான் ஒரு மாதிரியாக நிலைமையை முழுவதும் அவளுக்கு விளங்க வைத்தான். அந்தக் கணத்தில் அவள் நெஞ்சு 'திக்' என்று அடித்துக் கொண்டது. பல நாட்களாகவே ஏமாந்து போய்க் கொண்டிருக்கிறோமே, இதை





ஓவியர் ஆர். கே. லக்ஷ்மணனுக்குப் பிடித்தமான பறவை காக்கை. வீட்டில் காக்கையின் படங்களை நிறைய போட்டு வைத்திருக்கிறார்!

- கே. ஆர். யூத் டைம்ஸ்

முதலிலேயே புரிந்து கொள்ளாமல் போய் விட்டோமே என்று எண்ணித் தவித்தாள்.

நேரம் கழித்தாவது வீட்டுக்கு வந்துகொண்டிருந்த கணவன் வாரத்துக்கு ஒரு நாளோ இரண்டு நாட்களோ இரவு முழுவதும் வராமல் இருப்பதைக் கண்டவுடன் அவளுக்கு ஆத்திரம் புரண்டு எழுந்தது. அவன் வந்தவுடன் கொட்டித் தீர்த்தாள். பலன் — ''இருக்க இஷ்டம் இருந்தால் இரு. இல்லாவிட்டால் அம்மா வீட்டுக்குப் போய்க்கோ. என்னைக் கேட்க உனக்கு அதிகாரம் இல்லை'' என்று சந்தானம் கூறியதுதான்.

ஆத்திரப்பட்டுக் கொண்டு ஊருக்குப் போய்விட்டால் கையில் உள்ள கொஞ்சப் பிடியும் போய்விடும் என்பதை உணர்ந்தாள் கோமதி. பொறுத்துப் பார்த்து மேலே நடப்பதைக் கவனித்துக் கொண்டு நடக்க வேண்டும் என்று அவள் அறிவு சொல்லியது.

இன்றோடு அவர் வீட்டுக்கு வந்து நாலாவது நாள். கோமதி நெட்டுயிர்த்தாள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் ஜாடை மாடை கேள்விகள் முள்ளாய்த் தைத்தன.

அவன்

பதினொரு மணிக்குத் தபால்காரர் வந்தார். என்றைக்கும் இல்லாத அதிசயமாக அலுவலக விலாசத்துக்குத் தன் பெயருக்குக் கடிதம் வந்திருப்பதைக் கண்டு வியப்புடன் சந்தானம் கடிதத்தைப் பிரித்தான்.

''' அநேக நமஸ்காரம்' என்று ஆரம்பிக்க வேண்டுமா?... இன்னமுமா...? இன்றுடன் நீங்கள் வீட்டை விட்டுப் போய் நான்கு நாட்கள் ஆகிவிட்டன. அக்கம் பக்கத்தில் ஜாடை மாடையாகக் கேட்கிறவர்களுக்கு நான் என்ன சொல்வது?

உங்களுக்குத்தான் வீட்டுக் கவலையே இல்லை. எனக்கு அப்படி இல்லையே. நேற்றைக்கு ரேஷன் சர்க்கரை வாங்கிக்கொண்டு வரவேண்டியிருந்தது. வாங்கிக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்தேன். இரண்டு கைகளிலும் இரண்டு பை. ஒன்றில் ஐந்து கிலோ சர்க்கரை, மற்றொன்றில் இரண்டு கிலோ ரவா. மைதா. தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தேன். வீட்டிலிருந்து கிளம்பும்போதே ஒரு மாதிரியாக இருந்த வானம் திடீரென்று இருட்டிக் கொண்டு வந்து திரும்பும்போது அடுத்த நிமிஷமே மழை வருவதைப் போல் இருந்தது. சர்க்கரைப் பையை வைத்துக் கொண்டு மழையில் நடந்து போவதா அல்லது கடையில் எங்கேயாவது ஒதுங்குவதா? எத்தனை நேரம் நிற்க முடியும் என்று புரியாமல் நடந்துகொண்டிருந்தேன்.

திடீரென்று தூற்றல் ஆரம்பித்து விட்டது. அந்தச் சமயம் பார்த்து என்னை யொட்டிப் பெரிய கார் ஒன்று வந்து நின்றது. உள்ளேயிருந்து, ''நீங்களா? என்ன இது, இரண்டு கைகளிலும் பை? என்ன கனம்! உடம்பே சாயுதே! வண்டியில் ஏறிக்குங்க. வீட்டு வாசல்லே இறக்கிவிடச் சொல்றேன்'' என்ற குரல் கேட்டது.

என் பக்கத்தில் ஏறிக்கொள்ள வாகாகக் காரின் கதவும் திறந்தது. உள்ளே யார் தெரியுமா? முன்பு ராஜூப் பிள்ளை தெருவில் இருக்கும்போது நம் வீட்டு மாடியில் குடியிருந்தானே ஒரு பையன் வேணு என்று? நாடகத்தில் எல்லாம் நடித்துக் கொண்டிருந்தானே? அவன். இப்போது சினிமாவில் நடிக்கிறானாம். ஏழெட்டுப் படம் இருக்காம்.

சடசடவென்று பெரிய மழையாக வந்து சர்க்கரைப் பை நனைய ஆரம்பித்தது. எனக்கு யோசிக்கவே நேரம் இல்லை. காரில் ஏறிக் கொண்டேன். காரின் உள்ளே பார்த்தால் ஒரே பிரமிப்பாக இருந்தது. புரட்யூசர் காராம் அது. டிரைவர் சீட்டுக்கும் பின் சீட்டுக்கும் சம்பந்தமே இல்லாமல் கண்ணாடித் தடுப்பு. காரின் கண்ணாடி எல்லாம் நீலம் பூசி, வெளியிலிருந்து பார்த்தால் உள் பக்கம் தெரியாதபடி இருந்தது. உள்ளே கதகதவென்று மெல்லிய நீல நிறம் உமிழும் விளக்கு. உட்காரும் இடம் எவ்வளவு அகலம் தெரியுமா?

கார் கிளம்பிற்று. ஒரே தாவலில் ரயில்வே கேட்டை அடைந்து விட்டது. 'சோ' வென்று மழை காரின் மேலே கொட்டிற்று. ரயில் கேட் மூடியிருந்தது.

''அடேடே மெயில் போகணும். பதினைந்து இருபது நிமிஷம் ஆகும் போல் இருக்கே'' என்றான் வேணு மெதுவாக.

அப்புறம்...அப்புறம்...

சில சமயங்களில் சில காரியங்கள் எதிர்பாராத விதமாக நடந்து விடுகின்றன. நான் உங்களிடம் எப்படி மன்னிப்புக் கேட்பேன்? எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறது.

ஒரு வழியாக மழை விட்டு, கேட் திறந்து, கார் வீட்டு வாசலில் வந்து நின்று நான் இறங்கி உள்ளே போனபோது அடுத்த வீட்டுக்காரர்கள், எதிர் வீட்டுக்காரர்கள் அத்தனை பேரும் வாசலில் நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். சினிமாக்காரர்களின் கார் என்று தெரியாமல் போகுமா? அதனால்தான் அவர்களில் யார் மூலமாவது உங்களுக்குத் தெரிந்து உங்கள் கோபம் நெருப்பாக எரிய ஆரம்பிக்குமுன்னால் நானே எழுதி விட்டேன்...

இன்றைக்காவது வீட்டுக்கு வருவீர்களா?

—கோமதி.''

கடிதத்தை ஒரு வழியாகப் படித்து முடித்தபோது சந்தானத்தின் உடல் எல்லாம் கொதித்தது. பற்களைக் கடித்துக் கொண்டான். உதடு கடிபட்டு ரத்தம் கசிந்தது.

கடிதத்தைக் கசக்கி எறியக் கையைத் தூக்கினான். பிறகு நினைத்துக் கொண்டு அதைப் பைக்குள் போட்டுக் கொண்டான். மேஜையில் இருந்த பைல்களை அங்கும் இங்கும் விட்டெறிந்தான்.

அன்று மேரி அலுவலகம் வரவில்லை.

மாலை ஐந்தரை மணி. அலுவலகத்தில் உள்ள எல்லோரும் வீட்டுக்குப் போயாகி

கன்னி வயசு, காதல்கொண்ட புதுசு—
அன்றுகண்ட மேனியெழில் இன்றைக்கும் நினைவிருக்கோ?



இதுபோன்ற தருணங்கள் வாழ்வில் ஒரு முறைதான் வரும். கணமே பதிவாக்குவீர். அதற்கு உதவி ஐஸோலி I—படமெடுக்கும் அமெச்சூர்களுக்குத் தொழில்—தேர்ச்சிமிக்க காமெரா.

- அக்ரோமேட் f8 லென்ஸ்
- டபுள் எக்ஸ்போஷர் லாக்
- 3 ஷட்டர் வேகநிலை செட்டிங்குகள்.
- அக்ஸெஸரி ஷூ & யூனிவர்ஸல் ஃப்ளாஷ் கான்டேக்ட் பின்.

மேலும் விவரமறிய உங்கள் ஆக்பா—கேவார்ட் விற்பனையாளரோடு தொடர்புகொள்க. மகிழ்ச்சியோடு அவர் புதிய ஐஸோலி-I காமெராவை இலவசமாக இயக்கிக் காட்டுவார்.



Agfa®

ஆக்பா ஐஸோலி-I

நினைவூட்டும்

இப்போது, யூனிவர்ஸல் ஃப்ளாஷ் கான்டாக்ட் பின் பொருத்தியது.

AGI


ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்

ரூ. 169/=

தயாரிப்பாளர்கள்:

நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா ● பம்பாய்

SIMOES/AG/22/75 TM


வெற்றிகரமாக அழுக்கைப்போக்கும்
புதிய ரம்யா
தீவிரமாகச் சுத்தப்படுத்தும்
டிடர்ஜன்ட் வில்லை
NEW
RAMYA
அழுக்குத்துணி
வெளுக்க—
பளீரென ஒளிவீச
அல்ட்ராமரீன் & பிக்மெண்ட்ஸ் லிமிடெட்
ராணிப்பேட்டை, தமிழ்நாடு
SAA/UPL 1922 R


வல்லவர் வாழ்வார்
கட்டான ஒடம்புக்குத்தான் 'கனகாபிஷேகம்'. களேச்சு விழுவானேன்?
சுதாரிச்சுக்கிட்டு எழுங்க சூரப் புலியா. சாப்பிடுங்க ஒகாஸா.
இந்தக் காலத்து டானிக் மாத்திரை. திட பலம், தெம்பு.
ஆரோக்கியம். அதுதானய்யா உங்களுக்கு
'அர்ச்சுன விருது'.
வல்லவராய் வாழ்வதற்கே
ஒகாஸா
ஆண்களுக்கு வெள்ளி நிற
மாத்திரை—
எல்லா முக்கிய மருந்துக்
கடைகளிலும் கிடைக்கும்
OKASA CO. PVT. LTD.
12K, Gunbow Street,
P. B. No. 396, Bombay 400 001.
OKASA
THE 20TH CENTURY TONIC
RESTORATIVE
OKASA CO. PVT. LTD.
BOMBAY

விட்டது. ஆத்திரம் இன்னும் தணியாத நிலையிலிருந்த சந்தானம் இன்னும் இடத்திலேயே நின்றான்.

மேரி வந்தாள். ஓடிவந்தவள் இரண்டு கைகளையும் உதறிக் கொண்டு ''நிச்சயமாகக் கடவுள் இருக்கிறார்! நீங்கள் இதற்குள் வீட்டுக்குக் கிளம்பாமல் இருக்க வேண்டுமே என்று பிரார்த்தித்துக் கொண்டே வந்தேன். என் பிரார்த்தனை வீணாகவில்லை. இன்றைக்கு ஒரு டான்ஸ். டான்ஸுக்கு வந்ததே இல்லை என்று சொன்னீங்க இல்லே? வரீங்களா? இன்றைக்குப் போகலாம்'' என்றாள்.

மேரி சொல்வது காதில் விழுந்தும் பைலைப் பார்க்கும் பாவனையில் இருந்தான் அவன்.

''உங்களுக்கு ஸ்டெப்ஸ் எல்லாம் தெரியாது இல்லையா? ஒன்றும் பரவாயில்லை. ரெண்டு டான்ஸ் ஆடினால் சரியாகி விடும். நான் சொல்லித் தரேன்...''

''நான் இன்னிக்கு டான்ஸுக்கு வரலே மேரி.''

''ஓ... அந்த நைன் யார்ட்ஸ் சாரி நினைவு வந்துட்டுதா?''

''இல்லே... எனக்கு வேறே வேலை இருக்கிறது.''

''சே... உங்களுக்கு லவ் ஸ்பிரிட்டே இல்லே. இன்னைக்கு என்னை ஸ்டீபன் அழைச்சுக்கிட்டுப் போறேன்னு கெஞ்சினான். என் காலைப் பிடிக்காத குறையாகக் கெஞ்சினான். அவனை வேணாமின்னுட்டு நீங்க வருவீங்கன்னு இங்கே வந்தேன்! இனிமே நான் போய் ஸ்டீபன் காலிலே விழுகிறதா? நானே போறேன்...''

அவன் நிமிர்ந்து பார்க்கக்கூட இல்லை.

டக் டக் என்று மேரி வெளியே நடந்தாள்.

இருவரும்

டாக்ஸி வாசலில் நின்றது. சந்தானம் இறங்கினான். எதிர் வீட்டையும் பக்கத்து வீட்டையும் ஓரக்கண்ணால் பார்த்தான். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் யாராவது ஒருவர் நின்று கொண்டு அவன் வருவதைக் கவனிப்பது தெரிந்தது.

உள்ளே போனான்.

கோமதி சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தாள்.

''காப்பி கொண்டு வரட்டுமா?''

''கொண்டு வா. அதில் ஒரு துளி - துளி பேர்தாது. ஒரு அவுன்ஸ், - விஷம் போட்டுக் கொண்டுவா.''

''வீட்டில் விஷம் ஸ்டாக் இல்லையே...''

குரலை மிக அமைதியாக வைத்துக்கொண்டு கோமதி சொன்னதைக் கேட்டு அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவளை நேராகப் பார்த்தான். ''என்ன சொன்னே, என்ன சொன்னே? அத்தனை திமிரா?''

பளீர் பளீர் என்று அவனையும் மீறி அவன் கைகள் அவளை அறைந்தன.

''விஷம் ஸ்டாக் இல்லாவிட்டால், வாசலிலே டாக்ஸி நிற்கிறது. எடுத்துக்கொண்டு வேணு வீட்டுக்குப் போ. அங்கே நிறைய வைத்திருப்பான்.''

''மேரி வீட்டிலே அது இருக்காதா?''



ஒரு அமெரிக்கர் தன் மனைவியின் சமாதி மீது மலரை வைத்தார். அருகே ஒரு ஜப்பானியர் தன் மனைவியின் சமாதி மீது சிறிது அரிசியைத் தூவினார். அதைப் பார்த்த அமெரிக்கர் கிண்டலாகக் கேட்டார்: ''உன் மனைவி வந்து சமைக்கவா போகிறாள்?''

''செல்வரே! உன் மனைவி நீ வைத்த மலரை முகர்ந்து தலையில் சூடிக்கொள்ள வரும்போது இவளும் வந்து சமைப்பாள்'' என்றார் ஜப்பானியர்.

-எம். எஸ்.

''அதைப் பற்றி எல்லாம் பேச உனக்கு அருகதை இல்லை. வாயை மூடு!''

''நான் வாயை மூடிவிடறேன். அக்கம் பக்கத்தில் எல்லாம் ஒருத்தரும் மூட மாட்டேன் என்கிறாங்களே. என்னிடமே நேரில் வந்து கேட்கிறாங்களே, 'அவள் பேரு என்னடி? கல்யாணமே செய்து கொள்ளப் போகிறாராமேடி? நீ ஒண்ணுமே சொல்லலியா, செய்யல்லியா?'ன்னு.''

''வேணு காரிலே வந்து நீ இறங்கியபோது அவுங்க ஒண்ணுமே கேட்கல்லியா? அப்போ உன் மானம் போகல்லியா?''

''யார் போனா வேணு காரிலே?''

சந்தானம் பின்வாங்கினான்.

''யார் போனது வேணு காரிலே? நிச்சயமா உங்களுக்குத் தெரியுமா? நீங்க பார்த்தீங்களா? இல்லே, பார்த்தவங்க யாராவது உங்ககிட்டே வந்து சொன்னாங்களா?''

''இதோ இருக்கே உன் கைப்பட நீயே எழுதின கடிதாக?''

''அதை நான் எழுதி அனுப்பல்லேன்னா, இன்னைக்கும் நீங்க இங்கே வந்திருக்க மாட்டீங்களே!...''

''அப்படின்னா...?''

''இதோ இருக்கு அன்னைக்கு வாங்கிண்டு வந்த சர்க்கரைப் பை. மழையில் தொப்பலாக நனைந்து சரம் சொட்டச் சொட்டக் கரைந்தது போக மிச்சம். அதை டப்பாவில் எடுத்து வைக்கக்கூட இல்லே. நீங்க பார்க்கணும்னுதான் வைச்சிருக்கேன். அப்போ, இரண்டு கைகளிலேயும் பையைத் தூக்கிண்டு வரும்போது, கட்டினவன் இப்படி விட்டுட்டுப் போனதைப் பத்தி நினைச்சிண்டே வரும்போது, ரோட்டிலே போற காரைப் பார்த்ததும் அப்படி ஏதாவது நடக்கக் கூடாதான்னு தோணித்து. அதைத்தான் எழுதினேன்...''


கோமதி குமுறிக் குமுறி அழுதாள். ''அப்படி நான் நினைத்ததே தப்புத்தான். மன்னிச்சுடுங்கோ'' என்று விம்மலுக்கிடையே கூறினாள். ''ஆனால் அப்படியெல்லாம் என்மனசு அலைபாய்கிற மாதிரி நீங்க நடந்துக்கலாமா?''

சந்தானத்தின் மனத்தில் பெரிதாக வளர்ந்திருந்த பாம்புப் புற்று ஒன்று பெரு மழையில் கரைவது போல் கரைந்தது.

பிடித்துக்கொள்ள ஆதாரமே இல்லாமல் அவன் தவித்தான்.

அவளால் கோமதியின் முகத்தைப் பார்த்துப் பேசக்கூட முடியவில்லை.


ஆகாயப் பந்தலிலே
விமானம் உயரக் கிளம்பும்போது ஒருத்தருக்கு அடி வயிற்றைக் கலக்க, சங்கடப்பட்டார். பக்கத்தில் இருந்தவர் கேட்டார் : ''இதுதான் உங்களுக்கு முதல் பயணமா, விமானத்தில் ?'' ''இல்லே, கடைசிப் பயணம்.''
விமானம் ஒரு வெளிநாட்டை நோக்கி மிக வேகமாகப் பறந்து கொண்டிருந்தபோது ஓர் இளைஞன் 'பைலட்'டின் நெஞ்சுக்கு நேரே ஒரு துப்பாக்கியைக் காட்டிச் சொன்னான் : ''மரியாதையாக விமானத்தைக் கீழ்க்குப் பக்கமாகத் திருப்புங்கள் !'' ''திருப்பாவிட்டால் என்ன செய்வாய் ?'' என்றார் பைலட். ''சீச்சீ! தர்மசங்கடமான கேள்வி கேட்டுக் குழப்பாதே ! எனக்கு இதுதான் முதல் அனுபவம் !'' என்றான் இளைஞன்.
ஏராளமான சாக்லேட்டுகளை விழுங்கி விட்டு 'ஏர்ஹோஸ்டஸ்'ஸி'டம் குறும்பாகக் கேட்டார் ஒரு மனிதர்: ''இந்த இனிப்பு வகைகளைச் சாப்பாட்டுக்கு முன் சாப்பிட வேண்டுமா ?'' ''நீங்கள் சாப்பாட்டுக்குப் பதிலாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று பதில் வந்தது.
விமானத்தில் ஏதோ சிறிய கோளாறு ஏற்பட்டிருப்பதாக விமானி அறிவித்தார் : ஒரு பட்டிக்காட்டான் சொன்னான், தன் மகனிடம், ''எலே ! முனிசாமி ! சீக்கிரம் தலையை குனிஞ்சி மறைஞ்சுக்கடா !'' என்று. ''ஏன் அப்பா ?'' என்றான் மகன். ''விமானத்தில் ஏதோ கோளாறும். நம்மை இறங்கித் தள்ளச் சொல்லுவாங்க !''
ஒரு கற்றுக்குட்டி உற்சாகத்துடன் தனியே விமானத்தில் பறந்து கொண்டிருந்தான். 'வயர்லெஸ்' மூலமாகக் கீழே இருந்தவர்களிடம், ''நான் எத்தனை அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறேன்?'' என்று கேட்டான். ''பத்தாயிரம் அடி!'' என்று சொன்னார்கள். ''அட கடவுளே !'' என்று அலறினான் அவன். ''யார் அழைப்பது ?'' என்று தலைக்கு மேலிருந்து குரல் கேட்டது.
ஒருவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு இருந்த பெண்மணியிடம் கேட்டார் : ''நான் இங்கே சிகரெட் பிடிக்கலாமா ?'' ''நீங்கள் உங்கள் வீட்டில் எப்படி இருப்பீர்களோ, அப்படியே இருக்கலாம்'' என்றாள் அந்தப் பெண்மணி பணிவுடன். அவர் பெருமூச்சுவிட்டவாறே வெளியில் எடுத்த சிகரெட்டை மறுபடியும் உள்ளே வைத்தார் !



நண்பர் ராஜுவுக்கு உலகில் ஒரே ஒரு ஆசை தான் உண்டு. அது, தம் பெயரை அடிக்கடி அச்சில் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். கதை, கட்டுரைகள், துணுக்குகள் எழுதிப் பார்த்தார். பிரசுரமாகவில்லை. 'ஆசிரியருக்குக் கடிதம்' எழுதினார். பிரசுரமாகிவிட்டது. அதிலிருந்து எல்லாப் பத்திரிகைகளுக்கும் கடிதம் எழுத ஆரம்பித்துவிட்டார். ஒரு விஷயம் அகப்பட்டால் போதும் அதை வைத்துக் கொண்டே ஏழெட்டுப் பத்திரிகைகளுக்கு எழுதி விடுவார்.

சமீபத்தில், 'ஓடுகிறாள், ஒரு பெண்' என்ற திரைப்படத்தைப் பார்த்துவிட்டு வந்தார். அன்றிரவு அவர் எழுதித் தபாலில் போட்ட கடிதங்களைப் பார்க்கலாம்.

'மாதர் மலர்' இதழ் ஆசிரியருக்கு

'ஓடுகிறாள் ஒரு பெண்' படத்தை உடனடியாகத் தடை செய்ய நீங்கள் குரல் எழுப்ப வேண்டும். வயலில் ஏர் உழும் காட்சியில், கதாநாயகன், 'ஓடு கண்ணே ஓடு, ஓடு பெண்ணே ஓடு' என்று பாடிக் கொண்டே மாட்டை ஓட்டுகிறானே. அப்படியானால் பெண்கள் மாடுகளா ?

'நவீன விவசாயி' ஆசிரியருக்கு

உலகில் பல நாடுகள் விவசாயத் துறையில் வெகுவாக முன்னேறி வருகின்றன. ஆனால் நாம் மட்டும் இன்னும் பின்தங்கி, கையில் சப்பரையுடன் வாழ்ந்து வருகிறோம். இந்த நிலையில், டிராக்டர் உழவு முறைகளைக் கேலி செய்யும் பிரசாரப் பாடல் ஒரு திரைப் படத்தில் இடம் பெற்றிருப்பது வருத்தத்துக்குரியது. 'ஓடுகிறாள் ஒரு பெண்' என்ற படத்தில் கதாநாயகன் வயலில் ஏர் உழுது கொண்டே பாடும் பாடலில், ''டிராக்டர் வாங்கினவன் திண்டாடுகிறான், பம்புபோட்டவன் பதறுகிறான், மாடு கட்டி ஏர் உழுதவன் மகிழ்கிறான், ஏற்றம் போட்டு சால் இறைத்தவன் சிரிக்கிறான்' என்ற வரிகள் உள்ளன. சென்ஸார் என்ன சார் செய்கிறார்கள் ?

'ஜீவகாருண்ய மலர்' ஆசிரியருக்கு

வாயில்லாப் பிராணிகள் சினிமாவில் நடிக்கும்போது அவைகளை என்ன கொடுமைப்படுத்தினாலும், தங்கள் ஜீவகாருண்ய சங்கம் கண்டு கொள்ளாமல் இருக்குமா ? 'ஓடுகிறாள் ஒரு பெண்' என்ற படத்தில் கதாநாயகன் ஏர் உழுகிறான். பிறகு மாட்டின் மேல் உட்கார்ந்து செல்கிறான், தன் வீட்டுக்கு. அக்காட்சியில் கூர்ந்து கவனித்தால் மாட்டின் கழுத்து நரம்புகள் புடைத்து மாடு அவதிப்படுவதைக் காணலாம். முன்பு ஒரே ஒரு ''புளிமூட்டை'' இருந்தார். இன்று நமது கதாநாயகர்கள் எல்லாரும் புளிமூட்டைகளாக இருக்கிறார்கள். இது பற்றி— அதாவது கதாநாயகர்கள் குண்டாக இருப்பதைப் பற்றி அல்ல — தக்க நடவடிக்கை எடுப்பது அவசியம்.

'தெய்வீக நெறி' ஆசிரியருக்கு

பக்தி இல்லாதவர்கள் திரைப்படம் எடுக்கட்டும். தவறில்லை. ஆனால் புராணங்களையும் இதிகாசங்களையும் அரைகுறையாகப் படித்தவர்கள் படுத்தும் பாட்டை என்னவென்று சொல்வது ? சமீபத்தில் 'ஓடுகிறாள் ஒரு பெண்' படத்தைப் பார்க்கும் துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. அதில் கதாநாயகன் ஏர் உழுதுவிட்டு மாட்டின் மேல் உட்கார்ந்து செல்கிறான் தன் வீட்டுக்கு. அப்போது, 'கந்தனுக்கு மயில் வாகனம், எந்தனுக்கு நீ வாகனம்' என்கிறான். அப்படியானால் கதாநாயகன் தன்னைப் பரமசிவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறானா ? அல்லது பரமசிவனுடைய வாகனம் ரிஷபம் என்பதை மறைக்கப் பார்க்கிறானா ? ஆத்திகர் மனம் புண்படும் இக்காட்சியை உடனடியாக நீக்க வேண்டும்.

'உழவன் பத்திரிகை' ஆசிரியருக்கு

'ஓடுகிறாள் ஒரு பெண்' படத்தில் கதாநாயகன் வயலில் ஏர் உழுமுன் ஏரை மாட்டுகிறான். ஆனால் கலப்பை முனை இல்லாத ஏராக அது இருக்கிறது. இந்தத் தவற்றைத் திருத்துவார்களா படத் தயாரிப்பாளர்கள் ? இம்மாதிரி படங்களை எடுக்குமுன் உழவுத் துறை நிபுணர்களைக் கலந்தாலோசித்து இருக்க வேண்டும்.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

தேவைகளை சொந்தமாகப் பூர்த்தி செய்வதை நாங்கள் வலியுறுத்துவது எஃகுத் தயாரிப்புத் துறையுடன் மட்டும் நிற்கவில்லை.

ஆதித்யபூரில் உள்ள எங்களது மாபெரும் பராமரிப்புத் தொழிற் கூடம் ஒன்றிலேயே நாங்கள் சிக்கலான மிஷின்களையும் துணை பாகங்களையும் சொந்தமாக உருவாக்குவதன் மூலம் இவற்றின் இறக்குமதியைத் தடுத்து ஆண்டுதோறும் தேசத்திற்காகப் பெருமதிப்புள்ள அன்னியச் செலாவணியை மீதப்படுத்துகிறோம்

ஆண்டுகள் பல உருண்டோடினும், நாங்கள் இளமை குன்றாது திறம்படச் செயல்படுவதற்கு இது ஓர் சீரிய எடுத்துக்காட்டாகும்

தேவைகளை சொந்தமாகப் பூர்த்தி செய்யும் துறையில் நாங்கள் வளருகிறோம்.

எஃகினை யொத்த உறுதியான குறிக்கோள்



டாடா ஸ்டீல்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேயா காசு

